Registered as a Newspaper in Srilanka

முஸ்லிம் குரல்

Muslim Kural صوت المسلم முஸ்லிம் கூரல்

☆ 12 செப்டம்பர் 2003 - வெள்ளிக்கிழமை ☆ 15 றஜப் - 1424 ☆ கவடு - 19 ☆ தருகை - 15 ரூபா

பக்கம் 8

முஸ்லிம் மக்கள் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப்

உயிருடன் இருந்த போது நமது மக்களுக்காகப் பேசினீர்கள்! உங்களுக்காகப் பேசுதற்கு யாருமில்லையா?

நமது மக்கள் கண்ணீருடன் கேட்கின்றனர்

இரண்டாயிரமாம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16ம் திகதி இலங்கை முஸ்லிம்களின் அரசியல் விடிவானில் இருள் கவிந்தது. சதிகாரர்கள் தமது எதிரி ஒழிந்து விட்டானென சந்தோஷம் கொண்டாடியபோது நமது பெண்கள், ஆண்கள், முதியோர், சிறியோர் என இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் தமது உன்னத தலைவனை இழந்துவிட்டோம் என ஒப்பாரி வைத்து கண்ணீர் வடித்து நின்றனர்.

இருதயத்தை கசக்கிப் பிழிந்து, செவிகளில் தீயாய் வந்து விழுந்த துன்பம் நிறைந்த அச் செய்தி பொய்த்துப் போகாதா என நமது மக்கள் பதறித் திரிந்தனர். கண்ணீரும் இறைவனிடம் கையேந்தலுமாக "முஸ்லிம் உம்மா" தனது இருப்பை இழந்து தவித்துக் கொண்டிருந்தது. குருவி கூடுகட்டுவதுபோல் சிறுகச் சிறுக கட்டியெழுப்பிய நமது அரசியல் தலைமைப் பலம், தீயில் வெந்து கருகி மடிந்து விட்டது. முஸ்லிம் சமூகமோ ஆளுமையும் தீர்க்கதரிசனமும் நெஞ்சுரமும் கொண்ட தலைவனை இழந்து மண்குதிரைகளை நம்பி தங்களது அரசியல் தலை விதியை ஒப்படைத்தது.

மீளவும், துயரும் அடக்குமுறையும் தலைவரின் மரணத்துடன் முஸ்லிம் சமூகத்தை சூழ்ந்து விட்டன. காட்டிக் கொடுப்புகளும், துரோகத் தனங்களும் பதவிகளுக்காய் கச்சைகட்டி சமூக மானத்தை கப்பலேற்றி விட்டன.

தலைவர் அஷ்ரஃபின் மூச்சை நிறுத்துவதன் மூலம் முஸ்லிம் சமூகத்தின் எதிரிகள் எதனை சாதிக்க நினைத்தனரோ அவையனைத்துக்கும் உற்ற தோழனாய் நமது அரசியல் தலைமைகள் எதிரிகளின் நோக்கங்களுக்கு துணை நின்று, முஸ்லிம் சமூகத்தை தத்தளிக்கும் நடுக்கடலில் கொண்டுபோய் நிறுத்திவிட்டன. இந்தக் கையறுநிலையில் முஸ்லிம் மக்களோ நிரப்பப்பட முடியாத மறைந்த தலைவர் அஷ்ரஃபின் அரசியல் தலைமையை, ஆளுமையை மீளவும் மீளவும் நினைத்துப் பார்க்கின்றனர். தமது உன்னத தலைவனுக்காய் இதயத்திலிருந்து கண்ணீர் விடுகின்றனர்.

தலைவரின் மரணத்திற்கான சூழ்ச்சிகாரர்களை அம்பலப்படுத்தும் பணியைச் செய்யாது, தலைவரின் மரணத்தை பெரும் அரசியல் இலாபமாகக் கொண்டு, அரசியல் பதவிகளைப் பெற்று சுகம்காணும் தலைமைகளை நோக்கி, தலைவரின் மூன்றாவது வருட சுஹதாக்கள் தினத்தில் நமது மக்கள் ஒன்று திரண்டு கேள்விகளை எழுப்ப வேண்டியுள்ளனர்.

தலைவரின் பேரில் சத்தம் ஓதுவதும் காசோலை வழங்குவதும், முத்திரை வெளியிடுவதும் கட்சியைப் புரைமைப்படுத்தும் - நமது தலைவரின் மரணத்தை மறக்கடிக்கச் செய்யும் சூழ்ச்சியும் கபடத்தனமும் கொண்ட அரசியல் நாடகம் தான்.

மரணத்திற்கான காரணத்தைக் கண்டடையப் போராடாமல், அது தொடர்பான வினாக்களை எழுப்பாமல், தலைவரின் சதி மரணம் தொடர்பாக நமது மக்களுக்குள் குவிந்துள்ள சந்தேகங்களுக்கு தகுந்த விளக்கம் அளிக்காமல், தலைவரின் மூன்றாவது மரண தினத்தையும் தமது பட்டம் பதவிகளை உறுதிப்படுத்த பகடைக்காயாக பயன்படுத்த முயற்சிக்கும் நன்றிகெட்ட நயவஞ்சகத்தனத்தை நாம் எப்படி மௌனமாக பார்த்துக் கொண்டிருப்பது?

பொறுத்திருந்து பாத்தாகிவிட்டது. சதிகாரர்களை அம்பலப்படுத்தும் எத்தனங்களை நமது அரசியல் தலைமைகள் கிடப்பில் போட்டுவிட்டன. மக்களாகிய நாம் நமது தலைவரின் மரணம் தொடர்பாக கிளர்ந்தெழுந்தால் மாத்திரமே - நமக்கு நீதி கிடைக்கும். சதிகாரர்கள் சந்திக்கு வருவார்கள். நமக்காகப் பேசி, போராடி உயிர் நீத்த நமது தலைவருக்காக நாம் பேசத் தொடங்குவோம்!

உங்களுக்கு..!

அநுரா பண்டார நாயக்க ஜே.வி.பி யில் சேர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

சந்திரிகா - ஜே.வி.பி பேச்சுவார்த்தை முறிந்த கையுடன் சந்தோசப்பட்டோர் வரிசையை நமக்குத் தெரியும். ஆனால் மிகவும் துக்கப்பட்ட: ஏமாந்து போன ஒருவர் இருக்கிறாரென்றால் அவர் சந்திரிக்காவின் தனயனான அநுரா பண்டாரநாயக்காதான். அந்தளவு விரக்தியுற்று இப்போது அதிகமாக அதிருப்தியை வெளிப்படுத்தத் தொடங்கி விட்டாராம். எஸ்.எல்.எப். பியில் இருப்பதை விட ஜே.வி.பியில் இருப்பது மேல் என வெளிப்படையாக சொல்லவும் தொடங்கி விட்டாராம். சகோதரிக்கு எதிராக சரியான வசைப்பாடல்களும் தனக்கு நெருங்கியவாகளிடம் சொல்லப்படுகிறதாம்.

ஜே.வி.பியும் அநுராவுடன் அதிக ஒட்டுறவை இப்போது பேணத் தொடங்கி உள்ளதாம். அநுராவை உள் இழுத்து விட்டால் எஸ்.எல்.எப். பியின் எதிர்காலத்தை அழித்து தங்களது இலக்கை அடைந்து விடலாம் என கணக்குப் போட்டுள்ளனராம். அநுரா கட்சி மாறுவது நடக்க முடியாத சம்பவமல்ல.

அஷ்ரஃபின் நினைவு முத்திரையும், தலைவர்களின் நெற்றியும்

மறைந்த மாமனிதர் அஷ்ரஃப் அவர்களுக்கு நினைவு முத்திரை வெளியிடுவதை பெரும் சாதனையாக காட்ட சிலர் முயற்சிக்கின்றனர் - அவர்களின் இயலாமை மீது நமது மக்கள் அனுதாபம் காட்டுவதைக் கூட விரும்பவில்லை போல் தெரிகிறது. பெரும் ஆத்திரமாக நமது மக்கள் உணர்வுகளை வெளிப்படுத்தி வருகின்றனர். எனது நண்பர் ஒருவர் என்னிடம் சொன்னார் "அஷ்ரஃப் அவர்களுக்கு வெளியிடப்படும் நினைவு முத்திரையை நமது தலைவர்களில் சிலர் நெற்றிகளில் ஒட்டி வந்து ஊர்வலம் போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை" என்கிறார். அத்துடன் விட்டாரா நண்பர் "அப்போதுதான் இக்கோமாளிகளுக்கு நமது மக்கள் கல்லால் எறியத் தொடங்குவார்கள்" என்றாரே பார்க்கலாம்.

கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபைத்தலைவர் பாதாள உலகக் கோஷ்டியினரை கூலிக்கு அமர்த்தினார்!

இலங்கை கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவரும் ஸ்ரீலங்கா டெலிகொம் தலைவருமான திலங்க சுமதிபால சில முக்கிய நபர்களைக் கொல்வதற்கு பாதாள உலகக் கோஷ்டியுடன் தொடர்பு வைத்திருந்ததை நிரூபிக்கும் வகையில் இப்போது செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஏலவே நடைபெற்ற பல்வேறு கொலை முயற்சிகளுடன் இவருக்கு தொடர்பு இருப்பதாகவும் அறிய முடிகிறது. இத்திடுக்கிடும் தகவலை தற்போது கைதாகி விசாரிக்கப்பட்டுவரும் பிரபல கேடியான மகிந்த கொடகே தெரிவித்துள்ளான். இதற்கு பெருமளவு பணம் தனக்கு தம்பிக்க அமரசிங்க என்பவரூடாக வழங்கப்பட்டதாகவும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளான்.

1998ஆம் ஆண்டு நுகேகொடையில் 'சண்டேலீடர்' பத்திரிகை ஆசிரியர் லசந்தவின் மீது நடத்தப்பட்ட கொலை முயற்சியும் ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த சஞ்சீவ என்பவரின் படுகொலைக்கும் சுமதிபாலவே பிரதான சூத்திரதாரி என கைது செய்யப்பட்டுள்ள கொடகேயின் வாக்குமூலத்திலிருந்து தெரியவருகிறது. ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த சஞ்சீவனின் கொலைக்கு 90 இலட்சம் ரூபா பெறப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

இலஞ்சத் தினைக்களத்தில் முறைப்பாடுகள் தேக்கம்!

இலஞ்ச ஆணைக்குழுவின் தலைமைப் பதவியில் உள்ள ஒரு வெற்றிடம் நிரப்பப்படாமையால், இலஞ்ச ஆணைக்குழு செயற்பட முடியாததாக உள்ளது. இதனால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் தேக்கமுற்றுக் காணப்படுகின்றன.

இந்த அசமந்த நிலைமையால் இலஞ்சம் தொடர்பாக நீதிமன்றங்களில் வழக்குத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் காட்டாற்று வெள்ளம்போல் அரச திணைக்களங்களில் இலஞ்சம், ஊழல் தலைவிரித்தாடுகிறது. இவ்வெற்றிடத்தை நிரப்ப இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அமெரிக்காவின் விளையாட்டு!

ஈரான் இரகசியமாக அணு ஆயுதத்தை உற்பத்தி செய்கின்றது என்ற அச்சத்தை தவிர்ப்பதற்காக அதன் ஆயுத உற்பத்தி தளங்களை உடனடியாகவும் முழுமையாகவும் பரிசீலனை செய்ய அனுமதிக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அணு ஆயுத மேற்பார்வை நிலையத் தலைவர் வேண்டியுள்ளார். இவ்வழுத்தம் ஈரானுக்குத் தலையிடியை ஏற்படுத்தும் என்பது வெளிப் படை. ஈரான் மீது அமெரிக்கா இராணுவ ரீதியிலான நடவடிக்கை மேற்கொள்ளும் என இப்போது எதிர்பார்க்கப்படாவிடினும். 1981ம் ஆண்டில் ஈராக்கின் ஒஸிராக் அணு ஆயுதத் தளம் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதை அமெரிக்கா வெளிப்படையாக அன்று போற்றியமை நினைவு கூறத்தக்கது.

இது தொடர்பாக சாதகமான முறையில் ஒத்துழையாவிடின் ஈரானுடனான பொருளாதாரத் தொடர்புகளை மறு பரிசீலனை செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்கிறது வியன்னா தலைமையகம். இஸ்ரேலும், அமெரிக்காவும் ஈரானுக்கெதிராகப் பல ஆண்டுகளாக மேற்கொண்டு வந்த குற்றச்சாட்டுகளின் விளைவே இக்கோரிக்கை என அபிப்பிராயம் கூறப்படுகிறது. இதன் பின்னால் தீவிரமாக அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுச்சதி உள்ளது என அரபுலகம் குற்றம் சாட்டுகின்றது.

சந்திரிகா என்ன செய்யப் போகிறார்?

அரசியல் சூழ்நிலைக் கைதியாக சந்திரிகா இன்று மாறிவிட்டார். பொது முன்னணிக்கும் ஜே.வி.பிக்குமிடையேயான பேச்சுவார்த்தை முறிவடைந்த கையுடன், சந்திரிகாவின் நிலைமை மிக மோசமான பின்னடைவுக்கு உள்ளாகி விட்டது. ஜே.வி.பியின் மாற்ற முடியாத அரசியல் நிலைப்பாடான "அதிகாரப் பகிர்வை ஏற்காத போக்கே" இந்த பேச்சுவார்த்தை முறிவுக்கு பிரதானமான காரணமாக இருந்தது.

சந்திரிகா - ஜே.வி.பி கூட்டை ஏற்படுத்தி பாராளுமன்றத்தைக் கலைக்காது தனக்கு ஆதரவான ஒரு புதிய அமைச்சரவையை ஏற்படுத்துவதே சந்திரிக்காவின் திட்டமாகவிருந்தது. அத்திட்டத்தை சாத்தியப்படுத்துவதற்கான வாய்ப்பை இல்லாமலாக்கி விட்டன இப்பேச்சுவார்த்தை முறிவு.

இந்நிலையில் இன்று சந்திரிகாவுக்குள்ள ஒரே வழி தோதலை நோக்கிப் போவதாகவே உள்ளது. ஜே.வி.பியும் பாராளுமன்றக் கலைப்பையே அதிகம் வலியுறுத்தி வருகிறது. சந்திரிக்கா இப்போது தனது அதிகாரத்தின் இறுதிக்கட்டத்தில் விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்டு விட்டார். இதிலிருந்து மீள்வதற்கு சந்திரிகா ஏதாவது செய்ய வேண்டும். அது எதுவாக இருக்கும் என்பதே அரசியல் அரங்கில் இன்றைய பிரதான கேள்வியாக உள்ளது.

முன்பு ஜே.வி.பியையும் ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தி உறுப்பினர்களையும் ஒரு சில முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளையும் நம்பி இருந்த சந்திரிகா இப்போது அதிகமாக சோதிடர்களை நம்பி தனது அரசியல் எதிர்காலம் பற்றிய கணிப்பில் ஈடுபட்டு ள்ளார்.

மக்களின் பணத்தில் ஆடம்பர வாழ்க்கை!

நாட்டில் ஏற்பட்டுள்ள அதிகரித்த நெல் விளைச்சலை நாட்டின் நன்மைக்குப் பயன்படுத்த அரசாங்கத்தால் முடியவில்லை. கல்விக்காக மூன்று அமைச்சர்கள் இருந்தும் நாட்டின் கல்வி நிலைமை சீரில்லை. ஆசிரியர் பற்றாக்குறை தலைவிரித்தாடுகிறது. நாட்டு மக்களின் பாதுகாப்பு நிலை கவலைக்கிடமாக மாறி உள்ளது.

சுகாதாரத் துறையில் வேலை நிறுத்தங்களும் மக்களைக் கொள்ளையடிக்கும் தனியார் ஆஸ்பத்திரிகளும் பல்கிப் பெருகிவிட்டன. போக்குவரத்துத் துறை மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டது. தொடர்ந்தும் எரிபொருட்களின் விலை அதிகரித்த வண்ணமே உள்ளது. வாழ்க்கைச் செலவு "ரேஸ் குதிரை போல்" வேகமாக குதியாட்டம் போடுகிறது. தொழிலாளர்கள் மிகக் குறைந்த ஊதியத்தைப் பெற நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் குதிக்கத் தொடங்கிவிட்டன. ஊழியர்கள் வேலைக் குறைப்பு செய்யப்படுகின்றனர். நாட்டில் வேலையில்லாதோர் தொகை பெருமளவில் அதிகரித்து வருகின்றன. வறுமை, ஊழல், கொலை, கடத்தல், போதைவஸ்துப் பாவனை, பாலியல் தொழில் பல்கிப் பெருகுகின்றது. ஆனால் சூழ்ச்சியும் கபடத்தனமும் கொண்ட அரசியல் நாடகம் தான்.

நமது நாட்டிலோ அரசியல்வாதிகளின் தொகை அதிகமாகிவிட்டது. கிராம மட்டத்திலிருந்து, பாராளுமன்றம் வரை அநேகர் அரசியல்வாதியாகவே வர ஆசைப் படும் காலம் வந்துவிட்டது போல் தெரிகிறது. இது ஏன்? மக்கள் துன்பத்திலிருக்கும் போது அரசியல்வாதிகளோ சொர்க்கத்தில் இருப்பார்கள் என்ற நம்பிக்கைதான்!

அரசியல்வாதிகளின் ஆடம்பர செலவுக்காக நாளொன்றுக்கு பலகோடிகள் நமது மக்களின் பணம் செலவிடப்படுகிறது. பாராளுமன்றத்தின் ஒரு நாள் அமர்விற்கான செலவு 26 இலட்சம் ரூபாவாம். அமைச்சர்களின் சொகுசு பங்களாவை, பனியாட்களை பராமரிப்பதற்கு ஆண்டொன்றுக்கு 40 கோடி ரூபா செலவிட வேண்டி உள்ளதாம். அனைத்தும் இலவசம். உணவுப் பொருளிலிருந்து உல்லாச வாழ்க்கை வரை இவர்களுக்கு... வியப்பாக இருக்கிறதா?

(யாவும் உண்மை)

இலங்கை முஸ்லிம்களின் சொந்தக்குரல்! சுதந்திரக்குரல்!! ஆதரவு தாருங்கள், வாங்கிப் படியுங்கள், எழுதுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களிடமிருந்து மனுக்கள்...

நடவடிக்கைக்காக...

உலமாக்களுக்கான அடையாள அட்டை வெறும் கண்துடைப்பா?

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவும் இணைந்து இலங்கை உலமாக்களுக்கு முஸ்லிம் சமய கலாசார திணைக்க ளத்தால் ஓர் அடையாள அட்டை வழங்க வேண்டும் என்ற தீர்மானம் 2001ம் ஆண்டு எடுக்கப்பட்டது.

இதற்கேற்ப, பிரதேச மட்டத்தில் உலமாக்க ளின் தகவல்களும் பெறப்பட்டன. உலமாக் கள் கலாசார திணைக்களத்தால் விநியோ கிக்கப்பட்ட விண்ணப்ப டிவங்களை பூர்த்தி செய்து, தமது பிரதேச செயலகங்கள் ஊடாக அனுப்பிவைத்தனர்.

இரண்டு வருடங்கள் பூர்த்தியாகியும், உல மாக்களுக்கான அடையாள அட்டையை முஸ். பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வழங்க எவ்வித நடவடிக் கையும் மேற்கொள் ளவில்லை.

சென்ற ஆண்டு நடைபெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் ஓர் அங்கமாக தேர்ந்தெடுக்கப்பட்ட சில உலமாக்களுக்கு மட்டும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் அடையாள அட்டைகளை வழங்கினார். இதுவும் மூத்த உலமாக்கள் பலரைப் புறக்கணித்து விட்டு, சில "வேண்டப்பட்டவர்"களும் இந்நிகழ்வில் அடையாள அட்டை பெற தோ்வு செய்யப்ப ட்டிருந்தமையும் இங்கு சுட்டிக்காட்ட விரும் புகின்றேன்.

தற்போது முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளராக கடமை புரியும் அஷ்வெய்க் அமீர் (நளீமி) இந்த விடயத்தில் கூடிய கரிசனை எடுத்து உல மாக்களுக்கான அடையாள அட்டைகளை துரிதமாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சகல உலமாக்கள் சார்பாக வும் வேண்டிக் கொள்கின்றேன்.

-மௌலவி. எஸ்.எச். அறபாத் - ஸஹ்வி

அதிகரித்த வீதித் தடுப்பும் (Hump) பாதை சீர் கேடும்

எமது பிரதேசங்களிலே அண்மைக்கால மாக அதிகரித்த வீதித்தடுப்புக்களும், பாதை சீர்கேடுகளும் வாகனங்களில் செல்வோருக்கு பல்வேறு சிரமங்களைக் கொடு த்து வருகிற து. கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரிக்கு முன்பாக மூன்று வீதித்தடுப்புகள் அமைக்க ப்பட்டுள்ளன. அதோடு மட்டும் நின்று விடா மல் அதற்குப் பக்கத்தில் ஒரிடத்திலே வீதி பிளக்கப்பட்டுள்ளது. ஆகமொத்தத்தில் நான்கு தடுப்புகள் அவ்விடத்தில் காணப்படு கின்றன.

இது விடயமாக உரியவர்கள் உடனே தலையிட்டு தடுப்புக்களின் எண் ணிக்கை யைக் குறைக்க வேண்டும். அதே வேளை சாய்ந்தமருது கிராமத்தின் அநேக மான வீதிகள் கொத்தும் குறையுமாக காணப்படு கின்றன. சில பாதைகள் மணல் மேடாகக் காட்சியளிக்கிறது. இன்னும் சில குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. இவற்றை யாரும் கண்டு கொள்வதாகத் தெரியவி ல்லை. ஆனால் தேர்தல் காலங்களில் வாக்கு வேட்டைக்காக மக்களின் முன் தோன்றுவார்கள். தேர்தல் முடிந்ததும் அவர்களின் தரிசிப் புக்களும் நின்று விடும். இவ்வாறான பாதைகளால் பிரயா ணம் செய்யும் மக் கள் சுவாசம் சம்பந் தமான நோய்களு க்கு ஆட்படுகிறார்கள். சாய்ந்தமருது கல்யாண வீதி ஒரு முக்கி யமான வீதி. கல்முனை சாஹிறாக் கல் லூரிக்கு மாணவர்கள் அப்பாதையா லேயே செல்ல வேண்டும். ஆனால் அந் தப் பாதையின் நிலை இன்று மிகவும் மோசமாகக் காணப்படுகிறது. வீட்டு க்குள் இருக்கின்ற சுப்பை. கூழங்கள் தெருவுக்கு வருகின்றது. நகர சபையும் இது விடயத்தில் கூடுதல் சிரத்தை எடுப்பதாக தெரியவில்லை. எல்லாம் புதிய சட்ட திட்டங்கள் செய்த கைங்கரியமே.

முஹம்மட் இம்தி, சாய்ந்தமருது

கவனக் குறைவால் உயிர்ப் பலிகள்

கல்முனை – தெற்கு அஷ்ர:ப் ஞாபகர்த்த வைத்தியசாலையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்படுகின்ற தாய்மார் மரணிக்கின்ற நிகழ்வுகள் அதிகரித்து வருகின்றன. அண்மையில் அக்கரைப்பற்றைச் சேர்ந்த மஹ்புறா (டீச்சர்) எனும் பெண் தனது இரண்டாவது பிரசவத்திற்காகச் சென்றபோது அதிக இரத்தப் பெருக்குள் காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்படுவதற்கு முன்னரே உயிர் நீத்திருக்கிறார். தான் தப்புவதற்காக உயிரற்ற சடலமே அம்புலன்ஸ் வண்டியில் அனுப்பப்பட்டுள்ளது. அத்துடன் அட்டாளைச்சேனை இஹ்சான் ஆசிரியரின் மனைவியையும் இதேவிதமாக இரத்தப்போக்கினால் மரணித்துள்ளார். மேலும் அக்கரைப்பற்று 06ம் குறிச்சியைச் சேர்ந்த ஒருவரும் 2003-05-31ம் திகதி முதலாம் குறிச்சியைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தாயும் மரணித்துள்ளார். திட்டமிட்ட சதி நடவடிக்கையில் சம்பந்தப்பட்ட வைத்தியர் இறங்கியுள்ளாரா என சந்தேகிக்க வேண்டியுள்ளது.

"எந்தப் புற்றில் எந்தப் பாம்பு உள்ளதோ?"

எம். ஏ. மகுறூன் நிசா, அக்கரைப்பற்று

வாய்ச் சொல்லில் வீரரடி

மருதமுனைக் கடற்கரை வீதி புதிதாகத் தார் வீதியாகத் தரமுயர்த்தப்பட்டது. பெருந்தெருக்கள் அமைச்சின் 20 இலட்ச ரூபா நிதி ஒதுக்கீட்டில் அந்த அமைச்சாலேயே ஆரம்பிக்கப்பட்டு வேலைகளும் முடியும் தறுவாயில் உள்ளன. இந்த வேலைகளுக்கான ஒப்பந்தம் ஒரு சமூக சேவை அமைப்பிடம் வழங்கப்பட்டது. பின் அந்த அமைப்பால் தனிப்பட்ட ஒரு நபருக்கு 10% வீத கொமிஷனுக்கு (தரகு) விற்கப்பட்டது. 3% வீதம் சமூக சேவை அமைப்பிற்கு மீதி மாற்று அணியினரின் அதிகாரம் பெற்ற உள்ளூர் அரசியல் முக்கியஸ்தர்களின் இதர செலவுகளுக்கு (விழா, வரவேற்பு) அமைச்சர்களின், பாராளுமன்ற உறுப்பினர்களின் புகழ்ச்சிகளுக்காக செலவு செய்ய நிதி யார் வழங்குவது! 'புகழ்ச்சிக்குரியவன் அல்லாஹ்' மேடைப் பேச்சுக்களில் மட்டும்.

வண்ணத்துப் பூச்சி, மருதமுனை.

சுவதாக்களின் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியவர்கள்

வீர மரணமடைந்த சுஹதாக்களின் விபரங்களை வெளிப்படுத்துவதில் முஸ்லிம் குரல் தாராளமான பங்களிப்பைச் செய்திருந்தது. அந்த வகையில் திருகோணமலை சுஹதாக்களின் எனும் வரிசையில் சுஹதாக்கள் பட்டியலில் 20.07.1997 ஆம் ஆண்டில் படுகொலை செய்யப்பட்ட கீழ் கண்டவர்களின் விபரமும் இணைக்கப்படல் வேண்டும்.

திருகோணமலைக்கும், இறக்கக்கண்டிக்குமிடையிலான பாதையில் மர்ஹூம் எம்.ஈ.எச். மஹ்ரூப், அவரது மெய்ப்பாதுகாவலர் நஜிமுதீன், சாரதி மன்சூர் நண்பர்களான உதுமான், பாடசாலை அதிபர், சாரதியின் மகன் 3 வயதுச் சிறுவன் இவர்களை சுஹதாக்கள் வரிசையில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

தகவல்

ஏ.எம். கமர்தீன், திருகோணமலை

சீறும் நெருப்பு

பத்திரிகை உலகில் இன்று தணி இடத்தைப் பிடித்த முஸ்லிம் குரல் பத்திரிகை ஒவ்வொரு முஸ்லிமின் கைகளிலும் இல்லத்திலும் இருக்க வேண்டியதும் படிக்க வேண்டியதும் ஆகும். முஸ்லிம் குரல் பத்திரிகை வெளிவருவது. எங்கள் கிராமமான காஞ்கேயனோடை கிராமத்தில் இன்றுதான் பல பேருக்குத் தெரிந்தது.

இன்று முஸ்லிம்களுக்கு நடக்கும் அநீதிகளை ஒழித்து மறைத்து தனிக்கை செய்யப்பட்டு வரும் காலத்தில் முஸ்லிம் குரல் தெட்டத் தெளிவாக ஒழிவு மறைவின்றி வெளிக்காட்டுகிறது.

எந்த ஊரில் எது நடந்தாலும் சீறும் நெருப்பாக சீறி வருகிறது விடயங்கள். உனது சேவை தொடரட்டும். முஸ்லிம் குரல் படிக்கும் ஆயிரக்கணக்கான மக்களில் நானும் ஒருவன் உன் மூசுக் காற்றை உலக முஸ்லிம்கள் அனைவரும் சுவாசிக்கட்டும்.

சே. மு. முபயிதீன்
காஞ்கேயனோடை - 13

ஒரு சகாப்தம் சமாதியானது

நம் உரிமைக் குரல் ஓய்ந்து விட்டது.
கிழக்கின் சூரியன் அஸ்தமாகி விட்டது.
சமாதானப் புறாவொன்று
இறப்போடு சங்கமித்து விட்டது.
அஷ்ரஃப் என்ற மனித நேயம்
அமைதியாகி விட்டது.

அழுக் கண்ணீரின்றி
கண்கள் கண்ணீரை நிறுத்திக் கொண்டன
சொல்லி அழ வார்த்தையின்றி
உதடுகள் இறுகிக் கொண்டன
வதனங்கள் சோக பூங்காவனமாகி விட்டன
பெயர் சொல்லத் தெரியாத
உணர்ச்சிப் பாய்களில்
உன் பாசறைப் போராளிகள்
உறங்கிக் கிடக்கின்றனர்!

இந்த வானம்
இந்த பூமி
இந்த காற்று
ஏன் இந்த இயற்கையே
உனக்காக
கண்ணீர் சிந்தியிருக்க வேண்டும்.

உன் பிரிவால்
மக்கள் படும் வேதனையிருக்கிறதே
அது
பெண்களுக்கு நேரும் பிரசவ வேதனையை
விடவும் அதிகமானது!

அரசியல் வழி தெரியா
தரிசு சமுதாயத்தில்
வித்தாய் வீழ்ந்து
மரமாய் வளர்ந்து
விருட்சமாய் நிழல் தந்து
கனிசமான உரிமைக் கனிகளையும்
பெற்றுத் தந்து
இந்த மண்ணையும் மக்களையும் விட்டு
அமைதியாய் அமைதியாகி விட்டாய்!

தன் முதுகில்
ஒரு சமுதாயத்தின்
சுமைகளைச் சுமந்து கொண்டாய்
அதற்காக
பல பகல்களை இரவுகளாகவும்,
இரவுகளை பகல்களாகவும் மாற்றினாய்!

தலைவா
உந்தன்
ஒவ்வொரு வினாடித் துளியிலும்
ஒவ்வொரு நிமிடத் துளியிலும்
ஒவ்வொரு மணித் துளியிலும்
நீ சிந்தித்தவைகள்
நீ மொழிந்தவைகள்
நீ எழுதியவைகள்
நீ செய்தவைகள்
எல்லாமே
இந்த சமுதாயத்தின்
நலனுக்காகவேதான்
அதை
சமுதாயம் மறக்காது, மறவாது.

பல சகாப்தங்களில் செய்ய வேண்டியதை
ஒரு சகாப்தத்தில் செய்து முடித்தாய்
பல தலைவர்கள் செய்ய வேண்டியதை
ஒரே தலைவனாயிருந்து செய்து காட்டினாய்
அரசியல் அநாதைச் சமுதாயம் –
என்ற அவப் பெயரிலிருந்தும்
விடுதலையளித்தாய்
இன்னும் எத்தனையோ
அடைய நினைத்தாய்
அத்தனையையும் நிறைவேறும் முன்னமே
நீ மறைந்தாய்

உன்
ஆசைகள் கனவுகள் – எல்லாமே
இந்த நாட்டின் சமாதானம்
இந்த சமுதாயத்தின் ஒற்றுமை
அவை
நிறைவேற வேண்டும்
அவற்றால் – உன்
ஆத்மா சாந்தியடைய வேண்டும்.

இந்நாடு
உன்னை மறக்காது
இந்த சமுதாயம்
உன்னை மறவாது
அரசியல் வரலாறு
உன்னை ஞாபகப்படுத்தும்.
சகாப்தங்கள் என்றும் நினைவு படுத்தும்.

தலைவா
உன் சமாதியாகும் சகாப்தத்திலிருந்து
புதியதோர் சகாப்தம் உதயமாக வேண்டும்.
உந்தன்
அரசியல் பணிகள் தொடரப்பட வேண்டும்.
உன் அரசியல் பாசறை சீட்கள்
விழிமூடி குருட்களாய் இருக்கும்
நம்பிக்கைத் துரோகிகளை துரத்தி
நீ காட்டிய பாதையில் சென்று
சமுதாயத்தின் உரிமைகளைப்
பெற்றிட வேண்டும்.

இறைவா
அவர்
பாவங்களை
மன்னித்து விடுவாயாக.
நற் செயல்களை ஏற்றுக் கொள்வாயாக.
மண்ணறையை பிரகாசிக்கச் செய்வாயாக.
ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும்
உயர்ந்த சுவர்க்கத்தை கொடுத்திடுவாயாக.

-முனைபூரான்

அதிகரித்து வரும் குற்றங்களைப் பொலிஸினால் தடுக்க முயுமா?

இலங்கையில் வருடாந்தம் குறைந்தது 50,000 குற்றச்செயல்கள் இடம்பெறுவதாக பொலிஸ் நிலைய குற்றவியல் பிரிவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இடம்பெறும் குற்றச்செயல்களில் மனிதப் படுகொலை, கொள்ளை, கொலை முயற்சி, ஆயுதங்களை வைத்திருந்து பிறருக்கு தொந்தரவு செய்தல், சுற்பழிப்பு போன்ற கொடிய குற்றச் செயல்கள் 50 வீதத்துக்கும் அதிகமாக இழைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் குற்றவியல் பிரிவினால் வெளியிடப்படும் தகவல்கள் இலங்கை பூராவும் உள்ள பொலிஸ் நிலையப் பதிவுப் புத்தகங்களில் பதியப்படுகின்ற குற்றச்செயல்களை மாத்திரம் வைத்து வெளியிடப்படுகின்றன. பதிவுப் புத்தகங்களில் பதியப்படாத, பொலிஸில் முறையிடப்படாத ஆயிரக்கணக்கான குற்றங்கள் இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. அந்த வகையில் பதியப்படாத குற்றங்களைக் கணக்கிட்டால் இத்தொகை இரட்டிப்பாகவும் வாய்ப்புள்ளது. இந்த வகையில் வருடாந்தம் பதியப்படும், பதியப்படாத குற்றச் செயல்கள் இரண்டு இலட்சத்தைவிடவும் அதிகமாகும்.

1988-89களின் பின்னரே சிவில் சமூகத்தில் குற்றச் செயல்கள் துரித வேகத்தில் அதிகரிக்க ஆரம்பித்தது என குறிப்பிட்டால் அதில் தவறு கிடையாது. இதற்கு அறிக்கையும் தக்க சான்றாக உள்ளது.

அரசியல்வாதிகளுடனான தொடர்பு, பொலிஸ் குறிப்பிட்ட பொறுப்பதிகாரிகளின் உதவி, நவீன ரக ஆயுதங்கள் குற்றவாளிகளுக்குக் கிடைக்கப் பெறுகின்றமை போன்ற காரணிகள் குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கு ஏதுவாக அமைகின்றன. என்றாலும் தொடர்ச்சியாக நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் குற்றச் செயல்களைப் பொலிஸினால் தடுத்து நிறுத்த முடியாது உள்ளது. இந்நிலையில் எதுவுமே அறியாத அப்பாவிகளைப் போன்று அரசியல்வாதிகளும் பொலிஸ் நிலைய அதிகாரிகளும் தமமைக் காணபீக்க முயல்வது நகைப் புக்கிடமாக மாறியுள்ளது. பொலிஸ் அதிகாரிகள் தமது பதவிகளைப் பாதுகாத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டு வரு வாதாகத் தெரிய வருகிறது. இதற் கான குற்றச் செயல்களைக் குறைக் கும் முயற்சியின் உச்சக்கட்ட முயற்சி யாக தமது பொலிஸ் பிரிவுக்குள் இடம் பெறும் குற்றங்களைக் குறைவாகப் பதிவு செய்ய வேண்டும் எனவும் மேற் கொண்டு முறைப்பாடு செய்கின்ற குற் றச் செயல்களை கிடைக்கப் பெறுகின்ற தகவல்களை போலிப் புத்தகங் களில் பதிவதற்கான நாடகங்களும் கச்சிதமாக அரங்கேறியுள்ளன.

இத்தகை போலிப் பதிவுப் புத்தகங்கள் இலங்கையில் உள்ள பல பொலிஸ் நிலையங்களில் பயன்படுத்தப்படுவதாக பொலிஸ் வட்டாரங்கள் மூலமான தகவல்கள் தெரிவிக்கின்றன. இத்தகைய போலிப் பதிவுப் புத்தகங்களில் பதிவு செய்யப்படுகின்ற குற்றச் செயல்கள் உயர் அதிகாரிகளின் கவனத்திற்கோ, குற்றப் புலனாய்வுப் பரிவின் கவனத்திற்கோ இதுவரை கொண்டு வரப்பட வில்லை எனவும் வருடாந்த அறிக்கையில் இவைகள் உட்படுத்தப்படுவ தில்லை. எனவும் குறிப்பிடப்படுகிறது.

இலங்கை முஸ்லிம்களின் கல்வி!

இலங்கை முஸ்லிம்களின் கல்வி நிலை பற்றித் தங்களது பத்திரிகையில் வெளியான கட்டுரை ஒன்றினைப் படித்ததன் பின்னர் இதனை எழுத முற்பட்டேன். இலங்கை முஸ்லிம்களில் விஷேடமாகக் கொழும்பு மாவட்ட முஸ்லிம் சிறார்களின் கல்வி நிலை படுமோசமடைந்துள்ளது பற்றி 1968/1969 ஆண்டளவில் அப் போதைய ஐ.தே.க. அரசின் பிரதி சபாநாயகராக இருந்த சேர் ராஸிக் பரீட் எம்.பி. அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை நினைவு கூரத்தக்கது.

34 ஆண்டுகளின் பின் இன்று கூட நிலமை அவ்வாறே உள்ளது என்பது தெளிவு. அன்னாரது உரையில் கொழும்பு மாவட்டத்தில் முஸ்லிம் சிறார்களின் கல்வி நிலை மிகவும் வீழ்ச்சியான/பின்தங்கிய நிலையில் உள்ளதென்றும் அதனை விருத்தியடையச் செய்ய அரசாங்கம் உட்பட அனைவரும் கவனஞ் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அதன் பின்னர் ராசீக் பரீட் அவர்களுக்கு நடந்தது என்பதை அறிந்தால் எவரும் ஆத்திரப்படாமல் இருக்க முடியாது. அன்னாரது கோரிக்கைக்குச் சாதக மான நடவடிக்கை எடுக்கப்படுவதற்குப் பதிலாக சேர் ராசீக் பரீட்டை இந்நாட்டில் இருந்து வெளிநாடொன்றிற்கு தூது வராக செல்ல ஏற்பாடு செய்து விட்டனர். சூழ்ச்சி செய்து விட்டனர் என்றே கூறப்பட வேண்டும்.

இலங்கையின் தூதுவராக பாகிஸ் தானுக்கு அனுப்பப்பட்டார். இத்தகைய பதவி சாதாரண மக்களுக்குப் பெரும் ஒன்றாகத் தோன்றலாம். ஆனால் பல வகையிலும் இந்நாட்டு முஸ்லிம் மக்களுக்காகக் குரல் எழுப்பிச் சேவைக ளையும் புரிந்து வந்த அன்னாரை இவ்வாறு அனுப்பியமை முஸ்லிம் மக்களுக்குச் செய்த திட்டமிட்ட சதியாகும்.

அன்னாரது அரசியல், சமூக வாழ்க்கை அத்துடன் முற்றுப் பெற்று விட்டது. சுமார் 33 ஆண்டுகள் கழிந்த பின்னர் இன்னமும் கொழும்பு மாவட்ட முஸ்லிம் சிறார்களின் கல்வி நிலை பற்றிக் கதறிக் கொண்டிருக்கின்றோம். பிற மாவட்டங்களிற்கூட எம்மவர்க்குக் கல்வித்துறையில் உள்ள எண்ணற்ற குறைபாடுகளையிட்டு வளங்கள் வழங்கப்படாமையிட்டு நாம் அங்க லாய்க்கிறோம், குறை கூறுகின்றோம்.

இதுபற்றி இக்காலத் தலைவர்களும் பரம்பரையினரும் நன்கு சிந்தித்து வீழ்ச்சியில் இருந்து சமூகத்தைப் பாதுகாப்பதற்கான சகல நடவடிக் கைகளிலும் குறைவின்றிக் கரிசனை காட்டிச் செயற்படுதல் வேண்டும்.

முஹம்மத் மதனி
மாளிகாவத்தை, கொழும்பு 10.

எனது பெயரில் பிரசுரிக்கப்பட்ட செய்தி தொடர்பாக!

கடந்த 06 செப்டம்பர் 2003 வெள்ளிக்கிழமையன்று வெளியான முஸ்லிம் குரல் பத்திரிகையின் சுவடு 18ல் என்னு பெயரில் 'புத்தளம் சபை சர்வாதிகாரப் போக்கிற்கு உட்பட்டது, என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்ட செய்தியை வாசித்து அதிர்ச்சியடைந்தேன். எனது பெயரையும் பட்டத்தையும் பயன்படுத்தி உங்கள் பத்திரிகையில் எமது அரசியல்வாதிகளில் ஒருவரான ஜனாப் K.A. பாயிஸ் அவர்களுக்கு எதிராக அபாண்டங்களை எழுதியிருப்பதையிட்டு எனது வருத்தத்தையும், கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இது போன்ற செய்திகளின் மூலம் எனது கௌரவத்திற்கும், நம்பகத்தன்மைக்கும் ஏற்பட்டுள்ள களங்கத்திற்கு 'முஸ்லிம் குரலே' பொறுப்பேற்க வேண்டும் அத்தோடு இதன் காரணமாக எனக்கோ அல்லது எமது ஊரிலோ ஏதாவது விபரீதங்கள் ஏற்பட்டால் அதற்கு தாங்களே வகை சொல்லியாக வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

M.N.M. நத்வி (சட்டத்தரணி) 55, மரைக்கார் வீதி, புத்தளம்.

அசௌகரியத்துக்த வருந்துகிறோம்!

முஸ்லிம் குரல் இதழ் 19இல் 2ம் பக்கத்தில் வெளியான புத்தளம் நகரசபை தொடர்பான செய்தி எமக்கு ஜனாப் எம்.என்.எம். நத்வி அவர்களின் கடிதத் தலைப்பின் கீழ் பதவி இலச்சினையுடன் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அவற்றை ஆதாரமாகக் கொண்டே அச்செய்தி பிரசுரிக்கப்பட்டது.

பத்திரிகை வெளிவந்ததுடன் ஜனாப் நத்வி அவர்கள் இச்செய்தியை தான் எழுதவில்லை என எமக்கு தொலைபேசி மூலமும், எழுத்து மூலமாகவும் அறியத்தந்தார் – ஆகவே அச்செய்தி தொடர்பாக ஏற்பட்ட அசௌகரியத்திற்கும் பாதிப்புக்கும் – சம்பந்தப்பட்டவர்களான ஜனாப் K.A. பாயிஸ், எம்.என்.எம். நத்வி ஆகிய இருவரிடமும் எமது நிர்வாகம் மனனிப்பைக் கோருகிறது.

தொடர்ந்தும் புத்தளத்திலிருந்து புத்தளம் நகர சபை நிர்வாகம் தொடர்பாகவும் ஜனாப் K.A. பாயிஸ் தொடர்பாகவும் பலவேறு கருத்துக்களை வந்து கொண்டிருக்கின்றன. அவற்றை நாம் பிரசுரிப்பதாயின் தயவு செய்து தங்களது முழு விபரங்களையும் எமக்கு அனுப்பி வைக்கவும். மீள உறுதிப்படுத்தியே செய்தி பிரசுரிக்கப்படும் எனபதையும் புத்தளம் மக்களுக்கு தெரிவிக்கிறோம்!

நிர்வாகம்
முஸ்லிம் குரல்

முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பங்கம் ஏற்படாமல் இருக்க

நமக்கான பத்திரி கைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத் திரிகையை தொடர்ச் சியாக வெளிக்கொணர முடியும்! சந்தாதாரர்களாக சேருங்கள்! சகோதர சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

3 மாதங்கள் - (12 இதழ்கள்) - 180/-
6 மாதங்கள் - (24 இதழ்கள்)- 360/-
1 வருடம் - (48 இதழ்கள்) - 720/-

சந்தா விபரம்!

(தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)

காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பி வைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசுக் கட்டளையாக அனுப்புவதாக இருந்தால் Muslim Kural Publiction Slave Island Post office எனக் குறிப்பிடவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களுக்குள் ஆயுதக் குழுக்கள் எதை நோக்கிய பிரச்சார யுத்தம்?

என்றுமில்லாதவாறு மிக அண்மிய காலப்பகுதியில் முஸ்லிம்களுக்குள் ஆயுதக் குழுக்கள் என்கிற பிரச்சாரம் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இப்பிரச்சாரத்தை தீவிரமாக முடக்கி விட்டிருப்பவர்கள் இப் பிரச்சாரத்தின் ஊடாக தங்களது இலக்கை நோக்கி ஓரளவு நகர்ந்து விட்டனர் போல்தான் தெரிகிறது.

ஏனெனில்: முஸ்லிம்களுக்குள் ஆயுதக் குழுக்கள் என்கின்ற விசனத்தனமான பிரச்சாரத்தின் ஊடாக: அவர்கள் சாதிக்க நினைப்பது மேலும் மேலும் முஸ்லிம்களை அடக்குவதற்கான புறச் சூழலை ஏற்படுத்திக் கொள்வதேயாகும். அவர்கள் உருவாக்க விளையும் சூழலானது அவர்களது முஸ்லிம்கள் மீதான அடக்குமுறையை கட்டவிழ்த்து விடுவதற்கான வாய்ப்பான அரசியல் ஏதுக்களை ஏற்படுத்தத் தொடங்கி விட்டன இப்போது.

> ''எதிர்பாராததும் யதார்த்தமானதுமான இத்தகைய முஸ்லிம் மக்களின் ஒன்று திரண்ட தன்னியல்பான மக்கள் எழுச்சியை அடக்கி, மட்டந்தட்டி உறை நிலையில் வைத்திருப்பதற்கே முஸ்லிம்களுக்குள் ஆயுதக் குழுக்கள் என்கிற அபாண்டமான கட்டுக் கதைகள் இப்போது அரங்கத்திற்கு வந்துள்ளன. செப்டம்பர் 11 தாக்குதலின் பின் எழுந்துள்ள முஸ்லிம்களை வெளிப்படையாக பழிவாங்கும் அமெரிக்காவின், மேற்கின் கபடத்தனமான பிரச்சார யுக்தியான இஸ்லாமிய அடிப்படைவாதிகள், உஸாமா, அல்-கய்தா போன்ற முஸ்லிம்களை வேட்டையாடும் 'லைசன்சை' இப்போது, இங்கும் முஸ்லிம்களை வேட்டையாடுவதற்கும் ஒடுக்குவதற்கும் பயன்படுத்தவதே இவ் ஆதிக்க சக்திகளின் உள்நோக்கமாகும். அதற்காகவே இந்த வேகமும் விவேகமும்.''

இப்பிரச்சாரத்தை முன்னின்று நடாத்தும் தரப்பினர் யார் என்று உற்று நோக்கினால். இந்த நாட்டில் முஸ்லிம்களை தொடர்ந்தும் பல்வேறு வகைகளில் அடக்கி ஒடுக்கி வருபவர்களாகவே இப் பிரசாரத்தை மேற்கொண்டுவரும் தந்திரிகள் இருக்கின்றனர். முஸ்லிம்களைப் பொறுத்தவரை இவர்கள் ஆதிக்க அதிகாரத்துவ சக்திகளாகும். இவர்களின் தொடர்ச்சியான ஆதிக்கத் திமிறை தலைகுனிந்து பணிவாக ஏற்றுவந்த முஸ்லிம்கள், இப்போது விழிப்படைந்து பலம்பெற்று- அடக்குமுறைக்கெதிராக தங்களது குரல்களை ஒலிக்கும்போது, செயற்பட முன்வரும்போது ஆட்டம் காண்கிறது இவ் ஆதிக்கச் சக்திகள்.

இதனை எதிர் கொள்வதற்கு இவர்களுக்கு பல்வேறு மாற்றுவழிகள் இருந்தும், உடனடியாக முதற்கட்டமாக முஸ்லிம்களுக்கெதிரான பிரச்சார யுத்தமொன்றை மிகத் தீவிரமாக முன்னெடுக்கத் தொடங்கி விட்டனர். இப்போதய உலகச் சூழலை பயன்படுத்தி முஸ்லிம்களுக்கெதிராக கட்டவிழ்த்து பரப்பப்படும் இஸ்லாமிய அடிப்படைவாதிகள், அல்-காய்தா, ஜிஹாத், உஸாமா ஆயுதக் குழுக்கள் என்கிற புனைவுகள் இலங்கை முஸ்லிம்களின் நியாயமான அரசியல், சமூகக் குரலை மரணிக்கச் செய்யும், முளையிலேயே கிள்ளியெறியச் செய்யும் ஆற்றலைக் கொண்டுள்ளதை இவர்கள் உணர்ந்து மிகத் தந்திரமான அரசியல் பிரச்சாரத்தை முஸ்லிம்களுக்கெதிராகத் தொடங்கிவிட்டனர். இன்று இவ்விசமப் பிரச்சார யுத்தத்தை எதிர்கொள்வதும் நமக்கு மிகப் பெரும் சவாலாகி விட்டது.

தருணம் பார்த்து, மிகத் திட்டமிட்ட அரசியல் நோக்குடன் பரப்பப்பட்டுவரும் இவ் மோசடித்தனமான பிரச்சாரத்தின் பின்னே தமிழ் இனவாதமும், சிங்கள இனவாதமும் ஒன்றாகக் கூடிக் குலாவி கதையளந்து கொண்டிருக்கின்றன. தமிழ் இனவாதத்தின் பின்னால் தமிழ் செய்தி ஊடகங்கள், புலிகள், தமிழ்க் கூட்டமைப்பினர் என எல்லோரும் ஒன்று திரண்டு நிற்க, சிங்கள இனவாதத் தரப்பில் சிங்கள ஹெல உறுமய, சிங்கள இனவாத ஊடகங்கள் என கூட்டுச் சேர்ந்த விசமம், காட்டுத் தீ போல் பரவி வருகிறது.

முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் பற்றிய விசமக் கதையாடல்கள்!

எப்போது தமிழ் ஆயுதக் குழுக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையேயான முரண்பாடுகள் வெடிக்கின்றதோ, எப்போது சிங்கள இனவாதத்திற்கும் முஸ்லிம்களுக்கும் இடையே முரண்பாடுகள் மோதலாக வெடிக்கிறதோ அப்போது சொல்லி வைத்தாற்போல் முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் பற்றிய கதைகள் பரப்பப்படத் தொடங்கி விடும். இதனை நாம் கடந்தகால அனுபவங்களிலிருந்து கண்டு வந்துள்ளோம். "ஜிகாத்" என்கிற பெயரில் முஸ்லிம்களுக்குள் ஆயுதக் குழுக்கள் இயங்கி வருவதாக 1985இல் ஏற்பட்ட தமிழ் ஆயுதக் குழுக்களின் மோசமான அடக்குமுறையை அடுத்து கதைகள் பரப்பப்பட்டன. வடக்கு கிழக்கில் முஸ்லிம்களின் வாழ்வு மோசமாக சூறையாடப்பட்டுக் கொண்டிருக்கும் போதே இந்த ஜிஹாத் பற்றிய விசமப் பிரச்சாரமும் மறுபக்கத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்தது. மறைந்த மு.கா. தலைவர் அஷ்ரஃப் அவர்களைக் கூட ஜிஹாத் இயக்கத்தின் தலைவராக பொய்யான கட்டுக் கதைகளின் ஊடாக சித்தரிக்க முயன்றன அடக்கு முறைச் சக்திகள். அன்று அப்பிரச்சாரம் தீவிரமாக கவனத்திற் கொள்ளப்படாமைக்கு உலகச் சூழலும் காரணமாக இருந்தது. ஆனால் இப்போதைய நிலைமை அவ்வாறில்லை என்பதை நாம் ஒவ்வொருவரும் அறிவோம்!

இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகிய கணத்திலிருந்தே, வடக்கு கிழக்கில் முஸ்லிம்களை மேலாதிக்கம் செய்யும் உரித்தை புலிகள் பெற்று விட்டனர் என்கிற மமதை மேலோங்கி முஸ்லிம்களை மிக மோசமாக பல்வேறு வழிகளிலும் புலிகள் ஆளத் தொடங்கினர். பரவலாகவும், தொடர்ச்சியாகவும் மீறப்பட்டுவந்த முஸ்லிம்களின் அடிப்படை சுதந்திர உரிமைகளை தொடர்ந்தும் இழக்க முடியாத முஸ்லிம் மக்கள் தங்கள் சுய நிர்ணயத்தையும் தனித்துவத்தையும் அடிப்படை உரிமைகளையும் நிலைநாட்ட தன்னியல்பாகக் கிளர்ந்தெழத் தொடங்கினர். மூதூர், வாழைச்சேனை, கல்முனை, அக்கரைப்பற்று என மக்களின் திரள்வு ஆதிக்க சக்திகளை கிலி கொள்ள வைத்துவிட்டன.

இவற்றிற்கு சிகரம் வைத்தாற்போல் நமது மக்களின் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற "முஸ்லிம் தேசப் பிரகடனமும்" கடந்த மாதம் காத்தான்குடியில் மிகப் பிரமாண்டமாக நடைபெற்ற, கிழக்கு பூராகவும் அனுஷ்டிக்கப்பட்ட சுஹதாக்கள் தின நிகழ்வும் உள்ளன. இத்தகைய மகத்தான பல்வேறு முஸ்லிம் மக்களின் சுயமான மக்கள் எழுச்சி, வெகுசனப் போராட்டங்கள் ஆதிக்கத் தரப்பினரின் முஸ்லிம்களை அடிமை கொள்ளும் கனவை சிதைத்து வருகின்றன. சினமூட்டியும் வருகின்றன.

எதிர்பாராததும் யதார்த்தமானதுமான இத்தகைய முஸ்லிம் மக்களின் ஒன்று திரண்ட தன்னியல்பான மக்கள் எழுச்சியை அடக்கி, மட்டந்தட்டி உறை நிலையில் வைத்திருப்பதற்கே முஸ்லிம்களுக்குள் ஆயுதக் குழுக்கள் என்கிற அபாண்டமான கட்டுக் கதைகள் இப்போது அரங்கத்திற்கு வந்துள்ளன. செப்டம்பர் 11 தாக்குதலின் பின்; எழுந்துள்ள முஸ்லிம்களை வெளிப்பாடையாக பழிவாங்கும் அமெரிக்காவின், மேற்கின் கபடத்தனமான பிரச்சார யுக்தியான இஸ்லாமிய அடிப்படைவாதிகள், உஸாமா, அல்-கய்தா போன்ற முஸ்லிம்களை வேட்டையாடும் "லைசன்சை" இப்போது, இங்கும் முஸ்லிம்களை வேட்டையாடுவதற்கும் ஒடுக்குவதற்கும் பயன்படுத்துவதே இவ் ஆதிக்க சக்திகளின் உள்நோக்கமாகும். அதற்காகவே இந்த வேகமும் விவேகமும்.

இப்போதைய நிலைமை

காத்தான்குடியில் சுஹதாக்கள் தினம் கொண்டாடப்பட்டு ஒரு வாரம் கழியுமுன்னே. காத்தான்குடியில்

ஆயுதப்பயிற்சி நடக்கிறது என்கிற கண்டுபிடிப்பு தீவிரம்பெற்றது. எங்கு பார்த்தாலும் முஸ்லிம்களுக்குள் ஆயுதக் குழுக்கள் என தமிழ், சிங்கள இனவாத ஊடகங்கள் தலைவிரித்தாடுகின்றன. சம்மாந்துறையில் இரு விவசாயிகள் தங்கள் வயல் நிலங்களில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டதன் பின் எழுந்த நெருக்கடி நிலையைத் தவிர்ப்பதற்கு ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கம் அதிசயமாகத் தெரிவித்த முஸ்லிம்களைப் பாதுகாக்க 550 பொலிசாரை சேர்ப்பதற்கான உத்தரவினைக்கூட தமிழ் ஆதிக்கத் தரப்பால் ஜீரணிக்க முடியவில்லை. அவ் உத்தரவை இடை நிறுத்தி வைக்குமளவிற்கு தமிழ் ஆதிக்கத் தரப்பு உறுதியெடுத்து நிற்கிறது.

மேற்சொன்ன இரண்டு உதாரணங்களும் ஒன்றுடன் ஒன்று பிண்ணிப் பிணைந்ததே. காத்தான்குடியில் ஆயுதப் பயிற்சி என்ற புரளியின் ஊடாக முஸ்லிம்களுக்கெதிரான பிரச்சாரத்தை தீவிரப்படுத்துவது மட்டுமல்ல இதன் நோக்கம், புலிகளின் ஆதிக்கத்தை எதிர்த்து தன்னியல்பாகக் கிளர்ந்தெழும் முஸ்லிம் மக்கள், எதிர்காலத்தில் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க முடிவு செய்வார்களாயின் அதனையும் முறியடிப்பதே இப்பிரசாரத்தின் பின்னுள்ள அரசியல் நோக்காகும்.

ஏன் மக்கள் ஆயுதம் தூக்குகின்றனர்?

எந்தவொரு மக்கள் திரளும் "சும்மா" ஆயுதம் தூக்குவதில்லை. மக்கள் ஆயுதத்தின் மீது வெறிகொண்ட மனநோயாளர்களுமல்ல, மனிதனுக்கு வாய்க்கப்பெற்றதும் உரித்தானதுமான உரிமைகள் பறிக்கப்படும்போதே மக்கள் கிளர்ந்தெழுகின்றனர். உலகில் உரிமைகள் வாய்க்கப்பெற்ற மக்கள் கூட்டத்தினரிடையே அமைதியான ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அடக்கப்பட்ட நசுக்கப்பட்ட மக்களிடையே எரிமலைகள் குமுறிக் கொண்டிருக்கின்றன. இதுவே பாடமும் படிப்பினையுமாகும்.

மக்கள் திரள் தனது உரிமைகள் மறுக்கப்படுமிடத்து ஜனநாயக ரீதியாக தங்களது உரிமைகளை பெற்றுக்கொள்ள முதலில் முயற்சிக்கின்றன. அந்த வகையான ஜனநாயக வழிமுறைகள் அடக்கப்படுபவர்களால் நசுக்கப்படும் போதும், எட்டி உதைக்கப்படும்போதும், எள்ளி நகையாடப்படும்போதும் தங்களது உரிமைகளை நிலைநாட்ட சுதந்திரப் போராட்ட வழிமுறைகளைக் கையாள்கின்றனர் மக்கள். அந்த வகையில் சுதந்திர உணர்வுமிக்க மக்களுக்குள் இருந்து ஆயுத போராட்ட சக்திகள் ஜனிக்கின்றன. தமிழ் மக்களின் ஆயுதப் போராட்ட வரலாறும் இதுதான்.

ஆனால், மிகத் திட்டமிட்டு புலிகளும் தமிழ் ஆதிக்கத்தரப்பினரும் இந்த உண்மையை வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் விடயத்தில் வசதியாக மறந்து விடுகின்றனர். முஸ்லிம்கள் ஆயுதத்தின் மீது தீராத பசிகொண்ட மனநோயாளிகளாக உள்ளனர் என சித்தரிக்க நிலைப்படுகின்றனர். இந்த சித்தரிப்புகள் அடக்கப்படும் வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் சுதந்திரத் தாகத்தை ஒரு போதும் ஊதி அணைத்திட முடியாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் ஒரு தேசிய இனமாகும். சுய நிர்ணயத்தைக் கோருவதும், தங்களது தனித்துவத்தை பாதுகாப்பதும் தங்களது தாயக மண்ணில் சுதந்திர மனிதர்களாக வாழ்வதும் எமது மக்களுக்கு உரித்தானதாகும். இதனை மறுக்கும்போதே எமது மக்கள் அரசியல் அரங்கிற்கு வருகின்றனர். எமது மக்களின் ஜனநாயக அரசியல் போராட்டம் தோல்வியுறும்போது அடுத்த வழிகளைப்பற்றி நமது மக்கள் சிந்திப்பதற்குள்ள உரித்தை கேள்விக்குட்படுத்த எந்த ஆதிக்கத் தரப்பினருக்கும் யோக்கிதை கிடையாது. அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்துக்கொண்டிருக்கும்போது, 'மக்கள் கவுட்டுக்குள் கையை வைத்துப் படுத்துக்கொண்டிருக்க வேண்டுமென' சொல்வதற்கு எவ்வளவு திமிர்த்தனம் வேண்டும்? முஸ்லிம்களை ஆயுதம் தூக்க வேண்டாம், தூக்க கூடாது எனச்சொல்வோர் முஸ்லிம்களின் உரிமைகளை அங்கீகரிக்க முன்வர வேண்டும். முஸ்லிம்களை சமத்துவமாகவும், கௌரவமாகவும் பார்க்க வேண்டும். முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் இலங்கை அரசாங்கத்தால் முஸ்லிம்களைப் பாதுகாக்க முடியாது என்பதை கடந்த நாட்களில் நடந்த சம்பவங்கள் நமக்கு உணர்த்துகின்றன. அப்படியானால் முஸ்லிம்களை யார்பாதுகாப்பது?

இந் நிலையில் புலிகளிடமும், தமிழ் ஆதிக்கத் தரப்பினரிடமும் ஒரேயொரு கேள்வியைக் கேட்கலாம் என நினைக்கிறோம் "நீங்கள் ஏன் சிங்கள அடக்கு முறைக்கு எதிராக ஆயுதம் தூக்கினீர்கள்" என்று.

பையூஸ் அகமட்

பதில் சொல்வார்களா?

புரிந்துணர்வு ஒப்பந்தம் என்ற பெயரில் அரச தரப்பு அமைச்சர் ஒருவருக்கு கிடைத்த மிக மோசமான ஏமாற்றுச் சந்தர்ப்பம் அமைச்சர் ரவூஃப் ஹக்கீமுக்கு அவர்களுக்கு மாத்திரமே கிடைத்தது. பிரபாகரனை சந்திப்பதற்காக அமைச்சர் ஹக்கீம் எவ்வளவு தூரம் சந்தோஷம் மிக்கவராக தனது பயணத்தை வன்னிக் காட்டை நோக்கி மேற்கொண்டார் என்பதனை நாம் ஊடகங்கள் மூலம் அறிந்து கொண்டோம். புலிகளின் தலைவர் பிரபகாரனால் அமைச்சர் ஹக்கீமுக்கு ஹலால் உணவு வழங்க வேண்டும் என்பதற்காக முஸ்லிம் சமயற்காரர் ஒருவரை வன்னிக்கு அழைக்கப்பட்டதும், வன்னிக் காட்டில் ஹலால் உணவு சாப்பிட்ட ரவூஃப் ஆனந்தக் களிப்பில் சொக்கிப் போய் சென்ற நோக்கத்தை மறந்து நன்றிக் கடன் காட்டும் வகையில் தமது இனத்தைக் காட்டிக் கொடுக்க முடிவு செய்ததும் நாம் அறிந்த விடயமே.

வன்னிக்கு செல்வதன் மூலமும், ஹலால் உணவை சாப்பிடுவதன் மூலமும் புலிகள் தமது இனத்தின் உரிமைகளில் அத்துமீறமாட்டார்கள் என பகல் கனவு கண்ட ரவூஃபின் உள்ளத்தில் புலிகள் தம்மை முஸ்லிம் மக்களின் ஏகப்பிரதி நிதிகளாகவே வன்னிக்கு அழைத்துள்ளனர் என்ற ஆசை நிறைவேறியதையிட்டு மகிழ்ச்சியடைவும் தவறவில்லை.

புரிந்துணர்வுஒப்பந்தம் இடம்பெறுவதற்கு முன்னால் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வந்த மூதூர், பெரியகுளம், தோப்பூர், ஜின்னாநகர் போன்ற பகுதிகளில் பாசிசப் புலிகளால் அவ்வப்போது சிறு சிறு தாக்குதல்கள் அம்மக்களின் இருப்புக்கும், வாழ்க்கைக்கும் உலை வைக்கும் நிலையைத் தோற்றுவிக்கவில்லை. ஆனால் புரிந்துணர்வு ஒப்பந்த நாடகம் நடைபெற்ற பின்னரே அந்தப்பயங்கர நிலையும் தோற்றம் பெற்றுவிட்டது. தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்தவும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளிலிருந்து அவர்களைத் துரத்தி விடுவதும் வடக்கு - கிழக்கு பகுதிகளில் தாமே ஆளவேண்டியவர்கள் போன்ற தமது நோக்கங்களை நிறைவேற்றுவதுமே இவர்களின் இலக்காக இருந்தது.

இந்நிலையில் அமைச்சர் ரவூஃப் ஹக்கீம் பெட்டிப் பாம்பாய் அடங்கிக்கிடப்பதன் காரணம் என்ன? கடந்த பொ. ஐ. மு. அரசில் மாவனல்லைப் பகுதியில் இடம் பெற்ற மற்றுமோர் திட்டமிட்ட தாக்குதலின் போது அவ்வரசில் பங்காளிக் கட்சியாக இருந்த ரவூஃப் ஹக்கீம் அப்போதைய அரசை கதிகலங்கவைத்த கதை அன்று இனிமையாக இருந்தது. ஆனால் வாழைச்சேனை, மூதூர், மாளிகாவத்தை, பேருவளை, மீண்டும் மூதூர் போன்ற தொடர்ச்சியான சம்பவங்களின் போது அதே ரவூஃப் இவ்வரசின் பங்காளிக்கட்சியாக இருந்தும் கூட மௌனம் சாதிக்கும் இந்தப் புதிய கதை சந்தேகத்தையும் கவலையையும் ஏற்புடுத்துகிறது.

கடந்த அரசை கீழிறக்கிவிட்டு தற்போதைய அரசை ஆட்சிபீடமேற்றி சமாதான சூழலுக்குக் கைகொடுத்த மக்கள் கை, கால் முடக்கப்பட்டவர்களாக கண்ணீர் வடித்து நிற்கின்றார்கள். சமாதான சூழலில் புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பன நிலவி வரும் காலத்தில் இது போன்ற இன வன்முறைகள் தொடராகத் தொடுக்கப்படுவதன் காரணம் என்ன? அரசும், 26 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் கதிரை சுகம் காண்பதன் நோக்கம் என்ன? முஸ்லிம் மக்களின் ஏகப்பிரதி நிதி என்ற புலிகளின் அங்கீகாரம் பெற்ற மாண்புமிகு ரவூஃப் ஹக்கீம் தம் சமூகத்தின் உரிமை மீறல்களுக்குத் துணைபோவதன் காரணம் என்ன?

ஏ. சிறாஜ்டீன்
கொழும்பு 05

சாய்ந்தமருது இரு இளைஞர்கள் கடத்தல் சம்பவம் - முடிவு என்ன?

கடந்த மாதம் 18ம் திகதி சாய்ந்தமருதைச் சேர்ந்த இரு இளைஞர்களான ஆதம்பாவா மன்சூர் (28) முஹம்மது இஸ்மாயில் (30) ஆகியோர் - மட்டக்களப்பு மாவட்டத்திற்கு சென்றபோது கடத்தப்பட்டு காணாமல் போய்விட்டனர். இச்சம்பவத்தின் காரணமாக கல்முனை, சாய்ந்தமருதுப் பிரதேசத்தில் பெரும் பதற்ற நிலை உருவாகியமை யாவரும் அறிந்ததே.

இச்சம்பவத்தை அடுத்து எழுந்த பதற்ற நிலையைத் தடுப்பதற்கு பல்வேறு அரசியல் பிரதிநிதிகளும் பொலிசாரும் செயலில் இறங்கினர். பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்டன ஆனாலும் இதுவரை காணாமல் போன இரு முஸ்லிம் இளைஞர்களும் இன்னும் வீடு வந்து சேரவில்லை.

இவர்கள் காணாமல் போனமை தொடர்பாக தமிழ் ஊடகங்கள் பல்வேறு செய்திகளை வெளியிட்டு முஸ்லிம் மக்களை மட்டுமல்ல முழுநாட்டையும் குழப்பத்திற்குள்ளாக்கின, இதற்கு பெருமளவு துணைபுரிவதாக கல்முனைப் பிரதேச பொலிசாரின் செயலும் அமைந்திருந்தது. பொலிசார் வெளியிட்ட தகவலின் அடிப்படையில் இவர்கள் கடத்தப்பட்டதில் - முஸ்லிம்களே சம்பந்தப்பட்டுள்ளதாகவும் - விரைவில் உண்மை தெரிய வருமெனவும் தெரிவித்திருந்தனர்.

ஆனால் இவர்கள் கடத்தப்பட்டு 3 வாரங்கள் கடந்தும் பொலிசார் இன்னும் மௌனம் சாதிக்கின்றனர். பொலிசார் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டும் பணியில் தங்களது கடமையைச் செய்வதை வரவேற்கும் அதேவேளை - தங்களது கடமைக்காக ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் தவறான சக்திகளாக அடையாளப்படுத்த பொலிசாரின் வாக்கு மூலம் அமைந்து விடக் கூடாது என்பதில் பொலிசார் கவனமாக இருக்க வேண்டும்.

இந்தவகையில் - முஸ்லிம்கள் மீதான தவறான பிரச்சாரத்திற்கு பொலிசார் துணையாகவில்லை என்பதை நிரூபிப்பது பொலிசாரின் கடமையாகும். எப்போது பொலிசார் உண்மையைக் கண்டு பிடித்து வெளியிடுவர்? என்பதே நமது மக்களின் எதிர்பார்ப்பு - காணாமல் போன இரு இளைஞர்களின் உயிருக்கும் என்ன நடந்துள்ளது?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிங்களம் பயின்ற மாப்பிள்ளையா பேசுங்கள், தமிழ் மீடியம் வேண்டவே வேண்டாம்!

தன் மகளுக்கு திருமணஞ் செய்து வைக்க ஆசைப்பட்ட ஒரு முஸ்லிம் தகப்பன், தனக்குத் தெரிந்த கல்யாண புரோக்கர் ஒருவரிடம் "நல்ல மாப்பிள்ளைமார் கைவசமிருந்தால், பேசி வரும்படி" பணித்தார். தன்னால் தன் மகளுக்கு தரப்படப் போகும் சீதனம் - சீர்வரிசை - வீட்டுத்தளபாடங்கள் என்று, அடுக்கிக் கொண்டு போனார் ஒரு விஷயத்தை மட்டும் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தினார். அது இதுதான்....

"புரோக்கர் நானா... சிங்கள மீடியம் படித்த மாப்பிள்ளையாகப் பார்த்து பேசுங்கள். தமிழ் மீடியம் பயின்ற மாப்பிள்ளை வேண்டவே வேண்டாம்..."

இவ்வாறு சராசரி முஸ்லிம் தந்தை தன் மகளின் திருமணம் தொடர்பாக நிபந்தனை விதிப்பதை ஒரு தனிப்பட்ட விவகாரமென்று ஒதுக்கிவிடவோ, கண்டும் காணாமல் இருந்திடவோ முடியாது.

சமுதாய நெஞ்சங்களே!
கொழும்பிலும், முஸ்லிம்கள் செறிந்து வாழும் சில நகரங்களிலும். நம் முஸ்லிம் பெற்றோர் தம் பிள்ளைகளை சிங்கள மொழிமூல பாடசாலைகளில் சேர்ப்பதற்கு.
முண்டியடித்துக்கொண்டு முன்றிறபதை முன்னர் ஒரு தடவை இதே களத்தில் எழுதி. சமுதாய சிந்தனையை அதன்பால் திருப்பி விட்டேன்.

இலங்கை முஸ்லிம்கள் பன்னெடுங் காலமாகத் தமிழையே தாய்மொழியாகவும், வீட்டுமொழியாகவும், பாடபோதனைக்கான போதனா மொழியாகவும் கைக்கொண்டு வாழ்ந்து வருவதையும். சிங்கள மொழிமூலம் நம் சமுதாய மாணவ சிறுவர்கள் கல்வி பயிலத்துவங்கினால், அதனால் வருங்காலத்தில் சமுதாயம் எதிர்நோக்கப்போகும் பிரச்சினைகளையும், சகோதரத்துவத்திற்கு பேர் போன சமுதாயம் தமிழ்பேசுவோர்- சிங்களம் பேசுவோர் என இரு பிரிவுகளாகும் துரதிஷ்டத்தையும் இப்போது சந்திக்க வேண்டி வந்து விட்டதா?

ஒரே சமுதாயம் இருவேறு மொழிகளை போதனாமொழியாக ஏற்று, கற்பதால் விளையும் பாதகங்களின் முன்னெச்சரிக்கை பதச்சோறாகவே, பிரஸ்தாப தந்தையின் திருமண நிபந்தனை அமைந்திருப்பதை முல்லா இங்கு தொட்டுக் காட்டாமல் இருக்க முடியாது.

மொழி என்பது ஒரு சாதாரண விஷயமல்ல. அது மோகத்தை ஏற்படுத்தி போதையை ஊட்டவல்ல ஒரு சாதனம். சமய விழுமியப் பண்புகளைக்கூட அது சில தருணங்களில் பின்தள்ளி விட்டு. மொழி ஏற்றும் போதைக்கு முக்கியத்துவம் தரும் இயல்பு கொண்டது. இதற்கு உதாரணங்கள் பல உண்டு. மேற்கு பாகிஸ்தான் உர்தூ மொழியையும். கிழக்கு பாகிஸ்தான் வங்க மொழியையும் பேசி வரும் இரு மொழி அமைப்பே. கிழக்குப்பாகிஸ்தான் பிரிந்து வங்காளதேசமாகக்காரணமாயிற்று. மொழிவழி பேதமே நீறுபூத்த நெருப்பாக கனன்று அப்போது வெளிப்பட்டது.

இந்த இருமொழி பேசும் நிலை. நம் இலங்கை முஸ்லிம்களையும் இருகூறுகளாக்கி விடுமோ என்ற அச்சம் தழுவிய சமுதாயக் கவலையையே இப்போதும் தொட்டுக் காட்டுகிறேன். சமுதாய கல்விமான்களோ. அறிஞர் குழாமோ, உலமாக்கள் சபையோ, அரசியற் தலைமைத்துவங்களோ இதுபற்றி கடுகளவும் கரிசனை காட்டியதாகத் தெரியவில்லை. ஏன்தான் இந்த ஏனோதானோ மனப்பாங்கோ?

இது விடயத்தில் எவருமே சிந்தித்து, காத்திரமான மாற்று வழியை ஆராய முன்வராமல் வாளாவிருப்பார்களேயானால், சிங்கள மொழி மூலம் பயிலும் முஸ்லிம் மாணவர்களின் தொகை, நாளுக்குநாள் பெருகி பெருவட்டமாகி விடும். இதனால் தொட்டதற்கெல்லாம் சங்கடமான பிரச்சினைகள் எழ வாய்ப்புண்டு. செடியாக இருக்கும் போதே கிள்ளி எறியாவிட்டால், மரமாக வளர்ந்த பின் கோடரி போட்டு வெட்டக்கூடிய நிலை ஏற்படும்.

தலைநகரில் ஒரு சில முஸ்லிம் பாடசாலைகளில், தமிழ் - சிங்கள இரு மொழிமூலமான போதனைகள் நடைபெற்று வருகின்றன. அத்தகைய பாடசாலைகளில் தமிழ்ப்பிரிவு, மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே.

நோக்கப்பட்டு வருவதை முல்லாவினால் நேரில் அவதானிக்க முடிந்தது. இந்தப் பிரிவுநிலை வளருமேயானால், அதன் தாக்கம் எதிர்கால சமுதாயத்தில் பரவலாக இருக்கும் என்பதற்கான அறிகுறி. இப்போதே தென்படத்தான் செய்கிறது.

வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் ஜும்ஆத் தொழுகைகளில் மிம்பரில் ஏறி, கத்தீப் செய்யும் பயான் என்னும் மார்க்க உபந்நியாசங்கள். சிங்கள மொழிமூலம் பயின்ற முஸ்லிம் மாணவர்களுக்கு விளங்கவில்லை என்ற குரல். அண்மைக்காலமாக சில மஹல்லாக்களிலிருந்து ஒலிக்க ஆரம்பித்துள்ளது. இதை அனுசரித்தோ. அனுசரிக்காமலோ. ஒரு சில ஜும்ஆப் பள்ளிவாசல்களில் மாதம் ஒரு வாரம் சிங்கள பயானுக்கு வழி செய்துள்ளனர். சிங்களம் தெரியாதவர்களின் நிலையென்ன?

இதே நிலைமை நீடித்தால், விபரீதங்கள் விளைவதற்கான சாத்தியக்கூறுகள் நம் சமுதாயத்தை எங்கோ இழுத்துச் சென்று விடும். இதை வெள்ளம் வருமுன் அணை கட்ட ஆசைப்படுவோர் சிந்திக்க வேண்டும்.

சிங்கள மொழிமீது முல்லாவுக்கோ, அன்றி முஸ்லிம் சமுதாயத்திற்கோ பெரும் பகைமையோ, காழ்ப்புணர்வோ சிறிதுமில்லை. சிங்கள மொழி மூலம் பயிலும் முஸ்லிம் மாணவர்களின் எதிர்காலம் பற்றிய அக்கறையே இதற்கு அடிப்படை.

சிங்கள மொழிமீது முல்லாவுக்கோ, அன்றி முஸ்லிம் சமுதாயத்திற்கோ பெரும் பகைமையோ, காழ்ப்புணர்வோ சிறிதுமில்லை. சிங்கள மொழி மூலம் பயிலும் முஸ்லிம் மாணவர்களின் எதிர்காலம் பற்றிய அக்கறையே இதற்கு அடிப்படை.

சிங்கள மொழிம

இலங்கை முஸ்லிம்களின் சமகால சிந்தனைகளையும் விடுதலை உணர்வுகளையும் வெளிப்படுத்தும் ஓர் உணர்ச்சிக் கவிஞனின் சத்தியப் பிரகடனம்!

29.11.1986 ஆம் ஆண்டு கொழும்பு தெமட்டகொட வீதியிலுள்ள "பாஷா" விலாவில் நடந்த முதலாவது முஸ்லிம் காங்கிரஸ் மகாநாட்டில் இக்கவிதை அரங்கேறியது. தொடர்ந்து நடந்த மாகாநாடுகளிலும் தலைவரின் விருப்பத்திற்கேற்ப இக்கவிதை படிக்கப்பட்டது. தலைவர் உயிருடன் இருந்த போது இறுதியாக புத்தளத்தில் நடந்த மகாநாட்டிலும் இக்கவிதை அரங்கேறியது. முதலாவது மகாநாட்டில் நடந்த நினைவுகள் எனக்கு இன்னும் பசுமையாக உள்ளது. குறிப்பிட்ட ஒரு சிலா மட்டும் தான் கட்சியில் இணைந்திருந்தனர். இன்று போராளிகளாகவும், அமைச்சாகளாகவும், பாராளுமன்ற உறுப்பினாகளாகவும் பாசறையில் பயிற்சி பெற்ற தாசாகளாகவும் தங்களைப் பாசாங்கு செய்பவாகள் முஸ்லிம் காங்கிரஸ் கனிந்த பின்புதான் பழம் உணண வந்த பறவைக் கூட்டங்கள்.

இந்தக் கவிதையை ஒரு முறை அசைபோட்டுப் பாாக்கிறேன். இன்று நாம் காண விரும்பும் உலகத்தை இதற்குள்ளே கண்டு கொள்ளத் துடிப்பது தெரிகிறதலவா? ஒரு சிறிய காலத்திற்குள் எவ்வளவு மாற்றங்கள். எவ்வளவு திருகு தாளங்கள். தந்திரங்கள். ஏமாற்று வித்தைகள். பசப்பு வார்த்தைகள் இன்னும் தொடர்ந்து கொண்டு தானே இருக்கின்றது.

கவிஞர் அன்பு முகைதீன்

'எங்களின் உரிமை காக்க எமக்கொரு கட்சி வேண்டும்!'

அரசியல் கட்சி ஒன்று
அவசியம் எமக்கு வேண்டும்
தங்களின் நலனைப் பேணும்
தலைவர்கள் உள்ள நாட்டில்
எங்களின் உரிமை காக்க
எமக்கொரு கட்சி வேண்டும்!

எங்களுக் கென்றோர்
நாயன் இருக்கிறான் அவனைப்போல
எங்களுக் கென்றோர் தூதர் இருக்கிறார்
அவரால் வந்த
எங்களுக் கென்றோர்
வேதம் இருப்பதைப் போல
இன்னும் எங்களுக் கென்றோர்
கூபா இருப்பதைப் போல
மேலும் எங்களுக் கென்றோர்
கட்சி இருப்பதில்
என்ன குற்றம்?

பறவைகள் விலங்கு கூட
பாதுகாப்போடு வாழ
அவைகளும் தமக்காய் என்றும் அழகிய
இடத்தை நாடும்
கொட்டும் மழையில் அந்த கூதலில
ஒதுங்கக் கூட
எங்களுக் கென்றோர் கட்சி
இல்லையே இந்த நாட்டில்
அரசியல் கட்சி ஒன்று
அவசியம் எமக்கு வேண்டும்!

முஸ்லிம்கள் உரிமை காக்க
முயற்சிப்போம் என்று சொல்லி
கட்சிகள் பலதை நாட்டில்
கனவான்கள் தோற்றுவித்தார்
நம்பினோம் மக்களுக்கு
நல்லொளி கிடைக்கு மென்று
நம்பிய வரை யெல்லாம்
நட்டாற்றில் தவிக்க விட்டு
பச்சை, மஞ்சள், நீலம்,
சிவப்புக் குள்ளே யெல்லாம்
பதுங்கினார் அதனால் சின்ன பதவிகள்
பெற்று வாழ்வில்
ஒதுங்கினார் எம்மை யெல்லாம்
உதாசீனம் செய்து விட்டார்.

அன்னியர் வீட்டுக் குள்ளே
அடைக்கல மானோர் பாவம்!
என்னவர் செய்வர் தங்கள் எஜமானின்
பணியை ஏற்று
கண்ணியப் படுத்தா விட்டால்

கட்சியில் இடமே இல்லை!
கட்சியால் ஒதுக்கி விட்டால்
களவுகள் என்ன வாகும்?

பட்டம், பதவி வாழ்வில்
பல நாடு செல்ல வாய்ப்பு
விட்டதை வந்தா ரென்றால
விருந்துக்கு என்ன செய்வர்?
தொட்டதில் இன்பம் கண்டோர்
துண்டிக்க விரும்ப மாட்டார்
எட்டியே நிற்பார் எங்கள்
இயக்கத்தில் சேர மாட்டார்!

கட்டிலில் படுத்து இன்பக்
கனவுகள் காண்போ ரெல்லாம்
பட்டினியாலே சாவோர்
பற்றியா சிந்திப்பார்கள்?
தட்டியெம் உரிமை கேட்க
தகுதியும் இல்லாதோரை
விட்டு நாம் இனிமேல் எங்கள்
விடிவுக்காய் உழைக்க வேண்டும்!

எத்தனை ஆண்டாய் நாங்கள்
இவர்களால் அடக்கப் பட்டோம்!
புத்தியை இழந்து பின்னால்
போனதால் என்ன கண்டோம்!
சத்தியமாகப் புதிய சாதனை புரிவாரென்று
கத்தினோம் மேடை
தோறும் கண்டு ஒன்று மில்லை!

வாக்குகள் பெறுவதற்காய் வாசலில் நின்ற போது
சோக்காகப் பேசினார்கள் சொர்க்கத்தை
அமைப்போம் என்றார்
ஏழைகள் இந்த நாட்டில்
இன்பத்தை பெற்று என்றும்
வாழ ,நாம் உழைப்ப தோடு
வறுமை ஒழிப்போம்! என்றார்
உரிமையைப் பெறுவதற்காய் உயிரையும்
இழப்போம் எங்கள்
கூடமையை உணர்ந்து பாரைக் கல்லையும்
உடைப்போம் என்று
உறுதியாய் கூறி எங்கள்
உள்ளங்கள் மகிழச் செய்தார்
நம்பினோம் ஆனால் இன்று
நடந்து வேறு ஒன்று.

புத்தளம், காலி, மூதூர் போன்ற இடத்திலெல்லாம்
எத்தனை முறைகள் நாங்கள்
இன்னலை அனுபவித்தோம்
சத்தியம் செய்த எங்கள்

சாதனை வீர ரெல்லாம்
நித்திரை செய்தார் எம்மை
நினைத்துமே பார்த்தாரில்லை!

நீண்ட நாள் முன்னோர் வாழ்ந்த
நிலங்களைக் கூட இன்று
ஆண்டிட வந்தோர் நாங்கள்
அகலுக அப்பால் என்று
வேண்டிய எம்மை நாளும்
விரட்டுவோர் தம்மைக் கண்டும்
தாண்டியே வெற்றி கொள்ள தலைவர்கள்
எழவே இல்லை!

இன்று நாம் படும் துயரை இவர்களால்
தீர்க்க வொண்ணா
என்றுமே இவர்கள் எங்கள்
இன்னலை நீக்கமாட்டார்
இனியும் நாம் இவரை நம்பி இருப்பதில்
நன்மை இல்லை!
அணி இனித் திரள்வோம் புதியோர்
அரசியல் கட்சி ஒன்றை
துணிவுடன் இந்த நாட்டில்
தொடங்குவோம் எம்மை வாட்டும்
பிணியினை ஓட்டி உள்ள
பிரச்சினை யெல்லாம் சாட்டி
உரிமையை பெறுவ தற்காய்
உழைப்பவர் எமக்கு வேண்டும்!
தலைவணங் காது நின்று
தடைகளை உடைத்து வென்று
உரிமைக்காய் குரல் கொடுக்கும்
உணர்ச்சியின் பிழம்பாய் அந்த
தலைவனைக் காண்பதற்காய
தவம் கிடக்கின்றோம் நாங்கள்!

அச்சமே இன்றி அந்த
அழகிய தலைவன் நாட்டில்
நிச்சயம் எழுவான் இந்த நிலத்தினை
வெற்றி கொள்வான்
கட்சியை முதலில் நன்றாய்
கட்டி நாம் எழுப்ப வேண்டும்!

கட்சிக்குள் இருந்தே அந்த
சுதிரவன் உதிக்க வேண்டும்!
அரசியல் கட்சி ஒன்று
அவசியம் எமக்கு வேண்டும்!

கவிச்சுடர் அன்பு முகையதீன்

உசாமா பின் லேடன்

ஒரு பொறியியலாளனின் போராட்டம்

உஸாமா தனது 40வது வயதுகளின் நடுப்பகுதிகளில் கணனித்துறையில் முதிர்ச்சிபெற்ற ஒரு பல்கலைக்கழக பட்டதாரியாக காணப்பட்டார். அவர் தனது 4 மனைவிமார்களோடும் 15 குழந்தைகளோடும் கிழக்கு ஆப்கானிஸ்தானில் சிறிய குகைக்குள் வாழ்கிறார். உஸாமா எப்பொழுதும் தனக்கு எதிரான இராணுவத்தாக்குதல்கள், கொலை முயற்சிகள், இராணுவ வேட்டை, ஆகாய விமானத்தாக்குதல் போன்ற சகலவற்றிலிருந்தும் பாதுகாக்கப்பட்ட நிலையிலேயே இருந்து வருகிறார். இவர் தெரிவு செய்திருக்கும் பாதை அவருக்கு அவரது தந்தை தெரிவு செய்த பாதையாகும். அதனையே இவர் பிற்காலத்தில் தனக்கெனத் தெரிவு செய்துகொண்டார். பின்லேடன் மிகச்சிறந்த போற்றத்தக்க கட்டிட நிபுணரும் சவுதியைச் சேர்ந்த பல பில்லியன் ரூபாய்களுக்குச் சொந்தக்காருமாவார். இருந்தும் கூட அவர் வாழ்வின் சகல வசதி வாய்ப்புகளையும் விட்டொதுக்கிவிட்டு கொடுமையான வழியை அடித்தளமாகக் கொண்ட ஜிஹாதிய பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

உஸாமா பின் லேடன் மாத்திரம் இவ்வாறே இஸ்லாத்திற்காக தம்மை முழுமையாக அரிப்பணித்து, தனது சகல சொத்துக்கள், செல்வங்களை முழுவதுமாக இறைபணியில் அர்ப்பணித்த ஒரு போராளியல்ல. அவருடன் என்றும் இணைந்திருக்கும் டாக்டர் அய்மான் அல் ஸவாஹிரீ (பின்லாடினின் வலக்கரத்தைப் போன்றவர்) இவரும் 40 வயது நிரம்பிய ஒரு போராளியாவார். எகிப்தில் முன்னணி வகிக்கும் ஒரு சிறந்த நபராகவும் பல உயர் தொழில்களிலும் தகமைகளிலும் ஈடுபட்டிருந்தவராகவும் காணப்பட்டார். ஆனால் இவர் சகல பதவிகளையும் விட்டுவிட்டு எகிப்திய அரசுக்கு எதிராக போராட முன்வந்தார்.

பின்லாடின், ஸவாஹிரி போன்றோர் புகழ்பெற்ற சர்வதேச பயங்கரவாதிகளாகும். இவர்களை போன்ற பல நூறு பயங்கரவாதிகள் உருவாக்கப்பட்டுள்ளார்கள். அவர்களும் களத்தில் உள்ளார்கள். இவர்களின் தலைமையின் கீழ் ஆயிரக்கணக்கான பயங்கர வாதிகள். கருணையற்ற, விட்டுக்கொடுக்காத, கொடூரமான தாக்குதல்களில் ஈடுபடத் தயாராகி வருகின்றனர். இதற்கு

அவர்களால் சூட்டப்பட்டுள்ள பெயர் ஜிஹாத். இவர்கள் அமெரிக்கா. மேற்குலகைத் தாக்குவதற்கு தயாராகிவருகின்றனர். தன்சானியா, கென்யா போன்ற நாடுகளிலுள்ள அமெரிக்கத் தூதரகங்கள் மீதான இவர்களின் தாக்குதல்கள் அண்மைய புதிய தாக்குதல்கள். ஆனால் இதுவே இறுதித்தாக்குதல்கள் என எண்ணிவிடக் கூடாது. மாறாக பாரிய பயங்கரத்தாக்குதல்களுக்கான முன்னோடித் தாக்குதல்களே இவைகள். இவர்கள் புனித யுத்தம் என்ற 'பெயரில் என்ன செய்கிறார்கள். அப்பாவி உயிர்களை கொன்று குவிக்கின்றார்கள்.

தீவிரவாத இஸ்லாமியவாதிகளின் தோற்றம் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் அதிகரித்து வருவது அண்மைக்கால நிகழ்வுகளே. இத்தகைய தீவிர வாத தலைவர்கள் சமூகத்தின் தமது ஏக போக உரிமையாக மேலைத்தேய கல்வி முறையையும், அதன் கலாச்சாரத் தாக்கங்களையும் கொண்டவர்கள். இத்தகைய தலைவர்கள் ஏனைய பொதுமக்களைவிட எந்த விதத்திலும் குறைந்தவர்களல்ல. இவர்கள் மேற்கின் மூலம் பலனை அனுபவித்து பிறகு பயங்கரவாதிகளையும், தீவிர வாதிகளையும் உருவாக்குவதில் தீவிர கவனம் செலுத்துகிறார்கள். இந்த இஸ்லாமிய பயங்கரவாதிகள் ஐரோப்பிய நடுத் தர வகுப்பைச் சேர்ந்த புரட்சிக்காரர்கள் பயங்கரவாதிகளை வீட்டும் முழுமையாக வித்தியாசப்பட்டவர்கள். மேலும் 20ஆம் நூற்றாண்டில் இடம்பெற்ற சோஷலிச புரட்சிகளுக்கு காலகோலாய் அமைந்த புரட்சித் தலைவர்களை விடவும் வித்தியாசமானவர்கள். ஏனெனில் இவர்கள் சமூகத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் ஏகத் தலைவர்களாகப் பிரபல்யம் பெற்றார்கள். ஆனால் ஐரோப்பிய பயங்கரவாதிகள் அத்தகைய மக்கள் ஆதரவைப் பெறவில்லை. ஆனால் சேகுவேராவைத் தவிர (இவர் ஆஜெண்தீனாவைச் சேர்ந்த வைத்தியர்) புரட்சிக்காரராக 1960 இல் மாறி இறுதியில் மக்கள் தலைவராக மாறினார்.

இஸ்லாமியத் தலைவர்கள் பற்றி அறியவிரும்பும் ஒருவர் - குறிப்பாக உஸாமா பின்லேடனைப்பற்றி அறிய விரும்புவோர் அவரின் கடந்த காலம் பற்றி அறிந்துகொள்வது அவசியம். அவர்களின் செயற்பாடுகள், அவர்களின் இரத்த நாளங்களில் சதா ஓடிக்கொண்டேயிருக்கும் பகைமை, குரோதம் என்ற நெருப்பு. அவர்கள் மேற்கின் மீது கொண்டுள்ள க்டுமையான வெறுப்பு. போன்றவை பற்றிய எமது போதிய தகவல்கள் அவர்கள் பற்றிய பூரண அறிவை தரும் என்பதில் ஐயமில்லை.

உஸாமா பின்லேடன், அய்மான் அல் ஸவாஹிரி அவர்களின் சம கால தேசத்தவர்கள், பல சவுதி, எகிப்திய நண்பர்கள் ஆகியோர் 1970 - 1980களில் உருவாக்கப்பட்ட மிக மோசமான உற்பத்திகளாகும். இவர்கள் தமது சிறு வயது முதல் அனுபவித்து வந்த செல்வச் செழிப்பு மிக்க டாம்பீக வாழ்வை முழுமையாக நிராகரித்துவிட்டு தீவிரவாத; ஆயுத வாசாரத்தில் குதித்து விட்டனர். இந்தப்

பயங்கரவாதச் செயல்கள் பலமடைவதற்கு சில காரணங்கள் அடிப்படையாக அமைந்தன. மிக முக்கியமாக 1970இல் எண்ணை வள கிராக்கி அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட திடீர் விலையதிகரிப்பும், 1980களில் ஏற்பட்ட ஈரானியப் புரட்சியும் ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட ஜிஹாதிய அலைகளும் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

உஸாமா பின் முஹம்மத் பின் லாதின் சவுதி ஆரேபியாவின் ரியாத் நகரில் பெரும்பாலும் 1957இலேயே பிறந்தார் என குறிப்பிடப்படுகிறது. அப்பொழுது அவரின் தந்தையான முஹம்மத் பின் லாதின் சிறிய கட்டிட கலைஞராகக் காணப்பட்டதோடு யெமனிலிருந்து தொழில் தேடி இறுதியில் சவுதி ஆராபியாவை வந்தடைந்தார். உஸாமா மாத்திரம் அவரின் தந்தைக்கு பிறக்கவில்லை. பல்வேறு மனைவிமார்களின் மூலம் 50 க்கும் மேற்பட்ட பிள்ளைகளை இவரின் தந்தை தனது வாரிசுகளாக பெற்றிருந்தார்.

முஹம்மத் பின் லாதின் நேர்மையான ஒரு மனிதராகக் காணப்பட்டதோடு பிள்ளைகளுக்கு உகந்த கல்வியைக் கொடுத்து அவர்களை வாழ்க்கையில் முன்னிலைக்குக் கொண்டுவர வேண்டும், என்ற வேட்கையுடன் அவர் ஒரே நோக்காகச் செயற்பட்டார். 1960களில் அவரின் குடும்பம் ஹிஜாஸ் பகுதியை நோக்கி நகர்ந்தது. இது சவுதி அரேபியாவின் மேற்குப் பிராந்தியப் பகுதியாகும். இறுதியில் அவர்கள் மதீனாவில் வந்து குடியமர்ந்தார்கள்.

உஸாமா தனது பாரம்பரிய இஸ்லாமிய கல்விகளை மதீனாவிலும் பிறகு ஜித்தாவிலும் தொடர்ந்தார். ஜித்தா, சவுதி ஆரபியாவின் முக்கிய பொருளாதார செங்கடலில் உள்ள - கேந்திர துறைமுகம் ஆகும்.

1970களில் பெற்றோலிய விலையில் ஏற்பட்ட திடீர் உயர்வு முஹம்மத் பின் லாதினின் அதிஷ்டத்தில் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. சவுதி அரேபியாவிலுள்ள சிறந்த அறிஞர்கள், தலைவர்களுடனான நேரடி தொடர்பை ஏற்படுத்திவிட்டது. அத்தோடு நின்றுவிடவில்லை. மன்னர் சவுதுடனான அன்னியோன்ய தொடர்பையும் அவரின் வீட்டுடன் அதிகம் தொடர்பு உள்ளவராகவும் மாற்றிவிட்டது. இவர் சவுதின் கட்டிடங்களை நிர்மானிப்பவராக மாத்திரமன்றி ஏனைய பல தேவைகளை செய்பவராகவும் காணப்பட்டார். உயர்மட்ட நபர்கள், குழுக்களுடனான இவரின் தொடர்பு இறுதியில் இவரை முழு மத்திய கிழக்கிலும் உள்ள மிகப் பெரிய சிறந்த கட்டிட நிர்மாணக்கலைஞராக வளர்ச்சியடையச் செய்தது. பின்லாடின் கோபரேஷன் என அழைக்கப்பட்டது. இவரின் மதிப்பு, மகிமை, என்பன உயர்வதற்கு மன்னர் சவுதினுடைய மாளிகை மக்கா; மதீனாவிலுள்ள இரண்டு பள்ளிவாயில்கள் மீளக்கட்டப்பட்டமை போன்ற விடயங்கள் ஏதுவாக அமைந்தன. 1970களில் பின் லாடின் கம்பனி பாதைகள், கட்டிடங்கள், பள்ளிவாயல்கள், விமான நிலையங்கள் என்றவாறு தமது சிறந்த பணிகளைத் தொடராக செய்து முடித்து வெற்றிப் பாதையில் நடை பயின்று கொண்டிருந்தது. மத்திய கிழக்கிலுள்ள பல ஐரோப்பிய நாடுகள் பின்லாடின் கம்பனிக்கே தமது நாட்டிலுள்ள பல நிர்மாணப்பணிகளை ஒப்படைக்கலாயின.

(இன்னும் வரும்)

மானா மக்கீன் தருவது

அதிவான குழந்தைக்கு அருமருந்து!

- குழந்தையைக் கொஞ்சுங்கள்.
- குழந்தையுடன் விளையாடுங்கள்.
- குழந்தைகள் சொல்வதை உன்னிப்பாகக் கேளுங்கள்.
- உங்கள் குழந்தையுடன் மனம் விட்டுப் பேசுங்கள், சிரியுங்கள், அணைத்துக் கொள்ளுங்கள்.
- குழந்தைகளுடன் பாட்டுப் பாடுங்கள்.
- இசைக் கருவிகளை மீட்டுங்கள்.

வெண்டைக் காய்களை நறுக்கும் போது அதன் காம்புகளைத் தூக்கி எறியாமல் வைத்துக் கொள்ளுங்கள். தோசைக்கு அரைக்கும் போது உளுந்தைச் சற்று குழைத்து விட்டு காம்புகளைச் சோத்து அரையுங்கள். மிருதுவான புதுச் சுவையான தோசை கிடைக்கும்.

"நம்ம ஊரு சேதி "யில் சீதா சொல்லியுள்ள செய்தி!



கொஞ்சும் கொள்ளுப் பேரப்பிள்ளைகள்

தனது பேரன்களின் முத்த மகளில் நனைகிறார் ராஜஸ்தான் தலைநகர் ஜெய்பூரில் வசிக்கும் 125 வயது ஹபீப் மியான். அவரது பென்ஷன் புத்தகத்தில் மியான் 1878, மே 20 ஆம் திகதி பிறந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளார் என்பதற்காக ஆதாரங்களுடன் கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்துக்குத் தெரிவிக்கப் போவதாக மியானின் கொள்ளுப் பேரன் சபன் மாப் தெரிவித்தார். மியான் 6 தலைமுறைகளைப் பார்த்தவர்.

புற்றுநோய் வராதிருக்க

காய்கறிகளும், பழங்களும் நிறையச் சாப்பிடுங்கள்.

கொழுப்புச் சத்துள்ள உணவுப் பண்டங்கள் (குறிப்பாக இறைச்சியின் கொழுப்பு) ஊறு விளைவிக்கும் என்பதை உணருங்கள்!

எண்ணெய்யில் பொரித்த உணவுகளை அதிகமாக உட்கொள்வதைத் தவிருங்கள்.

உடலில் ஏதாவது எச்சரிக்கை அறிகுறி தோன்றுவதை அசட்டை செய்யாதீர்கள் முறையான சோதனை செய்து கொள்ளுங்கள்.

கை நாட்டு

இலங்கையில் அத்தனை புழக்கத்தில் இல்லாத வார்த்தை. இது இந்தியாவில் சாதாரணம். அங்கே 4 கோடி பேர் கைநாட்டுகள்தான். அப்படியென்றால் கல்வி அறிவில்லாதவர்கள்; கைவிரலைக் கொண்டு கையொப்பம் போடுவார்கள்.

நூல்கள் உயர்த்தின

சோமருடைய காவியம்
அலெக்ஸாண்டரை மாவீரனாக்கியது.
நெப்போலியனும் வீரர்களின்
வரலாறுகளைப் படித்து வீரரானார்.

புகை பிடிக்காதீர்

பலஸ்தீன முஸ்லிம்களைக் கொல்லாதீர்!

புகை பிடிப்பதற்கும் முஸ்லிம்கள் கொலை செய்யப்படுவதற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கத் தோன்றுகின்றதா? சி. ஐ.ஏ. யின் அறிக்கையிலிருந்து கிடைத்த தகவல் வருமாறு:

1. உலக மொத்த மக்கள் தொகை 650 கோடி.

2. மொத்த முஸ்லிம்களின் எண்ணிக்கை 200 கோடி (அதாவது ஒவ்வொரு 4 மனிதனுக்கு ஒரு முஸ்லிம்)

3. உலகில் சிகரட் புகைப்பவர்களின் எண்ணிக்கை 155 கோடி அல்லது 18%.

4. இவர்களில் முஸ்லிம்களின் எண்ணிக்கை 40 கோடி.

நீங்கள் அறிய வேண்டிய முக்கிய விடயம்

* பிலிப்மோரிஸ் என்ற சிகரட் நிறுவனம்தான் உலகிலேயே அதிகளவில் சிகரட் உற்பத்தி செய்து விற்கும் நிறுவனம்.
* தனது மொத்த இலாபத்தில் பிலிப்மோரிஸ் 12% இஸ்ரேலருக்கு நன்கொடையாக (முஸ்லிம்களுக்கு எதிராக நடக்க) கொடுக்கிறது.
* 40 கோடி முஸ்லிம்கள் நாளொன்றுக்கு ஒரு பாக்கெட் சிகரட் புகைத்தால், 80 கோடி அமெரிக்க டொலர்கள் பிலிப்மோரிஸ் நிறுவனத்திற்குக் கிடைக்கிறது.
* இதில் 10% இலாபம் என்று கணக்கிட்டால் அது 8 கோடி டொலர் ஆகும்.
* 12% இலாப ஈவு இஸ்ரேலுக்கு, முஸ்லிம்களுக்கு எதிராக நடக்க நன்கொடையாகக் கொடுக்கிறது. 8 கோடியில் 12% 96 இலட்சம் டொலராகும்.

ஆக ஒரு நாளைக்கு ஒரு பக்கெட் சிகரட் குடிப்பதால் ஒவ்வொரு நாளும் முஸ்லிம்கள் இஸ்ரேலுக்கு 96 இலட்சம் டொலர் அங்குள்ள முஸ்லிம்களைக் கொல்ல நன்கொடையாக பிலிப்மோரிஸ் நிறுவனம் மூலமாகக் கொடுப்பதாகப் பொருள்.
ஆகவே, முஸ்லிம்களே இன்றுமுதல் புகை பிடிப்பதை நிறுத்துவதன் மூலம் நாம் பாலஸ்தினிய சகோதரர்களை ஓரளவுக்காவது காப்போம்.

நன்றி
சிங்கப்பூரிலிருந்து பூகூஃப் ஹபீப்புல்லா அனுப்பிவைத்த தகவல்.

இனிய சுவடு முஸ்லிம் குரல்

முத்து மணி போல்
முகம் மலர சத்தான ஆக்கங்கள்
நித்தம் தரும் முஸ்லிம் குரலே!

உன் தகவல்களில்
என் இதயத்தின் பாசம்
இத்தியாதி இத்தியாதி என்கின்றது

குமுறும் என் வார்த்தைகளை
துயிலுருத்து தூர எரியும்
சக்தி உன்னில் எல்லோர் கையிலும்
இழையோடுகின்ற முஸ்லிம் குரலே! நீ

முஸ்லிம் குரலே வளர்வோருக்கு
கிளையாக பரவி விடும்
பொக்கிஷம் நீயே!
புன் இதயங்களை பூவாக்குவதும் நீயே!

என்னால் எதனையும் மறக்கலாம்
ஆனால் என் இனிய சுவடு
முஸ்லிம் குரலை மறக்கவே முடியவில்லை.

ஏ.எல் நினால், ஒட்டமாவடி - 02

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்கள் அடிமைகளும் அல்ல,

உங்களால் ஆளப்பட வேண்டியவர்களுமல்ல

இலங்கையில் தற்போது என்ன நடக்கிறது. ராஜ்ஜமா? அல்லது அராஜகமா? நாலாதிசையிலுமிருந்து ஒரேஒரு குரல்தான் கேட்கிறது.

பயமுறுத்தல்கள் எங்களுக்கு அடங்கிப் போங்கள். இல்லையேல் சுடுவோம் கொலை செய்வோம். இதற்குப் பெயர்தான் சமாதானமா? நாய் வாலை நிமித்த முடியுமா? என்னும் பழமொழிக்கொப்ப மேலும் Tigers Never Change Their Sport என்பதற்கும் ஒப்ப புலிகளை மாற்றவும் முடியாது.

வாழைச்சேனையில் மூதூரில் நடந்ததெல்லாம் என்ன? எச்சரிக்கை! முஸ்லிம்களே வாய்மூடி மௌனிகளாக எம் பின் வாருங்கள். இல்லையேல் உங்களைச் சுடுவோம். உங்கள் வளங்களை அழிப்போம். என்னும் அறை கூவல்தான் அது. வாருங்கள் மோதிப்பார்ப்போம் என அட்டகாசம் பண்ணியிருக்கிறார்களே! மூதூரில் இன்னுமா இவர்களுடன் தொடர்பு வைக்க வேண்டும். சேர்ந்து நடக்க வேண்டும். நாங்களும் பனங்காட்டு நரிகள். வாழ்வும் சாவும் அல்லாஹ்வின் கையில் என ஈமான் கொண்டவர்கள். இதற்கெல்லாம் பயப்பட மாட்டோம். எந்த நேரமும் மரணத்தையிட்டுப் பயப்படாது இருப்பவர்கள் முஸ்லிம்கள் மட்டுமே.

ஜே.ஆர். ஜெயவர்த்தனா - ராஜீவ் காந்தி ஒப்பந்தம். அது ஓர் அடிமைச்சாசனம் அது எழுதியதோடு வடக்குக் கிழக்கு ஒன்று சேர்க்கப்பட்டது. இது நமது மக்களின் நன்மைக்காக சேர்க்கப்பட்டதல்ல.

தற்போதுள்ள சுயகௌரவம் படைத்த நாங்கள் செய்யக்கூடியது எதிர்கால இளம் சமூதாயத்தின் நன்மை கருதி அவர்களின் எதிர்காலம் வளம்பெற வடக்குக் கிழக்கு இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டும். அப்போதுதான் உண்மையான தமிழர்கள் முஸ்லிம்கள் தலை நிமிர்ந்து வாழமுடியும். அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்கள் அத்தனையும் தாங்கள் பதவியில் இருப்பதற்காகப் போடும் தப்புத் தாளங்கள்தான். யார் பொண்டாட்டி யாரோடு போனாலும் தனக்கு நாலு பணம் என்பதாகும்.

புலிகளின் செயலால் அரசாங்கமே சுருண்டு இருக்கும் நிலையில் ஏப்படி முஸ்லிம்கள் முகம் கொடுக்க முடியுமெனும் நினைப்பா? பலஸ்தீனத்தை பாருங்கள். T.V யில் இளைஞர்கள் செய்வதைக்காட்டுகிறார்கள் தானே. சிறுவர்களின் கல்லடிக்கும். கெற்றபுள் அடிக்கும் முகம் கொடுக்க முடியாது. இஸ்ரேல் படைகள் துவக்கோடு புற முதுகு காட்டி ஓடுகிறது. முஸ்லிம்கள் நினைத்திருந்தால் புலிகளின் வாலை எப்போ நறுக்கியிருக்கலாம். EPRLF பதவியிலிருக்கும் போது புலிகளுக்கு புகலிடம் கொடுத்தவர்கள் முஸ்லிம்களே. இதையெல்லாம் மறந்துதானே முஸ்லிம்களை காத்தான்குடியிலும் ஏனைய இடங்களிலும் சுட்டுக் குவித்தார்கள். இப்படியிருந்தும் பல முஸ்லிம் இளைஞர்கள் புலிகளோடு சேர்ந்து போராடி மடிந்தனர். முஸ்லிம் இளைஞர்களில் சந்தேகம் கொண்ட புலிகள் தன்னோடு இருந்த முஸ்லிம் இளைஞர்களை கொலை செய்தனர். இதனை அறிந்ததும் விட்டு

விலகினார்கள்.

இன்று மர்ஹூம் அஷ்ர்ஃப் உயிரோடிருந்திருந்தால அன்டன் பாலசிங்கத்தால் அஷ்ர்ஃபின் கர்ஜனைக்கு முகம் கொடுத்திருக்க முடியாது. அவரின் விவாதத்தின் முன் அன்டன் பாலசிங்கம் கால் தூசு. அவருடைய ஒரே மூச்சு கிழக்கு மாகாணம் தனிமைப்படுத்த வேண்டும் என்பதுதான். இறுதியாக என்னை 16-09-2000ஆம் ஆண்டு சனிக்கிழமை காலை சந்தித்த போதும் இதைத்தான் வலியுறுத்தினார். அவரை இறுதியாக சந்தித்தவனும் நான்தான். ஏன்? இரண்டு மாகாணங்கள் ஒன்று சேர்ந்திருக்க வேண்டும். கிழக்கு மாகாணத் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒருவரில் ஒருவர் தங்கி வாழ்பவர்கள். வாழ்ந்து பழகியவர்கள் ஆகவே அவர்களைப் பிரிக்க முடியாது. பிரிக்கவும் கூடாது.

தினகரன், வீரகேசரி, சுடர் ஒளி போன்ற பத்திரிகைகள் சில யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு உதவி புரிந்து புலிகள் சார்பாக பல புனைப்பெயரில் கட்டுரைகளும் புதினச் செய்திகளும் பிரசுரிக்கிறார்கள். முஸ்லிம்கள் எழுதினால் புறக்கணிப்பு. ஆளுக்கொரு கட்சியை வைத்துக் கொண்டு சந்தர்ப்பங்களைப் பாவித்து அறிக்கை விடுகிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தக்கவைப்பதற்காக புலி சார்பாக அறிக்கை விடுகிறார்கள்.

20-07-2003 ஞாயிறு வீரகேசரியில் யாழ்ப்பாணம் பா.உ. அப்பாதுரை வினாயக மூர்த்தி பா.உ. மாவை சேனாதிராஜா, பா.உ. சிவசக்தி ஆனந்தன் ரெலோ செயலாளர் இந்திர குமார் பிரசன்னா ஆகியோர் அதாவுல்லாவின் கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட வேண்டுமென்ற கூற்றை கண்டனம் செய்துள்ளனர்.

இவர்களுக்கென்ன யோக்கியதை உண்டு கண்டனம் செய்ய? புதிதாக அதுவும் இன்னல்களுக்கு மத்தியில் சேர்க்கப்பட்ட கிழக்கு மாகாணத்தை பிரிக்கும்படி கேட்பதில் பிழையில்லையே. எங்கள் மாகாணம் கிழக்கு மாகாணம். நாங்கள் இங்கேயே பிறந்து வளர்ந்து கடைசி மூச்சைக்கூட இங்கேயே விடப் போபவர்கள். எங்களுக்கில்லாத உரிமையா இவர்களுக்கு? வடக்குக் கிழக்கு தற்காலிக இணைப்புத்தானே. என்றோ பிரிய வேண்டியதுதான். அதை இன்றே பிரிக்கும் படி கேட்கிறோம்.

கிழக்க மாகாண முஸ்லிம்களுக்கு அன்பான வேண்டுகோள்! எங்களின் நிலையை நாங்களே தீர்மானிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. எங்கள் எதிர்கால சந்ததிகள் சமாதானமாகவும் சந்தோஷமாகவும் சபீட்சமாகவும் வாழ வேண்டுமானால் கிழக்கு மாகாணம் தனித்தியங்க வேண்டும். நாங்களும் இங்குள்ள தமிழர்களும்தான் ஆளவேண்டும்.

நாங்கள் மிகவும் சந்தோஷமாகக் கூறுகிறோம். உங்கள் வடக்கு மாகாணத்தை நீங்கள் ஆளுங்கள் எங்களை விட்டுவிடுங்கள். கிழக்கு மாகாணத் தமிழர்கள் மௌனிகளாக இருக்கிறார்கள். அவர்கள் அந்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். முஸ்லிம்களோ இவ்விடயத்தில் ஒன்றுபட்டுவிட்டனர். ஒரு அதாவுல்லா இல்லை ஆயிரம் அதாவுல்லக்கள் முன்வருவார்கள். கட்டாயம் பிரிக்க வேண்டும் எனக்குரல்கொடுக்க. யாருடைய வாலையும் பிடித்துக் கொண்டுவாழ நாங்கள் பச்சோந்திகளல்ல. தயவுசெய்து முஸ்லிம் காங்கிரஸ்காரரும் ஏனைய பிரிவினரும் இந்த விடயத்தில் உடன்பட்டு நிற்க வேண்டும். மக்களின் எண்ணத்தை நிறைவு செய்ய வேண்டும்.

மக்களுடைய ஒரே ஆசை நாங்கள்

கே.எல். அபூபக்கர் லெப்பை
அஷ்ர்ஃபின் ஆசிரியர்

சுய மரியாதையோடு வாழ வேண்டும் என்பதே. தமிழ்ச் செல்வன் அறிக்கைவிட்டிருக்கின்றார் முஸ்லிம்கள் தனித்துப் பேச்சுமேசைக்கு வரமுடியாதென்று. முஸ்லிம் காங்கிரஸ்இல்லாவிட்டால் யு.என்.பி. அரசாங்கமே அமைத்திருக்க முடியாது. இப்போதும் பறுவாயில்லை எங்களின் கோரிக்கையை நிறைவேற்றுவோரிடம் சேர்ந்து எங்கள் மக்களினதும் முஸ்லிம் சமூகத்தினதும் பங்கைப் பெறவேண்டும். தனிமாகாணம் - கிழக்கு மாகாணம். இப்பவே இழுபறியிலிருக்கும்போது கொஞ்சமேனும் சந்தர்ப்பம் கிடைத்தால் எங்களை தூக்கி வீசி விடுவார்கள். இதை அனுபவிக்க வேண்டியவர்கள் தற்போது கிழக்கில் வாழும் முஸ்லிம்கள்தான். அதியுயர் பாதுகாப்பு வலையத்தில் வசித்தவர்களை மீள் குடியேற்றம் செய்ய வேண்டுமென கூறுபவர்கள் ஏன் தூரத்தப்பட்ட முஸ்லிம்களை மீள் குடியேற்றம் செய்ய வேண்டுமென ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை? யாழ்ப்பாணத்தை தமிழ்ப் பிரதேசமாக்க வேண்டும் எனும் நப்பாசையா?

முஸ்லிம்களின் குரல் முஸ்லிம் காங்கிரஸ். என ஏற்றுக் கொண்டோர் உடனடி முடிவுக்கு வரவேண்டும். இல்லையேல் மக்களின் தீர்ப்பை ஏற்கவேண்டி வரும். காலம் தாழ்த்தாது முடிவெடுக்கவும்.

சர்வதேச தினங்கள், வாரங்கள்

மார்ச் - 08 ஐக்கிய நாடுகள் மகளிர் உரிமைகள், சர்வதேச சமாதான தினம்.
- 21 இனப்பாரபட்ச ஒழிப்புக்கான சர்வதேச தினம்.
- 21 முதல் இனவாதம், இனப்பார பட்சம் என்பவற்றுக்கு எதிராகப் போராடும் மக்களுடனான ஒருமைப்பாட்டு வாரம்.
- 22 உலக நீர் தினம்.
- 23 உலக வளிமண்டலவியல் தினம்.

ஏப்ரல் - 07 உலக சுகாதார தினம்.
- 23 உலக புத்தக பதிப்புரிமை தினம்.

மே - 03 உலக பத்திரிகைச் சுதந்திர தினம்.
- 15 சர்வதேச குடும்ப தினம்.
- 17 உலக தொலைத் தொடர்பு தினம்.
- 22 சர்வதேச உயிரியல் பன்முகத்தன்மை தினம்.
- 25 முதல் சுயாட்சியற்ற பிரதேச மக்களுடனான ஒருமைப்பாட்டு வாரம்.
- 31 உலக புகைத்தல் ஒழிப்பு தினம்.

ஜூன் - 04 ஆக்கிரமிப்புக்குள்ளான அப்பாவிக் குழந்தைகள் சர்வதேச தினம்.
- 05 உலக சுற்றாடல் தினம்.
- 17 உலக பாலைவன வறட்சி ஒழிப்பு தினம்.
- 20 உலக அகதிகள் தினம்.
- 26 போதைப்பொருள் பிரயோகம் மற்றும் கடத்தலுக்கெதிரான சர்வதேச தினம்.

ஜூலை இம்மாதத்தின் முதலாவது சனிக்கிழமை சர்வதேச கூட்டுறவு தினம்.
- 11 உலக சனத்தொகை தினம்

ஆகஸ்ட் - 09 உலக பூர்வீக மக்களின் சர்வதேச தினம்.
- 12 சர்வதேச இளைஞர் தினம்.
- 23 அடிமை வியாபாரத்தையும் அதனை ஒழித்தலையும் நினைவு கூரும் சர்வதேச தினம்

செப்டம்பர் - 08 சர்வதேச எழுத்தறிவு தினம்.
- 16 ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதற்கான சர்வதேச தினம்.

இம்மாதத்தின் 3 ஆவது செவ்வாய்க்கிழமை சர்வதேச சமாதான தினம்.

இம்மாத கடைசிச் செவ்வாய்க் கிழமை உலக கடல்வள தினம்.

ஒக்டோபர் - 01 சர்வதேச வயோதிபர் தினம்

இம்மாதத்தின் முதல் திங்கட்கிழமை உலக குடியிருப்பு தினம்.
- 04 சர்வதேச விண் வெளி தினம்.
- 05 உலக ஆசிரியர் தினம்.
- 09 உலக தபால் தினம்
- 10 உலக மனநோய்ச் சுகாதார தினம்

இம்மாதத்தின் 2வது புதன் கிழமை சர்வதேச இயற்கை அனர்த்த குறைப்பு தினம்.
- 16 உலக உணர்வு தினம்.
- 17 சர்வதேச வறுமை ஒழிப்பு தினம்.
- 24 ஐக்கிய நாடுகள் தினம்.
- 24 உலக அபிவிருத்தி தகவல் தினம்.

இம்மாதத்தின் 24-30 படைக்குறைப்பு வாரம்.

நவம்பர் - 16 சர்வதேச பொறுமை தினம்.
- 20 ஆபிரிக்க கைத்தொழில் மய தினம்.
- 20 சர்வதேச சிறுவர் தினம்.
- 21 உலக தொலைக்காட்சி தினம்.
- 25 பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்புக்கான சர்வதேச தினம்.
- 29 பாலஸ்தீன மக்களுடனான சர்வதேச ஒருமைப்பாடு தினம்.

டிசம்பர் - 01 உலக எய்ட்ஸ் தினம்.
- 02 சர்வதேச அடிமை ஒழிப்பு தினம்.
- 03 சர்வதேச அங்கவீனர் தினம்.
- 10 மனித உரிமைகள் தினம்.

புகை பிடித்தலற்ற உலகை நோக்கி....! (7)

பிறருக்கு ஏற்படும் பாதிப்புக்கள்

புகைப்பதால் புகை பிடிப்பவர் மட்டும் பாதிக்கப்படுவதில்லை. அவர் உள்ளிழுத்து வெளித்தள்ளும் புகையினால் அருகிலிருப்போரும் பாதிக்கப்படுகின்றனர். சிகரெட் புகையை விரும்பாதவர்களுக்கு அருகில் புகைக்கப்படும் போது அவர்கள் அடையும் துன்பம் சொல்லும் தரம் அன்று. சிலருக்கு இதனால் வாந்தி ஏற்படுவதுமுண்டு. வேறு சிலருக்கு தலைச்சுற்று வருவதுமுண்டு. மக்கள் குழுமியிருக்கும் இடங்களில் புகைக்கப்படும் போது அருவருக்கத்தக்க புகையினால் அவதிப்படுவோர் படும் பாட்டை நன்கு அவதானிக்கலாம். இதனைக்கூட பொருட்படுத்தாது புகைப்போரை புண்ணியவான்களாக கருதத்தான் முடியுமா? குறைந்த பட்சம் பிற சகோதரனின் மனதை புண்படுத்துகின்றோம் என்ற எண்ணம் கூட இவர்களின் உள்ளங்களில் எழுவதில்லையா? சிகரட் புகையினால் வளியை நச்சுத்தன்மை வாய்ந்ததாக ஆக்குகின்றோமே என்ற உணர்வுகூட பிறப்பதில்லையா? மனசாட்சியோடு சிந்திப்பாகளாக! கூட மட்டுமல்லாமல் புகைப்பவரின் வாயிலிருந்து வீசும் ஒருவகை துர்வாடையும் அடுத்தவரை துன்புறுத்துவது கவனிக்கற்பாலானது.

இஸ்லாமிய நோக்கில் புகைத்தல்

ஓர் இறை விசுவாசி ஹலால் (அனுமதிக்கப்பட்டது), ஹராம் (தடைசெய்யப்பட்டது) ஆகிய பதங்களோடு அன்றாட வாழ்வில் மிகுந்த தொடர்புடையவன். எனவே, எதனையும் இப்பின்னணியிலேயே நோக்குபவனாக இருக்க வேண்டும். புகைத்தல் பற்றிய இஸ்லாத்தின் தீர்ப்பை பார்க்க ஒரு முஃமின் (முனையும்) போது புகைத்தலும் உடல் ரீதியான பாதிப்புக்கள், பணரீதியிலான பாதிப்புக்கள், பிறருக்கு ஏற்படும் பாதிப்புக்கள் எனும் மூவகை பாதிப்புக்களும் முக்கியமாக கருத்திற் கொள்ள வேண்டியுள்ளது.

புகையிலைப் பழக்கம் நபி அவர்களின் காலத்தில் அவர்களின் சூழலில் இருக்கவில்லை. அது பற்றி அவர்கள் அறிந்திருந்ததாகவும் தகவல்கள் இல்லை. எனினும் சத்திய



சன்மார்க்கம் இஸ்லாம் ஹலால், ஹராம் பற்றிய பொதுவான வரையறைகளை தெளிவாக சொல்லித்தந்திருக்கின்றது. தேகாரோக்கியத்தைப் பாதிக்கின்ற, அடுத்தவரைத் துன்புறுத்துகின்ற, பணத்தை வீரயம் செய்கின்ற சகலவற்றையும் இஸ்லாம் தடை (ஹராம்) செய்துள்ளது.

"மேலும் அவர் (தூதர்) தூய்மையான ஆகாரங்களையே அவர்களுக்கு ஆகுமாக்குவார். கெட்டவற்றை அவர்களுக்குத் தடுத்துவிடுவார்." (7-157)

"(நபியே!) அவர்கள் (உண்பதற்குத்) தங்களுக்கு ஆகுமாக்கப்பட்டவை எவை என்று உம்மிடம் கேட்கின்றனர். நீர் கூறுவீராக :

(சுத்தமான) நல்ல பொருட்கள் உங்களுக்கு ஆகுமாக்கப்பட்டுள்ளன. இன்னும் வேட்டையாட நீங்கள் பயிற்சியளித்தவர்களாக இருக்க - அல்லாஹ் உங்களுக்குக் கற்றுத் தந்தவற்றிலிருந்து அவைகளுக்கு நீங்கள் (வேட்டையாட) கற்றுக் கொடுப்பவர்களாக இருக்க - வேட்டைப் பிராணிகளில் நீங்கள் கற்றுக் கொடுத்தவை வேட்டையாடியதும் ஆகுமாக்கப்பட்டுள்ளது." (5-4)

அல்லாஹ்வினால் உட்கொள்ள அனுமதிக்கப்பட்டவை (ஹலால்) ஆரோக்கியத்துக்கு நல்லனவாய் இருக்க, அவனால் உட்கொள்ள அனுமதிக்கப்படாதவை (ஹராம்) ஆரோக்கியத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தக் கூடியவை என்பதை மேற்படி இரு இறைவசனங்களும் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. புகைத்தல் உடலுக்கும், ஆரோக்கியத்துக்கும் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்துகின்றதென்பதை நாம் ஏலவே அலசி விட்டோம்.

"இன்னும் நீங்களே உங்களை கொலை செய்து கொள்ளாதீர்கள்." (4-29)

"உங்கள் கைகளாலேயே (உங்களை) அழிவின் பால் போட்டுக் கொள்ளாதீர்கள்." (2-195)

உடனடியாகவோ, சிறுகச் சிறுகவோ தற்கொலை புரிவது பொதுவாக தடை செய்யப்பட்டுள்ளமை மேற்படி இரு வசனங்களிலிருந்தும் தெளிவாகின்றது. புகைத்தல் சிறுகச் சிறுக மேற்கொள்ளப்படும் தற்கொலை முயற்சி என்பதை நாம் ஏற்கனவே படித்து விட்டோம். பின்வரும் ஹதீஸ் இவ்வேளையில் கவனத்திற்குரியதாகும்.

எச்.அப்துல் நாசர் (ரஹ்மானி)
பொதுச செயலாளர், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை.

"எவர் ஒருவர் தன்னையே நஞ்சூட்டிக் கொலை செய்து கொள்வாரோ அவரது நஞ்சு அவரின் கையிலிருக்கும் நிலையிலேயே நரகத்தில் வீழ்ந்து, நிரந்தரமாக அங்கேயே இருப்பார்." (ஸஹீஹ் முஸ்லிம்)

புகையிலை உற்பத்திகளில் காணப்படும் நிகோடின் முதலான நச்சுப் பதார்த்தங்கள் புகைப்பிரியர்களை கொஞ்சம் கொஞ்சமாக தற்கொலைக்கு இட்டுச் செல்கின்றன. "கண்ணாடி, கல், நஞ்சு போன்ற உடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய எதனையும் சாப்பிடுவது ஹராமாகும்" என இமாம் நவவீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். (ரவ்ழதுத் தாலிபீன்)

"போதையூட்டக் கூடிய, சோர்வை ஏற்படுத்தக் கூடிய அனைத்தை விட்டும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள்" (அறிவிப்பவர் : உம்மு ஸல்மஹ் (ரழி). நூல் : அபூ தாவூத்)

உடலுக்கு சோர்வை உண்டு பண்ணும் சகலதும் முற்று முழுதாக தடை செய்யப்பட்டுள்ளமை மேற்படி ஹதீஸிலிருந்து புலனாகின்றது. புகைத்தல் புகைஞருக்கு சோர்வை ஏற்படுத்துகின்றது என்பதை நாம் மேலே கண்டோம்.

(இன்னும் வரும்)

அடங்கிப்போன ஆட்டங்கள்...!

2001-09-11
இத்தினம் அமெரிக்காவுக்கு எதிராக தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. அதற்கான கவிதை

அது
செப்டம்பர் 11
சாய்ந்த
வர்த்தக மையத் தோடு
சரிந்தது
அமெரிக்கனின் புகழ்
அன்றோடு எழுந்த
புஷ்ஷின்
வெறியாட்டம் - இன்னும்
அடங்க வில்லை!

அன்றைய
பொழுதுக்காய்
எகிரிப் பாய்ந்த
குருதிகளுக்காய்
என் விழிகள்
கண்ணீர் துளிகளை
தாரை வார்க்கும்
ஆனால்
அப்பொழுது
உடைக்கப்பட்ட
ஆணவக்காரனின்
மூக்குடைப்புக்காய்
இன்றைக்கும்
ஆனந்தம் கொள்கிறேன்!

ஊதி பெருக்கிய
தீப் பிளம்பைப் போல்
ஒசாமாவின் புகழ்
உச்சி மலையேற
உழைத்தவர்கள்
அமெரிக்கர்கள்!

தோராபோராவை
தோண்டத்
தோண்ட
கிடைத்தது
தோல்விகள்தான்
இன்னும் உங்களின்
முயற்சி
ஈரான்
இரட்டை சகோதரிகளின்
நம்பிக்கையாய்
உடைந்து போகும்!

புஷ்ஷே...?
உன் கலண்டரின்
செப்டம்பர் 11ரை
மறைத்து விடலாம்!
உன் நாட்குரிப்பேட்டில்
தாக்குதல் நிகழ்ந்த
நாளை
கிழித்து விடலாம்!

புத்தளம் நளீம் ரூமி

உனக்கெதிரான
இணையத்தளங்களை
ஒழித்துவிடலாம்
இப்படி
நடந்த சம்பவத்தை
நீ மூடி, மூடி
மறைக்க முயற்சித்தாலும்
அமெரிக்க
பிளாட்பார
பிச்சைக்காரன் கூட
மறந்திருக்க மாட்டான்
இந்த
கறைபடிந்த செப்டம்பரை

முடிந்தவரை - உன்
போராட்டத்தை
நடத்து - நீயாக
அணைக்கும் வரை
எங்கள் நெருப்புக்களும்
அணையாது!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே வடக்கு, கிழக்கை துண்டாடி விடவேண்டுமென்பதில் ஜனாதிபதியும் சில முஸ்லிம் அரசியல்வாதிகளும் தீவிரம் காட்டிவரும் நிலையில் இந்த நோக்கத்திற் காகவே முஸ்லிம் தீவிரவாத அமைப்புகளும் உருவாக்கப்படுகிறது என்றால் அதன் விளைவுகளை எண்ணிப் பார்க்கத் தேவையில்லை. ஆனாலும் தற்போதைய குழ்நிலையில் இவ்வாறு தீவிரவாத அமைப்புகள் உருவாவது வேறு கேள்வி களை எழச் செய்யவில்லை.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகள் முன்னெப்போதும் இல்லாத வகையில் பல திருப்பங்களையும், திடீர் மாற்றங்களையும், குத்துக்கரணங்களையும் சந்தித்துவருகிறது. இத்தகைய குழப்பகரமான சூழ்நிலை தோன்றிய பின்பும் முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம்களுக்கான தீர்வாக ஆளுக்கொன்றைக் கூறிக்குழப்புகின்றனர் அல்லது குழம்புகின்றனர். முஸ்லிம்களின் பிரச்சினை இதுதான். நாங்கள் கேட்கும் தீர்வு இதுதான் என ஒருமித்த கருத்தேதும் இதுவரை வெளிப்படுவதாக இல்லை.

நிலைமை இவ்வாறு இருக்கையில் தமிழ் பேரினவாதத்தின் கொலைக்கரம் முஸ்லிம் சமூகத்தின் குரல்வளையைத் தினம் இறுக்குகிறது. ஆயுத ரீதியான முஸ்லிம்களை ஒடுக்கும் பொறுப்பை புலிகள் ஏற்க, நிருவாக ரீதியாக அநீதியிழைக்கும் கடமையை வடக்கு கிழக்கு மாகாணசபைத் தமிழ் அதிகாரிகள் ஏற்றுள்ளனர். அதேவேளை கருத்தியல் ரீதியாக முஸ்லிம்கள் மீது சொற்போர் தொடுக்கும் பொறுப்பை தமிழர் ஊடகங்கள் ஏற்றுள்ளன.

விற்பனைக்காக தமிழ்ப்பேசும் மக்களின் குரல் எனக்கூறிக் கொண்டாலும் முஸ்லிம்கள் மீதான புலிகளின் அராஜகத்தை நியாயப்படுத்துவதில் அனைத்து தமிழர் பத்திரிகைகளும் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகளாகவே செயற்படுகின்றன. இதற்கு உதாரணமாக பல்நூறு சம்பவங்களைக் கூறலாம். ஒன்றை மட்டும் இங்கு நோக்குவோம்.

அண்மையில் திருமலையில் வைத்து இரு முஸ்லிம் இளைஞர்கள் புலிகளால் கொல்லப்பட்டனர். அதனை இனவாதக் குரல் பத்திரிகை, 'உஸாமா தலைவர் கொல்லப்பட்டார்' (புஷ் அறிந்தால் டொலர் தருவார்) என செய்தி (பொய்) வெளியிட்டிருந்தது. அதேவேளை கொன்றவர்களை 'இனந்தெரியாத நபர்' எனக்கூறியுள்ளது. கொல்லப்பட்டவரை உஸாமா தலைவர் எனக் கண்டுபிடிக்க முடிந்த இனவாதக் குரலினால் கொலை செய்தவர் (புலிகளை)களை இனங்காண முடியாமல் போய்விட்டமை விந்தையல்லவா?! தமிழர் பத்திரிகைகளின் முஸ்லிம்கள் மீதான இனவாதப் போக்கில் இது ஒரு துளிதான்.

தமிழ் அச்சு ஊடகங்கள்தான் பூர்வமாக வினாத்தொடுப்பார். பின்பு மூட்டிவிடுவார். சிண்டு முடிப்பார். உடனே முஸ்லிம் தலைவர்கள் ஒருவர் மீது ஒருவர் சேறு பூசுவர். இடையில் புகுந்து தடுக்காமல் நாற்றம் வெளிவரட்டும் என இந்த ரங்கா ராசிப்பார்.

சில சமயம் முஸ்லிம் அரசியல்வாதிகளையும், தமிழ் அரசியல்வாதிகளையும் மூட்டிவிடுவார். முஸ்லிம்களுக்கு எதிராக தமிழ் அரசியல்வாதிகள் வீண்பழி சுமத்தும்போது நன்றாக நேரம் வழங்குவார். முஸ்லிம் அரசியல்வாதிகள் ஆதாரத்துடன் பதிலளிக்க முற்படுகையில் இடைமறித்து வேறொரு கேள்வியைக் கேட்டு திசைதிருப்பிவிடுவார். இப்படி பேய்க்காட்டுவதை விளங்காத நம் அரசியல்வாதிகளும் அசடு வழிவார்களேயொழிய ரங்காவை தடுத்து நிறுத்தி தமது கருத்தை முன்வைக்க முற்படமாட்டார்கள்.

குதிரை வட்டியில் வைத்து இழுத்தனர் என்ற ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்த உண்மையை ஹாஜியார் கூறாமல் விட்டது அல்லது மறந்தது ஏனென்று புரியவில்லை.

நிறைவான அரசியல் ஞானம் உள்ள அமைச்சர் அஸ்வரை, மின்னல் நடத்தும் ரங்கன் திக்குமுக்காட வைத்துவிட்டார். ஆமாம் எல்லோரும் கேட்கவிரும்பும் கேள்வி ஒன்றைக் கேட்டார். அதாவது "அமைச்சர் அவர்களே! எதிர்க்கட்சியில் இருக்கும் போது சமூகத்துக்காக குரல் கொடுக்கும் நீங்கள், ஆளும் கட்சியானதும் அமுங்கியதென்ன" என்றார். அமைச்சர் நிலைகுலைந்து போனார். பதிலாக ஏதேதோ கூறினார்.

பாராளுமன்றத்திலே ரவூப் ஹக்கீம், எம்.எச். முகம்மது ஆகியோர்மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுப்பற்றி அஸ்வர் அவர்கள் ஒரே வரியில் கூறியபோது வேளை" என்று ஒன்றை ஆரம்பித்துள்ளார்கள். போகிற போக்கைப் பார்த்தால் மின்னலை விஞ்சிவிடுவார்கள் போல் தெரிகிறது. அவர்களது பாணியே தனி. அவர்கள் திருக்குறளெல்லாம் சொல்லி அறிவிப்பாளர்களாகத்தான் நிகழ்ச்சியை ஆரம்பிக்கின்றனர். பேட்டிகாணத் தொடங்கிவிட்டால் தன்னிலை மறந்து பரவசமடைகின்றனர். புலிகளின் பிரதிநிதிகளாகி வினாத்தொடுக்கத் தொடங்கி விடுகின்றனர். அவர்களது உத்தி பின்வருமாறு...

மூதூர் முகம்மதலி ஜின்னா ஜே.பி.

அதாவது சர்ச்சை தொடர்பில் பேட்டி காண வேண்டுமானால் உடனே தமிழ் அரசியல்வாதிகளுக்கு அறிவித்துவிடு கின்றனர். அவர்கள் தமது இனவாத நாக்கைத் தீட்டிக்கொண்டு பொய்யான புள்ளிவிபரங்களுடன் தயாராக இருப்பர். முதலில் முஸ்லிம் அரசியல்வாதிகளுடன் தொடர்பு கொண்டு கருத்துக் கேட்பர். பின்பு தமிழ் அரசியல்வாதிகளை தொடர்பு கொண்டதும் முஸ்லிம் அரசியல்வாதிகளின் கருத்தை (புலிகளின் பாணியில்) முற்றாக மறுப்பர்; பல பொய்யான குற்றச்சாட்டுக்களையும் கற்பனையான காரணங்களையும் கூறி முடிய காலை 8 மணியாகும் நிகழ்ச்சியும் முடியும். இடையில் தமிழ் அரசியல்வாதிகளின் கூற்றுக்களுக்கு பதிலளிக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்தையும் முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு வழங்கமாட்டா ர்கள். சில சமயம் உத்தியை மாற்றுவார்கள். முதலில் தமிழ் அரசியல்வாதிகளுக்கு சந்தர்ப்பம் கொடுப்பர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பரராஜசிங்கமும், சந்திரநேருவும் போட்டி போட்டுக்கொண்டு (தமிழ்) பேரினவாதத்தைக் கக்குவர். நிகழ்ச்சி முடிவடைய 4 அல்லது 5 நிமிடம் இருக்கும்போது முஸ்லிம் அரசியல்வாதிகளை தொடர்பு கொள்வர். அவர்கள் தம்பக்க நியாயங்களைக்கூற ஆரம்பிக்கும்போது "நன்றிகள் வணக்கங்கள்" எனக்கூறி நிகழ்ச்சியை நிறைவு செய்வர். தமிழ் ஊடகப் பயங்கரவாதத்தின் ஒரு முகமே இங்கு விபரிக்கப்பட்டுள்ளது.

தமிழ் ஊடகங்கள், விரோதத்தின் குறுக்கு வெட்டு முகம்

இப்படியென்றால் தமிழர் இலத்திரனியல் ஊடகங்களும் சளைத்தவையல்ல. புலிகளின் இனவாத ஊதுகுழலாக செயற்படும் பி.பி.சி. தமிழோசை முதல் சக்தி டி.வி., சக்தி எப்.எம். சூரியன் எப்.எம். வரை பல நூறு உதாரணங்களைக் காட்டலாம். சக்தி டி.வி யை எடுத்துக் கொண்டால் இன்னுமொரு பொன். இராமனாதனோ என வியக்கும் வண்ணம் மின்னல் ரங்கா காணப்படுகிறார். அன்று பொன்.

மின்னல் என்றவோர் நிகழ்ச்சியை உண்டுபண்ணி அரசியல் பூச்சாண்டி காட்டுகிறார் சக்தி ரி.வியில் ரங்கன். அவரது தமிழ்ப்பேரினவாதப் பாணியேதனி. முஸ்லிம் அரசியல் வாதிகளை மின்னலுக்கு அழைப்பார். தம்மவர்களும் ஏதோ ஐநா. சபை செயலாளரிடம் இருந்த அழைப்பு வந்ததுபோல ஓடோடிப்போய் அசடுவழிவார்கள். முதலில் சம்பிரதாய கூடந்த 24.08.2003இல் மின்னலில் அமைச்சர் அஸ்வர் ஹாஜி அவர்கள் பேட்டியளித்தார். இவர் ஒரு அமைச்சர், மும்மொழிப்புலமையாளர், ஐம்பது வயதைத் தாண்டியவர். ஆயினும் அன்று ரங்காவின் முன்னால் பம்மிய பம்மலைச் சகிக்க முடியவில்லை. 1956இல் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தில் தமிழ் தலைவர்களுக்கு பேரினவாதிகள் செய்த கொடுமையை விபரித்தார் நன்று. அதேநேரம் பொன். இராமனாதனை குதிரை வண்டியில் வைத்து இழுத்ததைக் கூறிய ஹாஜியார், ஏன் இழுத்தார்கள் என்று சொல்லவில்லை. அன்று முஸ்லிம்கள்மீது வன்முறை புரிந்த சிங்களத் தலைவர்களை பித்தானிய பொலிசார் சிறையிலிட்டமை, அவர்களை விடுவிப்பதற்காக ராமனாதன் இங்கிலாந்து சென்று முஸ்லிம்களைக் கேவலப்படுத்தி வாதிட்டு வென்றமை, அதற்காகவே அது என்ன என ரங்கா தோண்டினார். அமைச்சர் நாகரிகம் கருதி மீண்டும் அதைத் தவிர்த்தபோது விடாமல் அக்குற்றச்சாட்டுகளை ரங்கா கூறி, அதுதானே எனக்கேட்டுத் தனது அநாகரிகத்தைக் காட்டினார்.

பாராளுமன்ற நாகரிகம் பற்றிக்கூறிய அமைச்சர் அவர்கள், சவப்பெட்டி, மலர் வளையம் என்பனவற்றை பாராளுமன்றத்தினுள் ஜே.வி.பி. யினர் கொண்டுவந்தது அநாகரிகம் எனக்கடிந்து கொண்டார். அதே நேரம் பொ.ஐ.ஐ.மு. ஆட்சிக் காலத்தில் யூஎன்.பி. யினர் அரசியல் யாப்பை பாராளுமன்றத்தினுள் தீயிவிட்டுப் பொசுக்கியதைக் கூறவில்லை. ஒரு வேளை அதனை யு.என்.பி. யின் நாகரிகம் என்று எண்ணியிருப்பார்போலும்.

தமிழோசை, மின்னல் பாணியில் இப்போது தேசிய சேவையில் "விடியும் வேளை" என்று ஒன்றை ஆரம்பித்துள்ளார்கள். போகிற போக்கைப் பார்த்தால் மின்னலை விஞ்சிவிடுவார்கள் போல் தெரிகிறது. அவர்களது பாணியே தனி. அவர்கள் திருக்குறளெல்லாம் சொல்லி அறிவிப்பாளர்களாகத்தான் நிகழ்ச்சியை ஆரம்பிக்கின்றனர். பேட்டிகாணத் தொடங்கிவிட்டால் தன்னிலை மறந்து பரவசமடைகின்றனர். புலிகளின் பிரதிநிதிகளாகி வினாத்தொடுக்கத் தொடங்கி விடுகின்றனர். அவர்களது உத்தி பின்வருமாறு...

மூதூர் முகம்மதலி ஜின்னா ஜே.பி.

அதாவது சர்ச்சை தொடர்பில் பேட்டி காண வேண்டுமானால் உடனே தமிழ் அரசியல்வாதிகளுக்கு அறிவித்துவிடு கின்றனர். அவர்கள் தமது இனவாத நாக்கைத் தீட்டிக்கொண்டு பொய்யான புள்ளிவிபரங்களுடன் தயாராக இருப்பர். முதலில் முஸ்லிம் அரசியல்வாதிகளுடன் தொடர்பு கொண்டு கருத்துக் கேட்பர். பின்பு தமிழ் அரசியல்வாதிகளை தொடர்பு கொண்டதும் முஸ்லிம் அரசியல்வாதிகளின் கருத்தை (புலிகளின் பாணியில்) முற்றாக மறுப்பர்; பல பொய்யான குற்றச்சாட்டுக்களையும் கற்பனையான காரணங்களையும் கூறி முடிய காலை 8 மணியாகும் நிகழ்ச்சியும் முடியும். இடையில் தமிழ் அரசியல்வாதிகளின் கூற்றுக்களுக்கு பதிலளிக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்தையும் முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு வழங்கமாட்டா ர்கள். சில சமயம் உத்தியை மாற்றுவார்கள். முதலில் தமிழ் அரசியல்வாதிகளுக்கு சந்தர்ப்பம் கொடுப்பர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பரராஜசிங்கமும், சந்திரநேருவும் போட்டி போட்டுக்கொண்டு (தமிழ்) பேரினவாதத்தைக் கக்குவர். நிகழ்ச்சி முடிவடைய 4 அல்லது 5 நிமிடம் இருக்கும்போது முஸ்லிம் அரசியல்வாதிகளை தொடர்பு கொள்வர். அவர்கள் தம்பக்க நியாயங்களைக்கூற ஆரம்பிக்கும்போது "நன்றிகள் வணக்கங்கள்" எனக்கூறி நிகழ்ச்சியை நிறைவு செய்வர். தமிழ் ஊடகப் பயங்கரவாதத்தின் ஒரு முகமே இங்கு விபரிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் பாதுகாப்பு, உரிமைகளை வழங்கத்தயார் இதுதான் பாதுகாப்பா? இதுதான் உரிமை வழங்கும் லட்சனமா?

"கிழக்கில் பரிசீலிக்கப்பட்ட பாதுகாப்பு, உரிமைப்பட்டியல் - 2003 ஆகஸ்ட் 01 முதல் 31 வரை"

2003.08.01 திருகோணமலை என்.சி. வீதியிலுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான "நவாமிலாஸ்" ஜவுளிக்கடை ஒன்று சுப்பம் சம்பந்தமான பிரச்சினை காரணமாக இரவு 7.00 மணியளவில் கைக்குண்டு தாக்குது லுக்கு இலக்கானது. மாற்று இனத்தில் தொடர்புகள் மட்டுப்படுத்த ப்படல் வேண்டும் என உணர்ச்சிபூர்வ மான பிரசாரமும் தொடர்கிறது.

2003.08.03 தோப்பூர் 59 இன்னா நகரில் 23 வயது முஸ்லிம் குடும்பஸ்தவரான றிழ்வான் அதிகாலை 4.00 மணிக்கு தேனீர் கடையைத் திறந்து ஆயத்தம் செய்து கொண்டிருந்த போது. துப்பாக்கி நபர்க ளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

2003.08.04 மீராவோடை செம்மண்ணோ டையைச் சேர்ந்த முகம்மது பாறூக் என் பவருக்குச் சொந்தமான 37-7669 இல க்க 9 இலட்சம் பெறுமதியான உழவு இயந்திரம் அதிகாலை 2.10 மணிக்கு அவரது வீட்டுக்கு வந்த புலிகளால் கடத் திச் செல்லப்பட்டுள்ளது. உழவு இயந்திரம் கடத்திச் செல்லப்படும் போது இரவு 2.25 க்கு கிண்ணையடி இராணுவக் காப்பர ணில் முறையிட்ட போதும் அதனை அவர் கள் கவனத்திற் கொள்ளவில்லை.

2003.08.04 செங்கலடி - பதுளை வீதியி லுள்ள உறுகாமம் குளத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த 19 முஸ்லிம் மீன வக் குடும்பங்கள் யாழ் முஸ்லிம்கள் வெளி யேற்றப்பட்ட பாணியில் ஒரு சில மணித்தி யாலயத்திற்குள் வெளியேற்ற ப்பட்டதால் 15 இலட்சம் பெறுமதியான மீன் பிடிவலைகள், வள்ளங்கள், உபகரணங்கள் என்பவற்றை விட்டு வீட்டு ஏறாவூருக்கு அகதிகளாய் இடம் பெயர்ந்துள்ளனர்.

2003.08.07 காத்தான்குடி கடலில் மீன்பிடி த்துக் கொண்டிருந்த முஸ்லிம் மீனவர் களின் 15 இலட்சம் பெறுமதியான 7 மீன்பிடிப்படகுகள், வலைகள், இயந்திரங் கள், உபகரணங்கள் என்பவை அதிகா லை வேளையில் ஆயுதம் தாங்கியோரால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

2003.08.09 ஓட்டமாவடிப் பிரதேசத்தின் மேற்குப் பகுதியிலுள்ள புனாணைக் குளத் திற்கு மீன்பிடிக்கச் சென்ற முஸ்லிம் மீனவ ர்களுக்குச் சொந்தமான 5 தோணிகள் மற்றும் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடிவலைகள் என்பன புலிகளால் பறி முதல் செய்யப்பட்டு, தோணி ஒன்றுக்கு தலா 10 ஆயிரம் சுப்பமும் கோரப்பட்டு ள்ளது.

2003.08.10 காவத்தமுனை ஹிஸ்புல்லா வீதியைச் சேர்ந்த சுபையிர் என்பவருக் குச் சொந்தமான 36-2277 இலக்க உழவு இயந்திரம் கோறளைப்பற்று மத்திய பிரதேசத்திற்குட்பட்ட காணிக் கோப்பையி டிக்கு காலையில் மணல் ஏற்றிவரச் சென் றபோது, புலிகளால் அபகரித்துச் செல்லப் பட்டுள்ளது. அத்தோடு சாரதி - பாரூக் குடன் மேலும் 5 பேரும் இதே உழவு இயந்திரத்தில் கடத்திச் செல்லப்பட்டு, தாக்கப்பட்டுள்ளனர்.

இப்பிரதேசத்தைச் சேர்ந்த ஹனிபா என்ப வரது 26-6093 இலக்க உழவு இயந்திர த்தை புலிகள் கடத்த முறபட்ட போது, எதிர்த்து நின்ற ஹனிபா பலமாகத் தாக்க ப்பட்டதோடு, உழவு இயந்திரமும் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டது.

2003.08.13 மருதமுனையில் இருந்து 3 இலட்சம் ரூபா பெறுமதியான 290 அரிசி மூடைகளுடன் மாவனெல்ல நகருக்குச் சென்று கொண்டிருந்த திருமலை - கிண்ணியா ம.ூ.ூறப் எம்.பிக்குச் சொந்த மான லொறி வண்டி இரவு 7.00 மணிக்கு ஏறாவூருக்கும் வாகனேரிக்கும் இடைப் பட்ட சிறிய காட்டுப் பகுதியான கிண் ணையடியில் வைத்து ஆயுத முனையில் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

2003.08.13 திருகோணமலை செல்வநா யக புரத்திலுள்ள பிள்ளையார் கோயிலு க்கு அருகில் வைத்து ரி-5, ரகத்துப்பாக் கியால் 33 வயதான பரீத், 28 வயதான றியாஸ் ஆகிய மூதூரைச் சேர்ந்த இரு முஸ்லிம் குடும்பஸ்தர்களும் இரவு 7.00 மணிக்கு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

2003.08.15 அக்கரைப்பற்றுக் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் புத்தளம் மாவட்டத்தில் வதியும் (மன்னார் அகதி கள்) 40 முஸ்லிம்களுக்குச் சொந்தமான 02 படகுகள், 06 எஞ்சின்கள், 02 ஒக்ஸி ஜன் சிலிண்டர்கள், 5 கலன் எண்ணெய், 35 லீற்றர் பெற்றோல், 5 பல்ர், பதப்படுத் தப்பட்ட 1000 கடலட்டைகள் என 20 இலட்சம் பெறுமதியான மீன்பிடி உபகர ணங்கள் மற்றும் அவர்களின் சுழியோடும் உடைகள், பாதணிகள் என்பன அபகரித் துச் செல்லப்பட்டுள்ளது.

2003.08.16 மூதூரைச் சேர்ந்த 48 வய தான ராசிக், 15 வயதான பைரூஸ் ஆகிய தந்தையும், மகனும் சின்ன கங்கை - முறிஞ்ச முகத்துவாரம் பகுதியில் மீன்பி டித்துக் கொண்டிருந்த வேளை புலிக ளால் கடத்திச் செல்லப்பட்டு, மோசமான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நிர்ப்ப ந்தத்தின் பேரில் அடுத்த நாள் விடுவிக்கப் பட்டனர்.

அபூ உமைர்

2003.08.17 சம்மாந்துறை சேனை வட் டைப் பகுதியிலுள்ள நெற்காணிக்குச் சென்று விட்டு, மோட்டார் சைக்கிள் திரு ம்பிக் கொண்டிருந்த போது இரவு 8.30 மணிக்கு 40 வயதான இப்றாலெப்பை, 29 வயதான இஸ்மாயில் ஆகியோர் சுட் டுக் கொல்லப்பட்டனர்.

2003.08.18 சாய்ந்தமருதைச் சேர்ந்த 28 வயதான மாகூக், 30 வயதான இல்யாஸ் ஆகியோர் 154-2871 இலக்க மோட்டார் சைக்கிளில் சாய்ந்தமருது, ஒட்டமாவடிக்கி டையில் வைத்து காணாமல்போயுள்ளனர்.

2003.08.22 மாஞ்சோலை முஸ்லிம் கிரா மிய வைத்தியசாலைக்குரிய அம்பியூளன்ஸ் வண்டி, நோயாளிகளை மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் சோத்து விட்டு திரும்பிக் கொண்டிருக்கையில் தமிழ் பிரதேசமான சித்தாண்டியில் வை த்து காலை 11.50 க்கு சரமாரியான கல் வீச்சுக்கு இலக்கானது.

முஸ்லிம்களின் பாதுகாப்பு மற்றும் உரிமை ப்பட்டியலில் பரிசீலனை இவ்வாறு பிரதிமா தமும் தொடர்ந்து நீண்டு கொண்டிருக்க, முஸ்லிம் தலைமையோ புலிகளைச் சந்திக் கும் போது ஒன்றையும், பின்னர் தலை நகா கொழும்பில் வேறு ஒன்றையும் முஸ் லிம் மக்கள் மத்தியில் இன்னொன்றையும் கூறிக் கொண்டிருப்பதாக சொன்ன பின்பு நீங்கள் எப்போது ஒன்றையே கூற முன் வருவீர்கள்?

வேண்டாம் சமாதானம்!



மீராகேணி சுபைர்



அறமின்றி, அறிவின்றி
அறங்கேறி
அழிவை உண்டாக்க
வேண்டாம் சமாதானம் !

ஆட்டுவிக்க ஒரு இனம்
ஆடி அழிந்திட மறு இனம்
ஆணவம் மேலேற
வேண்டாம் சமாதானம் !

இழந்தவைகள்
இழந்தனவாகவே இருக்க
இருப்பதையும் இழப்பதற்கு
வேண்டாம் சமாதானம் !

ஈந்தவர் இறந்திட
ஈயாதார் உயர்ந்திட
ஈவிரக்கமற்ற வாழ்வு வாழ்ந்திட
வேண்டாம் சமாதானம் !

உயிர்த்திடும் மூச்சையும்
உரைத்திடும் ஒலியையும்
உண்டில்லாமலாக்கி விட
வேண்டாம் சமாதானம் !

ஊருடன் பகைத்து
ஊரார் என நினைக்கும்
ஊன வாழ்க்கை வாழ்ந்திட
வேண்டாம் சமாதானம் !

எல்லா உயிர்களும்
என்றுமே சமம் என
எண்ணாத வரையினில்
வேண்டாம் சமாதானம் !

ஏழைகள் வாழ்வினை
ஏறெடுத்தும் பார்க்காது
ஏமாற்ற நினைத்திட
வேண்டாம் சமாதானம் !

ஐயத்துடன் வாழ்ந்து
ஐக்கியம் அழிந்து - இவ்
வையகத்தில் வாழ்ந்திட
வேண்டாம் சமாதானம் !

ஒவ்வொரு குலமும்
ஒன்றே குலம் என
ஒன்றாகாத நிலையில்
வேண்டாம் சமாதானம் !

ஓர் மாதா ஈன்றெடுத்த
ஓர் ஜாதி எனும் பண்பு
ஓங்கி ஒலிக்காத வரை
வேண்டாம் சமாதானம் !

ஔவில வாழ்க்கை
ஔடதமாய் இனித்திட
ஒவ்வாத நிலையில்
வேண்டாம் சமாதானம்!

அம்பாறை மாவட்ட உலமா மாநாடு

அம்பாறை மாவட்ட ஜம்மியதுல் உலமா சபையின் மாநாடு கடந்த புதன் கிழமை கல்முனை அல் - ஹாமியா அரபுக் கல்லூரி கேட்போர் கூடத்தில் அம்பாறை மாவட்ட ஜம்மியதுல் உலமா சபையின் தலைவர் மௌலவி எஸ்.எச். ஆதம்பாவா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

சுமார் 400க்கும் மேற்பட்ட உலமாக்கள் கலந்து கொண்ட இந்த மஹாநாட்டில் சிறப்பம்சமாக மூத்த உலமாக்கள் கௌரவிக்கப்பட்டனர். இவர்களுக்கு "செய்குல் உலமா" பட்டம் வழங்கப்பட்டது. மௌலவிகளான வை.எம். முஸ்தபா மௌலானா, எம்.எம். இப்றாலெப்பை, எம்.ஏ.எம். அலியார், ஓ.எம். பாஸி ஆலிம், எம்.ஜே.எம். ரியாழ் ஆகியோரே கௌரவம் பெற்ற உலமாக்களாகும். இவ் வைபவத்திற்கு பிரதம அதிதியாக அமைச்சர் ஹக்கீமும் கௌரவ அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எச். ஹரிசும் கலந்து கொண்டனர்.

இங்கு நடைபெற்ற கலந்துரையாடலில் இனப்பிரச்சினையில் முஸ்லிம்களின் தீர்வு தொடர்பாகவும் இன்று முஸ்லிம்கள் எதிர் நோக்கும் பாதுகாப்பு அச்சம் தொடர்பாகவும் காரசாரமான கருத்துப் பரிமாறல்கள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

எஸ்.ஏ. ஐப்பார்-கல்முனை.

அனுமதிப்பத்திரமின்றிச் செயற்படும் வெளிநாட்டு மருத்துவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

உத்தியோக பூர்வ அனுமதியின்றிச் செயற்படும் வெளிநாட்டு வைத்தியர்கள் குறித்துப் பலரதும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே உள்ள சட்டங்கள் திருத்தப்பட வேண்டும். அத்தகையவர்களைக் கைது செய்யும் அதிகாரம் பொலிசாரிடம் இருந்த போதும் முறைப்பாடுகள் செய்யப்படாமை இதனைத்தடுக்கின்றது.

வைத்தியச் சட்டங்களில் சட்டம் திருத்தப்பட்டு இத்தகைய சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடுவோரும் அவர்களைத் தொழில் அமர்த்துவோரும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

வெளிநாடுகளில் கல்வி பயின்று மருத்துவராகத் தகுதி பெற்று வரும் இலங்கையர் இங்கு ஒரு பரீட்சையில் சித்திபெற வேண்டும் என்ற கடப்பாடு உள்ளது. வெளிநாட்டு மருத்துவர்கள் மருத்துவத்துறை அதிகாரிகளின் விதந்துரைப்பின்படி இலங்கை மருத்துவக் கவுன்சிலின் அனுமதிப்பத்திரம் பெற வேண்டும்.

ஆனால், நடைமுறையில் இது பின்பற்றப்படுவதில்லை. அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென இலங்கை மருத்துவக் கவுன்ஸில் கோருகின்றது.

ஏன் இந்த தொடர் ஏமாற்று

எமது தனித்துவத்தின் குரலாக வெளியான முஸ்லிம் குரலின் ஒவ்வொரு சுவடுகளையும் கவனத்த ஆயிரம், ஆயிரம் வாசகர்களில் நானும் ஒருவன். ஏனெனில் அது தாங்கி வரும் ஒவ் வொரு செய்திகளும் முஸ்லிம்களை ஓரங் கட்டி தான் மட்டும் கிடைக்கப் போகும் அனைத்து நன்மைகளையும் அடைய வேண் டுமென்ற காய் நகர்த்த தலை நகரத்திக் கொண்டிருக்கின்ற இவாகளுக்கு வைக்கின்ற வேட்டுக்கள்.

இவ்வாறானதொரு நிலையில் முஸ்லிம் குரல் முஸ்லிம்கள் தொடர்பான ஆவணங்களை தேடுவதற்கும், முகவரியை இடமாற்றம் செய்வதற்கும் திடீர் திடீரென மறை வதுதான் பொறுக்க முடியாமல் உள்ளது. இனி மேலும் இவ்வாறான நிலையை ஏற்படுத்தாமல் தொடர்ந்து நாளிதழ்களாகவும். வார இதழ்களா கவும் வெளியிட ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற் கொள்வீர்கள் என்று நம்புகின்றேன்.

முஸ்லிம்கள் தொடர்பாக தொடர்ந்தும் உண்மை களை மறைப்பதும், குரோதம் காட்டி ஒரு பக்கச் சார்பாக செய்திகளை வெளியிடும் தமிழ்த் தேசிய நாளிதழ்களை புறக்கணிப்போம். முஸ்லிம் சமுதா யமே, எமக்கொரு தமிழ், சிங்கள, ஆங்கில மொழி மூலமான ஊடகங்களது தேவை இன்னும் எமது எண்ணங்களில் எழவில்லையா? புறப்படுங்கள் எமக்கு இறைவன் வழங்கிய செல்வங்களை செலவு செய்வதற்கு.

றிபாய் எம். சம்சுதீன்,
130, உபதபாலக வீதி, நிந்தவூர் 07.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலவரம்

ஊருக்குள் இரண்டு நாட்களாக வாகனங்கள் ஓடவில்லை. கடைகளும் திறக்கவில்லை. சந்தையில் மட்டும் உள்ளூர் கீரைகள், காய்கறிகளை விற்றுக் கொண்டிருந்தனர். அதைவாங்குவதற்கேனும் திரளாக சனங்கள் கூடவில்லை. 'பெற்றோல் செட்' எரிந்து கொண்டிருந்தது. ஒரே புகை மண்டலம். ரெயில்வேஸ்ரேஷன் புகைக்குள் அமிழ்ந்து திமிறிக்கொண்டிருந்தது.

வீதிக்கு குறுக்கே தாறுமாறாக மரங்களை தறித்து உருட்டியிருந்தனர். மரக்குத்திகளில் மடிச்சிக்கட்டிய சாரத்துடன் சிலர் அமர்ந்து ஆவேசமாகக் கத்திக்கொண்டிருந்தனர். அவர்களின் இடுப்பில் செருகியிருந்த 'கிறீஸ் கத்திகள்' அருகே வாவென வசியம் செய்தன. அவர்களைச்சூழவும் வீரத்தின் திமிர். சின்னவன் மட்டும் திருக்கை வாளுடன் ஓரிடம் என்றில்லாமல் முறுகிக்கொண்டிருந்தான்.

எம். எல் த்தின் ஜஸ்வாடிக்கு முன்னாலும் மரக்குத்தியொன்று குறுக்கே கிடந்தது. 'ஆணி பெக்டரி'க்கு பின் வளவில் மீன்பிடிக்கச் சென்றிருந்த இஸ்ஸதீன் ஓடிவந்தான். "டேய் அச்சி, தூண்டில போட்டுட்டு வாடா. முஸ்தபா போடியார் மக்கள வெட்டினயாம். ரோட்டெல்லாம் கட்ட போட்டிரிக்கி. ஹர்த்தாளாம். நம்மட கூட்டாளிமாரெல்லாம் ரோட்டுல நிக்கானுகள்". இடுப்பிலிருந்து நழுவும் களிசனை மேலே இழுத்து விட்டபடி இஸ்ஸதீன் இரைந்து கொண்டிருந்தான். அவன் மூச்சிரைத்து நிதானிக்க உள்ளே இருந்து பால் கட்டிய சளிக்குடும்பம் சதக்கென கீழே தெறித்தது. புறங்கையால் வழித்து மேற்களிசனில் அதைத் தேய்த்துக்கொண்டான்.

இவன் சீனட்டியர்ற புறவளவில் தூண்டில் போட்டுக் கொண்டிருந்தான். மூக்குறயன் பாறாக் தூண்டிலில் புழுவை நசுக்கி, வாகாக இவனுக்கு உதவிக் கொண்டிருந்தான். தங்கை லைலத்து சற்று தூரம் மினக்கெட்டு ஒரு சிரட்டை நிறைய புழுவுடன் வந்தாள். பொழுதுக்குள் உமல் தூக்கு நிறைய மீன் பிடிக்கத் திட்டமிட்டு. கடுகதியாய் இயங்கிக் கொண்டிருந்தார்கள். எல்லாவற்றையும் இஸ்ஸா கெடுத்து விட்டான்.

"நீ முந்து டா. நான் பொறகு வாரன்" என்று கூறிவிட்டு இவன் தூண்டிலில் கண்ணானான். மிதப்பம் நீருக்குள் அமிழ்வதும். தாழ்வதுமாய் முசுப்புக்காட்டியது. "அவ்க்கென" தூண்டில் தரையில் வீழ்ந்தது. கூடவே ஒரு கெழித்தி மீன் மண்ணின் ஸ்பரிசத்தால் துடித்துக் கெம்பியது. இஸ்ஸதீன் இவனின்றி நகர மாட்டேன். ஏன்பது போல் முகத்தை உர்ரென்று வைத்துக் கொண்டு, புழுச்சிரட்டையை சுற்றிச்சுற்றி வந்தான்.

"டேய் அச்சி, நான் புடிச்ச மீனுல ஒழும்பம் உனக்கும் தாரன் என்னட வாடா. தனிய போகேலாடா". நேத்து நீ காவத்தமுனைக்கு கூப்பிட நான் வந்தனான். இப்ப நீ ஏலாண்டு நடப்புக் காட்டுறாய் என்ன," இஸ்ஸதீன் தொண தொணக்க ஆரம்பித்து விட்டான். இவன் தூண்டிலை பாறாக்கிடம் கொடுத்து விட்டு, இஸ்ஸாவுடன் கிளம்பினான். இவன் இணங்கிக் கொண்டு வருவதில் இஸ்ஸாவுக்கு மகிழ்ச்சி. இவன் அயல் வீட்டில்தான் இஸ்ஸா (இஸ்ஸதீனை இப்படித்தான் அவன் உம்மா கூப்பிடுவா) வசிக்கிறான் தூரத்து உறவும் கூட.

இவன் முழங்கால் வரை படிந்திருந்த சேற்றை நகத்தால் சுரண்டி உதிரவிட்டான். ஈரக்களிசனில் சில்லென்ற காற்றுப்பட, தொடை நடுங்கியது.

யாசீன்பாவாட ஒழுங்கையால் இறங்கி நடந்தார்கள். பச்சத்தண்ணி மௌலானா நேற்றிரவு பேய்விரட்ட பரப்பிவைத்த இளநீர், செம்பருத்திப்பூக்கள். கற்பூரம் வெட்டிப் பிளந்த தேசிக்காய். என நைவேதியப் பொருட்கள் மஞ்சோனா மரத்தடியில் சிதறிக் கிடந்தன. மௌலானாவின் கிடுகு கொட்டகையிலிருந்து சாம்பராணிப் புகை கசிந்து மேலேகிச் சென்றது.

"டேய் அச்சி அங்கட டா. வாழப்பழம்டா" மஞ்சோனா மரத்தடியில் கோழிகள் கீந்திக் கொண்டிருந்தன. மடைப் பொருட்களுடன் ஒரு வாழைப்பழ சீப்பும் தெரிந்தது. இஸ்ஸாதான் முதலில் கண்டு. இவனுக்கும் காட்டினான்.

"எடுத்து அமுக்குவம்டா" என்றான். இஸ்ஸா. இவன் மிரண்டு போய் "என்னடா பேய்க்கதை கதைக்கிறாய். பச்சத்தண்ணிர வைரவன் உன்ன அடிச்சு கொல்லும்டா"என்றான். "வைரவனும். மசிரும்" என்று வீட்டு. முட்கம்பி வேலியால் தவழ்ந்து சென்று வாழைப்பழத்தை எடுத்து வந்தான்.

இவன் ஓரடி பின்னோக்கி, அவனைத் தொடர்ந்து போனான். இஸ்ஸா ருசித்து ருசித்து வாழைப்பழத்தை தின்றபடி வந்தான். பின்பு ஒரு வாரமாக இஸ்ஸதீனை பேய் அடித்ததா என கவனிப்பதே இவன் காலைக் கடனாயிருந்தது.

யாசீன் பாவாவின் காட்டுக்குள் முந்திரிப் பழம் பொறுக்கிக் கொண்டிருந்த ஹாமீது இவர்களின் சிலமங்கண்டு ஓடிவந்தான் "எங்கடா போறீங்க" இரைந்தான். இஸ்ஸா விலாவாரியாக அவனுக்கு விளக்கினான். அப்ப நானும் வாரன்டா. என்றவன் ஆளுக்கொரு முந்திரிப்பழம் தந்தான்.

கொலனிக்குள்ள நல்ல பனம்பழம் கிடக்குடா. பிந்துனா இருக்காது. ஆஞ்சிட்டுப் போவம்டா. ஹாமீது ஆர்வமானான். இஸ்ஸா அதற்கு இணங்கவில்லை. அதற்குள்ள அங்க முகப்பாத்தி முடிஞ்சிடும். புதினம் பாக்கேலா. பனம் பழம் பொறகு ஆயலாம் என்றான்.

இவனும் ஹாமீதும் முரண்பிடிக்க சம்மதமின்றியே இஸ்ஸா பின்னால் ஒப்புக்கு இழுபட்டான். இவனுக்கு பனம் பழம் என்றால் கொள்ளை ஆசை. நெருப்புத்தணலில் புரட்டி மேற் தோலை உரித்தபின். தேங்காய்ப்பாலில் கரைத்து. அதன் பாணியுடன் சோறு தருவா உம்மா அல்லது பாணியை உறைய வைத்து, பலகாரம் சுட்டுத்தருவா. அதன் ருசி இவன் குட்டி நாக்கில் ஸலாம் போட வைத்தது.

மூவரும் கொலனி நோக்கி நடந்தார்கள். யாசீன்பாவா காட்டுக்குள் புகுந்து. மறுபக்கம் வடக்கில் ஏறினால் கொலனிதான். எனினும் சங்கத்து கிறவல் ரோட்டுக்கு ஏறி நேரே போவதென முடிவாகி ஹாமீது சொன்னான். ஸ்கூல் சந்தியில் நிற்கும் சடைவிரித்த ஆலமரத்தில் மறைந்து ஒன்டுக்கிருந்தனர். இவன் அடிக்கடி ஆலமரத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டான். விண்ணைத் தொட அந்தா இந்தாவென நீண்டு கிடக்கிறது. அதன் விழுதுகள் மண்ணில் உராய்ந்த படி அதுவே பெரு மரங்களாய் வீடுப்புக்காட்டி அசைந்தன.

"டேய் அச்சி இதாண்டா பேய்கள்ற ஊஞ்சில்" விழுதுகளை பிடித்துக் கொண்டு ஹாமீது கூவினான். இந்த ஆலமரம் பற்றி மயிர் கூச்செறியும் கதைகளை மூத்தாமாவும் தூக்கம் வராத இரவுகளில் இவனுக்குச் சொல்வதுண்டு.

இவர்களுக்கு தமிழ் பாடம் கற்பித்த பரமேஸ்வரன் மாஸ்ரரும். அவர் மனைவியும் இந்த ஆலமரத்தில் எப்பவும் சைக்கிளை சாத்தி விட்டு வருவார்கள். பிள்ளைகளுக்கு கடலை, முறுக்கு விற்கும் ஏகப்பட்ட கிழவிகளின் வியாபாரக் கூடமாகவும் இம்மரமே இருந்தது.

ஏறாவூர் அனிபா காக்கா ஹோர்னை அமுக்கி அமுக்கி ஐஸ்பழம் விற்பதற்கும் ஆலமரமே குடையாய் நின்றது. அவரிடம் தினமும் ஒரு கொக்லேட் ஐஸ்பழம் வாங்கிக் கொள்ளும்படி வாப்பா உத்தரவிட்டிருந்தார். மாத முடிவில் வீட்டுக்கு வந்து கணக்கு முடித்துப்போவார். விடைபெறுகையில் ஆர்ப்பாட்டமாய் ஹோர்னை அமுக்கி விட்டு. இவனுக்கு ஐஸ்பழம் தினம் தருவார்.

இவர்கள் சாவண்ணா சந்திக்கு வரும் போது கூட்டம் வழிந்தது. "ஏறாவூருல இருந்து வந்த முஸ்லிம் ஆக்களயும் வெட்டினயாம்" ஊரே திமிறிக் கொண்டிருந்தது. அச்சம் கலந்த அசட்டுத் தைர்யம் எல்லோர் நெஞ்சிலும் முளையிட்டு மிகைத்திருந்தது. அடிவானம் இருண்டு கிடந்தது. அந்த இருளை கிழித்துக் கொண்டு வேகமாக வந்த கூட்டம் ஏக காலத்தில் வேனை நோக்கியது.

வீதிமருங்கிலும் சனத்திரள். மேலே நகர முடியாதவாறு குறுக்கே மரக்கட்டைகள். உள்ளே இருந்தவர்களுக்கு நிகழ்வன எதுவும் துலக்கமில்லை. திகைத்துப் போய் மிரண்ட்டி, சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டனர்.

இவன் கூட்டத்தை விலத்தி. வேனுக்குள் எட்டிப்பார்த்தான். இவனது காக்காவின் வயதையொத்த இரண்டு பேரும் மாமாவின் வயதையொத்த இரண்டு பேரும் வெள்ளைப் போர்வையில் சுற்றப்பட்டு இரத்தம்தோய்ந்து. அசைவற்றுக் கிடந்தனர். வேனுக்குப்பின்னால் பொலிஸ் வண்டி நின்றது "ம் சரி இவடத்த உடாம மையத்த பள்ளிக்கு கொண்டு போங்க" ஊர்த்தலைவரின் குரல் ஓங்கிச்சரிந்தது.

இவன் சன நெரிசலில் இஸ்ஸாவையும், ஹாமீதையும் தவறவிட்டான். தனித்து நிகழ்வன எதுவும் புரியாமல் சனங்கள் திரளாகச் செல்லும் திசை நோக்கிச் சென்றான். ஈற்றில் காட்டு மரத்தடிக்கு வந்து சேர்ந்தான்.

இவனின் வகுப்புத் தோழி ஜெஸீமா ஒழுங்கையில் நின்றாள். அவளின் உம்மா பாதித்தலையை படலைக்கு வெளியே நீட்டியபடி புதினம் பார்த்துக் கொண்டிருந்தா. இவனைக்கண்டதும் ஜெஸீமா கழக்கமாக சிரித்து வைத்தாள். பின் 'என்ன' என்ற தோரணையில் விழிகளை சிமிட்டினாள். இவன் விஷயத்தைக் கூறவே. மறுபடியும் சிரித்து விட்டு. செம்மனோடை பக்கம் போகிறார்கள் என சைகை காட்டினாள்.

கடுமிருள் அச்சமூட்டியது.

ஓட்டமாவடி அறபாத்

செம்மனோடைப்பக்கம் 'ரயர்கள்' எரியும் கமறல் நாசியை நிறைத்தது. ஒளிவட்டம் அந்தரத்தில் வளையமிட்டது. இவன் அவசரமாக அத்திசை நோக்கி ஓடினான். மாஞ்சோலைக்கிராமம் எரிந்து கொண்டிருந்தது. சந்தியில் நின்ற சிலர் கிரான் பக்கம் ஓடிமறைந்தனர். அவர்களின் கைகளிலிருந்து தீப்பந்தங்களும் மின்னி மறைந்தன.

வேனுக்குள் பார்த்த நான்கு பேரின் உருவத்தையும் மனசில் இழுத்துப்பார்த்தான். மூச்சுத்திணறியது. "நம்மட ஆக்கள வெட்டிப் போட்டுப் போறானுகள் பொம்புளயல். சின்னப்புள்ளயல் எல்லாம் வூட்டுக்குள்ளே இருங்கடா ஒடுங்கி" யாரோ கத்திக் கொண்டு இவனைக்கடந்து பாய்ந்து போனான்.

இவன் தனித்து நிற்பதை சட்டென உணர்ந்தான். தன் கால்கள் இரண்டும் பூமியுள் அமிழ்ந்து போவதான பிரேமை "என்ட உம்மா" என வீறிட்டபடி. வீட்டை நோக்கி ஓடத் தொடங்கினான். இவன் வீழிகளுள் இருள் மட்டுமே அடர்ந்திருந்தது.

சாளரம்

வறுமை ஒழிப்பு என்பது அனைவரினதும் பொறுப்பு

சனத்தொகையின் நெருக்கமும், வறுமையும் தொழில் வாய்ப்புக்கள் பெருகாமையும் போஷாக்கின்மையும் பாமர மக்களை மென்மேலும் துன்பச் சாகரத்தில் மூழ்கடித்துள்ளன.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகள் மக்களைக் கதிகலங்கச் செய்துள்ளன. உரிய போதிய போசாக்கின்மை சிறுவர்களிடையே பல்வேறு நோய்களையும், வளர்ச்சியின்மையினையும் தோற்றுவித்துள்ளன. காலந்தாழ்த்தாது நடவடிக்கை எடுத்தல் இன்றைய அவசியத் தேவையாகும். பரந்த/விரிந்த குடும்ப அமைப்பு உண்மையில் வரவேற்கத்தக்கதுதான். தனியொருவர் உழைத்துக் குடும்ப கஸ்டத்தை கவனிப்பது அவ்வளவு இலேசானதல்ல. அரசு, முதியோருக்கு சிறு கொடுப்பனவு ஒன்றை அளிக்கலாம். நாளடைவில் இது ஒரு சமூகப் பிரச்சினையாக மாறலாம். பின்னர் அரசு தலையிட நேரிடலாம். உதவி தேவையானவர்களை அடையாளம் காணுதல் பாரிய பொறுப்பாகும்.

ஆடம்பர திருமண வைபவங்களுக்காகப் பெரிதளவில் செலவிடுகிறோம். இதில் ஒரு பகுதியை வறியவர்கள் துயர் துடைக்க செலவிடப்பட முடியாதா? நவீன யுகம் எனக்குறிப்பிட்டாலும் இன்று புதிதாகத் தோன்றும் நகரங்களில் என்னென்ன குறைகள் இருக்கும் என எண்ணிப் பார்த்ததுண்டா? மக்களிடம் பொறுப்புணர்ச்சி வந்தாலே அரசிடமும் அது பிறக்கும்.

டெய்லி நியூஸ் 4.9

ஆயுதங்களைக் கைவிட இடைக்கால நிர்வாக சபைதான் அவசியமா?

பேச்சுவார்த்தை மேசைக்கு வந்தாலும் புலிகள் ஆயுதம் சேகரிப்பதையோ. இணக்க ஒப்பந்தத்தின் அம்சங்களை முறிப்பதன் மூலம் யுத்தத்திற்குத் தயாராகின்றனர் என்பதையோ அறியாதார் யாருமிலர். சர்வதேச அபிப்பிராயத்துக்கு இடமளித்தல் இலங்கை அரசைத் தவறான வழியிலிட்டுச்சென்று தம் இலக்கை அடைதல் என்பவற்றுக்காகப் புலிகள் கடந்த 14 மாதங்களைப் பயன்படுத்தினர் என்பது மக்களுக்குத் தெரியாத ஒன்றல்ல.

புலிகளது பொருளாதார, யுத்த அமைப்புகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. கிடைப்பதைப் பெற்றுக்கொள்வதைவிட அதிகம் பெறுவதிலேயே அவர்கள் நுணுக்கமாயுள்ளனர். பேச்சு வார்த்தை மூலமே யுத்தத்திற்கு முடிவு என்றிருந்த நிலைமாறி: யுத்தத்திற்குத் தள்ளப்பட வேண்டிய ஒரு நிலை இன்று அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

-தினபின

காலிக் கோட்டையில் வெளிநாட்டவர் ஊடுருவல்

வரலாற்று புகழ்மிக்க காலிக் கோட்டையில் பெறுமதியான சொத்துக்கள் வெளிநாட்டவருக்கு கைமாறத் தொடங்கியுள்ளன. இது தொடர்பான 100வீத வரிச்சலுகையே இதற்குக் காரணம். இது வரை 50க்கும் அதிகமான வீடுகள் கைமாறியுள்ளன. தரகர்களும் இதனால் நன்மையடைகின்றனர். ஆனால் பெறுமதியான சொத்துக்களை கொள்ளை இலாப வீலைக்குப் பெற்ற வெளிநாட்டவர்கள் படிப்படியாகத் தமது ஆதிக்கத்தை செலுத்தி வருகின்றனர்.

இத்தகைய கொள்வனவுகளுக்காகப் பணம் வெளிநாட்டில் இருந்து வருகின்றதா? அன்றேல் இங்கு கள்ளத்தனமாக அச்சடிக்கப்படுகிறதா என்பது பலரின் கேள்வியாக இருக்கிறது. உண்மையில் இச்சொத்துக்கள் வதிவிட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுமா? அன்றேல் உல்லாசப் பயணத்துடன் தொடர்பு பட்ட கலாசார சீரழிவுகளின் உறைவிடமாக அமையுமா? என்பது பலரதும் கேள்வியே.

-எஸ்.எச். ரூமி. காலி.

முஸ்லிம் தேச ஆவணக் காப்பகம்

முஸ்லிம் தேச ஆவணப்படுத்தலுக்கும். பாதிக்கப்பட்டவர்களின் நட்ட ஈட்டுக் கோரிக்கைக்குமான ஆவணக் காப்பகம் செயற்படத் தொடங்கி உள்ளது. 1983ம் ஆண்டுக்குப் பின்னர் அரச, தமிழ் இயக்கப் பயங்கரவாதத்தால் மௌத்தான, காணாமல் போன, அங்கவீனமுற்ற இலங்கை முஸ்லிம்களின் தகவல்களை ஆவணப்படுத்தவும், ஆவணக் காப்பகமையம் ஊடாக நட்ட ஈட்டுக் கோரிக்கையை வென்றெடுக்கவுமான செயற்திட்டம் ஒன்றிற்காக நமது மக்களிடமி ருந்து தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

தற்போதைய தேசிய இனப்பிரச்சினை சூழ்நிலையில் முஸ்லிம்களின் இழப்பு எவ்வித பெறுயற்ற ஒன்றாக கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இதுவரை யில் 1983ம் ஆண்டில் இருந்து "முஸ்லிம்கள்" என்பதற்காக 5000 க்கு மேற்பட்ட முஸ்லிம்கள் கொல்லப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆகவே எமது இழப்பை பெறுமதியுள்ளதாக மாற்றுவதற்கு எமது இழப்பின் விபரத்தை ஆவ்ணப்படுத்த வேண்டிய அவசியமுள்ளது. இந்த பெரும் சமூக வேலைத்திட்டத்தில் தங்களை இணைத்து கொள்வீர்கள் என்று நம்புகிறோம்.

எமது சகோதரர்களின் இழப்புக்களில் அக்கறையுள்ள சகல இயக்கங்களும், சமூக சக்திகளும் இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளள மாதிரி விண்ணப்பத்தை தயார் செய்து எமக்கு அனுப்பி வைக்குமாறு தங்களை சமூகத்தின் சார்பாக அழைக்கின்றோம்.

பாதிக்கப்பட்ட சகல மக்களினதும் குடும்பங்களுக்கு மாதிரி விண்ணப்பப்படிவம் கிடைப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். சமூக இயக்கங்கள் தனி மனித சக்திகள் இது தொடர்பாக எம்முடன் இணைந்து செயற்பட முன் வருமாறு வேண்டுகின்றோம்!

தகவல்களை அனுப்ப வேண்டிய முகவரி

முஸ்லிம் தேச ஆவணக் காப்பகம்
181/1 மாளிகா கந்த வீதி,
(வைற்பாக்) கொழும்பு 10.
தொலைபேசி: 0777-389127

முஸ்லிம் குரல் ஒங்கி ஒலிக்க வேண்டும்!

மிகுந்த நாட்களுக்குப் பிறகு முஸ்லிம்களுக்கான தனி ஊடகம். முஸ்லிம்களின் உரிமைகள், உடமைகள் உருவப்பட்டு அனைத்தும் ஊமாக்கப்படும் நிலையில் முஸ்லிம்கள் மத்தியில் ஒரு குரல் 'முஸ்லிம் குரல்' முஸ்லிம்களுக்கெதிரான சதிகள், போராட்டங்கள், தினப்பத்திரிகை மூடி மறைத்த செய்திகள் இப்படி அறிந்திடாத பல செய்திகள் வெளிப்படையாக சுமந்து வருகிறது.

காத்தான்குடிப் பள்ளியில் மிலேச்சர்த்தனமான தாக்குதல், ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் கொலை, வடக்குத் தாயகத்திலிருந்து உடுத்திய உடையுடன் துரத்தியடிப்பு இவற்றிற்கு எதிராக குரல் கொடுக்க எமக்கும் கிடைத்த ஒரே ஊடகம் 'முஸ்லிம் குரல்' இன்ஷா அல்லாஹ் இதன் வளர்ச்சிக்கு எனது பங்களிப்பும் இருக்கும்! 'முஸ்லிம் குரல்' ஓங்கி ஒலிக்க வேண்டும்!

-நஸீம் ரூமி-

எந்தத் தாவணிக்குள் தோலாகி
உன்னைக் கண்டால்
என் பொக்கணிக்குள் பூந்தோட்டம்
என்று சொல்லும் கடலே
உன் கரையில் இருத்தல்
என்னளவில் ஒரு பேறு
அது இன்று முடியவில்லை
யாரோ இருவர் போய்
ஏதோ ஓர் ஊரில்
காணாமல் போயினராம்
கடத்தலாம் என்று சொல்லி

கடையை அடைத்தார்கள்
வாகனத்தை மறித்து
வீதியிலே தீ கொளுத்தி
தடை போட்டு விட்டார்கள்

நான் தும்பி
ஒரு தெருவில்
போய் மொய்த்து
தொடர்ந்து
பறக்க முடியாமல் இருக்கின்றேன்

ஊர் உறங்கி இருக்கிறது
படைகள்
தாம் படித்த படிப்பையெல்லாம்
காட்டி அக்கிள் குத்தியும்
சிரிக்கவில்லை
காலையிலே
உதித்து வந்த சூரியனை

வான்
உச்சிக்கே போகாமல்
தடுத்து
நாய் சாப்பிட்ட
பிஸ்கானாய் மாற்றி விட்டார்
விழுகின்ற வெயில் கறுப்பு

மாலையில்லை இன்று
பொன்
மஞ்சள் வெயில் என்ன செய்யும்
எந்தத் தாவணிக்குள்
தோலாகி
இனி
நான் காணாப் பொருளாச்சா

-கோலைக்கிளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்தும் மறையாத மக்கள் தலைவர்

இலங்கைத் திரு நாட்டில் காலத்திற்கு காலம் எத்தனையோ முஸ்லிம் தலைவர்கள் தோன்றி தாம் சார்ந்த சமூக மக்களுக்காகப் பாடுபட்டுள்ளார்கள். அப்படிப்பட்டவர்கள் மக்களால் தலைவர்களாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றார்கள். அந்த வரிசையில் மக்களால் என்றும் நேசிக்கப்படும் தலைவர்கள் அரிதாக ஒரு சிலரே இருக்கின்றார்கள். அந்த ஒரு சிலரில் முதன்மையானவராக முஸ்லிம்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முஸ்லிம் காங்கிரஸிற்கான நிரந்தரத் தலைவர்தான் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களாகும். அன்னார் மறைந்து மூன்று வருடமாகின்ற இவ்வேளை அவரின் வாழ்வுக்கு றிப்புக்களில் ஒரு சிலதை இங்கு மீட்டிப்பார்ப்பது எமது கடமையாகும்.

ஜனனம் - 1948 ஆம் ஆண்டு ஒக்டோபர் 23 ஆம் திகதி.

கல்வி - ஆரம்பக் கல்வி கல்முனைக்குடி ஆண்கள் பாடசாலை (1960) கல்முனை உவெஸ்லி கல்லூரி (1961-1966) சட்டக்கல்லூரி பிரவேசம் (1969) 1974 பெப்ரவரி 05ஆம் திகதி சட்டத்தரணியானார்.

அரசியலில் நுழைவு : ஏலவே சமூகநல அமைப்புக்களில் முக்கிய பதவிகளை வகித்து சமூக சேவைகளில் திறமையாக இயங்கிய அன்னார் அரசியலில் ஆர்வம் கொண்டவராகத்திகழலானார். அதன் காரணமாக சில மேடைகளிலும் தான் ஆதரித்த கட்சிகளுக்காக ஆதரவு தேடி பிரச்சாரமும் செய்தார். அவ்வேளையிலேயே முஸ்லிம் ஐக்கிய முன்னணி என்ற ஒரு அமைப்பினை ஸ்தாபித்து அரசியலில் அடையாளப்படுத்த முயற்சிகளை மேற்க்கொண்டார் எனினும் அன்று அது உரிய பலன் தர வில்லை.

முஸ்லிம் காங்கிரஸ் உதயம் : 1980 களுக்குப்பின் வடக்குகிழக்கிலே இன ரீதியான மோதல்கள் தலை தூக்கின. இதன் காரணமாக முஸ்லிம்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். மேலும் முஸ்லிம்களுக்கென குரல் கொடுக்க எந்த அரசியல்வாதிகளும் முன்வரவில்லை. முன் வந்த ஒரு சிலரும் தமது பதவிகளுக்கும், தமது உயிர்களுக்கும் ஆபத்து வரும் எனநெண்ணி மௌனமாக இருந்தனர். இவ்வேளையிலேயே முஸ்லிம்களுக்கென ஒரு கட்சி அவசியம் தேவையென்ற நிலைமை உருவானது. இக்கருத்து வலுப்பெற்ற போது மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களும் இன்னும் சிலரும் முஸ்லிம்களுக்கென ஒரு கட்சியொன்றை ஆரம்பிக்க மக்களின் அபிப்பிராயங்களை. கிராமம். கிராமமாகப் பெற்றனர். இதன் பெறுபேறாக 1981ஆம் ஆண்டு காத்தான்குடியில் வைத்து காத்தான் குடியைச்சேர்ந்த முன்னாள் பட்டின சபைத்தலைவர் மர்ஹூம் அல்ஹாஜ் அஹமது லெப்பை அவர்களைத் தலைவராகக் கொண்டு "ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்" கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

1986ஆம் ஆண்டைய பிரகடனம் : தனது முயற்சியால் உருவான "முஸ்லிம் காங்கிரஸ்" கட்சி ஸ்தம்பித நிலையடைந்திருந்தமை மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களுக்கு மிகுந்த மனவேதனையைக் கொடுத்தது. எனினும் தனது விடா முயற்சி, பிடிவாதம் போன்ற குணங்களின் பெறுபேறாக மீண்டும் கட்சியை புனரமைக்க முயற்சி மேற்கொண்டார். ஆம் 1986ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கொழும்பு பாஷா விலாவில் "முஸ்லிம் காங்கிரசின்" தேசிய மாநாட்டினை முதன் முதலாக அன்னார் கூட்டி முஸ்லிம்களின் தனிப்பெரும் கட்சியாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைப் பிரகடனப்படுத்தினார். அம்மகா நாட்டிலேயே கட்சியின் தேசியத் தலைவராக அன்னார் ஏகமானதாக தெரிவு செய்யப்பட்டார். அன்று முதல் அவர் மரணிக்கும் வரை அப்பதவிக்குரியவராக அன்னார் திகழ்ந்தது ஒரு சிறப்பம்சமாகும். மேலும் இந்த மாநாடுதான் முஸ்லிம் காங்கிரஸின் எழுச்சிக்கு வித்திட்டதாகும்.

முஸ்லிம் காங்கிரஸின் வெற்றிகள் : அன்று தொடங்கிய பிரகடனம், முஸ்லிம் காங்கிரஸின் படித்தரமான வெற்றிக்கும், வளர்ச்சிக்கும் பயன் பெற்றன. முஸ்லிம் காங்கிரஸ் பெற்ற வெற்றிகளைப் போல் அதன் தேசியத் தலைவரான மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் வாழ்க்கையிலும் படித்தரமான வெற்றிகள் ஒன்றன் பின் ஒன்றாக கிடைக்கப்பெற்றன. ஆம் அன்னார் முதன் முதலாக 1989ஆம் ஆண்டு திகாமடுல்ல மாவட்டத்தில் போட் டியிட்டு சுமார் 62,000 வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினரானார். அதன்பின் அன்னாரின் சேவைகளில் அபிவிருத்திகளும் பெருமளவில் நடைபெறத் தொடங்கின.

அமைச்சர் பதவி : 1989ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட அவர் 1994ஆம் ஆண்டு தனது பதவியை தான் விடுத்த சவால் ஒன்றினை நிறைவேற்ற ராஜினமாச் செய்து உதாரண புருசராக மிளிர்ந்தார். எனினும் 1994ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிட்டு அதிகூடிய விருப்பு வாக்குகளையும் பெற்று மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராகி அவ்வேளை ஆட்சியேறிய பொ. ஐ. முன்னணி அரசாங்கத்தில் முக்கிய அமைச்சராகவும் தெரிவானார். இத்தேர்தலில் மு.காங்கிரஸ் 9 பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்று ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் திகழ்ந்தது. அக்கட்சி இந்த நிலையை அடைய அன்னாரின் தலை சிறந்த தலைமைத்துவமே காரணமாகும். மேலும் இத்தேர்தல்கள் வரை இலங்கை நாட்டிலே எடுப்பார் கைப் பிள்ளையாக இருந்து வந்த முஸ்லிம்கள் ஆட்சியின் பங்காளிகளாக தலை நிமிரவும் காரணமாகவிருந்த அரசியல் சாணக்கியரும் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்கள்தான் என்பதை எவரும் ஏற்றுக் கொள்வார்கள்.

அபிவிருத்திப்பணிகள் : அன்னார் அமைச்சராகியதன் பின் பல்வேறு அபிவிருத்திகள் நாட்டின் நாலாபுறங்களிலும் நடைபெற்றிருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் சிகரமாக

கத்திகழ்வது தென்கிழக்கு பல்கலைக்கழகமாகும். இப்பல்கலைக்கழகம் அமைக்கப்படுவதற்காக அன்னார் சந்தித்த இடர்கள். முட்டுக்கட்டைகள் கொஞ்ச நஞ்சமல்ல. எனினும் அவைகளையெல்லாம் உடைத்தெறிந்து தனக்கேயுரிய பாணியில் இதனை இப்பிரதேச மக்களின் கல்விக்காக அமைத்துக் கொடுத்தார்.

வேலை வாய்ப்புக்கள் : இன்று வேலைவாய்ப்பென்பது குதிரைக் கொம்பாகவிருக்கின்றது. முன்னரும் நிலை அதுதான். எனினும் அன்னார் பதவி வகித்த அமைச்சுக்கூடாகவும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பினை பெற்றுக் கொடுத்தார். அதனால் இன்று கோடிக்கணக்கான பணங்கள் மாதாந்த சம்பளமாக எமது முஸ்லிம்களும் இன்னும் எமது சகோதர இன மக்களும் பெற்று வருகின்றனர்.

நஷ்ட ஈடுகள். மானியங்கள் போன்ற வையும், மிக பாரிய அளவில் அன்னாரின் பதவிக்காலத்தில் வடக்கு கிழக்கு மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அன்னாரின் காலத்திற்கு முன்னரும், பின்னரும் அதாவது தற்போதும் எத்தனையோ அமைச்சர்கள் இருந்திருக்கின்றார்கள். இருந்து வருகின்றனர் எனினும் அன்னார் மக்களுக்கு வழங்கிய நிதிகள் போன்று வேறு எவரும் மக்களுக்கு வழங்கியதில்லை; மக்களுக்குத் தேவையானதை தேவையறிந்து பெற்றுக் கொடுத்த பெருந்தலைவர் அன்னாராகும். இதில் எதிரணி அரசியல் வாதிகளும், பொதுமக்களும் விதிவிலக்கல்ல.

முஸ்லிம்களை அடையாளப்படுத்தல் : இலங்கை அரசியலில் முஸ்லிம்கள் வெறும் கறிவேப்பிலையாகப் பாவித்த நிலையினை மாற்றி முஸ்லிம்கள் ஆட்சியின் பங்காளிகளாக உயர்வு பெறவும், சக இனங்களுடன் சம பந்தியில் உட்கார்ந்து பேசும் வல்லமையையும் ஏற்படுத்தியவர் மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களாகும். முஸ்லிம் காங்கிரஸ் உருவாக முன் இருந்த அரசியல் நிலைமைகளையும், உருவானதன்பின் வந்த நிலைமைகளையும் பார்க்குமிடத்து இந்த உண்மை புரியும்.

மேலும் வெறும் சலுகைகளுக்காக தேர்தல் காலங்களில் மட்டும் சுவனத்தில் கொள்ளும் சமூகமாக முஸ்லிம் சமூகம் அரசியல்வாதிகளால் வழி நடாத்தப்பட்டு வந்தது. இதனை முற்று முழுதாக மாற்றியமைத்து, தமது உரிமை பற்றி முஸ்லிம் சமூகத்தை பேச வைத்து, தட்டியெழுப்பிய பெருமையும் அன்னாருக்கேயுரியதாகும். ஆயுதங்களில் நம்பிக்கை வைக்காமல் அஹிம்சை வழியில் போராடும் வல்லமையை முஸ்லிம் மக்களுக்கு ஊட்டியவரும் அவரேயாகும்.

கொள்கையில் உறுதி : தான் எந்த நோக்கத்திற்காக தனது சமூகத்திற்கு ஒரு அரசியல் கட்சியை ஸ்தாபித்தாரோ, அந்த நோக்கம் திசை திரும்பாத வகையில் தனது அரசியல் வழிகாட்டலை அவர் தொடர்ந்தார். இன்று சில முஸ்லிம் தலைவர்கள் செய்வது போன்ற இடத்திற்கிடம் மாறுபட்ட பேச்சும், சோரம் போகும் நிலையும் அன்னாரிடம் துளியும் இருந்ததில்லை. பேச்சென்றால் எங்கும் ஒரே பேச்சு, ஒரே கொள்கை. இந்தக் கோட்பாடுகளுக்குள்ளேயே தனது செயலைக் கைக் கொண்டார். அன்னாருடன் உரையாடுவதற்கும் சில அரசியல் கட்சித்தலைவர்கள் அஞ்சினார்கள். அந்த அளவுக்கு ஆற்றல் மிக்கவராக அன்னார் திகழ்ந்தார். இவரின் துணிச்சலான நடவடிக்கைகளை முன்னாள் அமைச்சர்களான மர்ஹூம்கள் கலாநிதி பதியுதீன் மஹ்மூத், A.C.S. ஹமீட் போன்றோர் பகிரங்கமாகவே பாராட்டிப் பேசியிருக்கின்றார்கள்.

மரணத்தை அவர் எதிர்பார்த்திருந்தார் : முழு மூச்சாக தனது சமூகத்திற்காக உழைக்கும் எந்த நேரமும் தனது உயிர் பறிக்கப்படலாம் என்பதை அடிக்கடி தனது ஆதரவாளர்களிடம் அவர் கூறுவார். மரணம் எந்த நேரமும் தனக்கு ஏற்படலாம் என்ற நிலை இருந்து வந்த போதிலும், அதிலும் பயங்கரவாதிகளின் தாக்குதலால் அது மிக விரைவாக தனக்கு ஏற்படலாம் என்ற சூழ் நிலைகளுக்கு மத்தியிலும் அவை பற்றி அலட்டிக் கொள்ளாமல் கொண்ட கொள்கைகளுக்காக நெஞ்சுறுதி கொண்டு துணிவுடன் தனது சமூக மக்களுக்காக தொடர்ந்து குரல் கொடுத்து, அதற்கு செயல் வடிவம் தந்தவர்தான் மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களாகும்.

அவரின் வழிகாட்டல்களில் நடை பயின்ற முஸ்லிம்கள், இன்று எத்தனையோ பேர் சமூக அந்தஸ்துக்களில் ஆளாகி, பேராகி உயர் நிலையை அடைந்திருக்கின்றனர். அன்னார் ஏணியாக இருந்து ஏற்றிய சிலர் அன்னாரை எட்டி உதைக்க எத்தனித்தும் கூட அவைகளைப்பற்றி அலட்டிக் கொள்ளாமல் தனது கடமையிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வந்தார். இதுதான் அன்னாருக்கிருந்த தலை மைத்துவப்பண்பாகும். எப்படியும் அரசியலில் நடந்து கொள்ளலாம் என்ற நிலை மையை மாற்றி இப்படித்தான் வாழ வேண்டும் நமது அரசியலில் என அறிவுறுத்திய தலைவரும், அதனை நடைமுறையில் வாழ்ந்து காட்டியவரும் அவரேயாகும்.

போதமில்லாத அரசியல் : மர்ஹூம் அஷ்ரஃப் அவர்கள் தனது கட்சி ஆதரவாளர்களிடையே படித்தவன், பாமரன் என்ற பேதங்களைப் பாராமல் எவரிடம் என்ன திறமை இருக்கின்றதோ, அவைகளுக்கேற்றவாறு அவர்களைக் கௌரவித்து கட்சிப்பதவிகளைக் கொடுப்பவராக இருந்தார். இதன் காரணமாக அடிமட்டத்தொண்டர்களிடம் அன்னாருக்கு அபரிதமான ஆதரவு இருந்தது. இச்செயலானது ஏனைய கட்சிகளுக்கு முன்னுதாரணமாகும். மேலும் ஒரு சாதாரண ஆதரவாளர்களின் ஆலோசனைகளையும் தட்டிக்கழிக்காமல் அதனைக்கருத்தாக ஏற்றுக் கொண்டு அதனையும் செயல் வடிவமாக்கும் பணிகளுக்காக பயன்படுத்திக் கொள்வார். இப்படியான சிறப்பம்சங்களைக் கொண்ட மாபெரும் தலைவர்தான் மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களாகும். தன்னையும், தனது கட்சியையும் அழிக்க நினைத்த அரசியல்வாதிகளையும் தன்னகத்தே காலக்கிரமத்தில் சேர்த்துக் கொண்ட சாணக்கியரும் அவரேயாகும்.

எம்மை விட்டும் மறைந்தார் : மனிதன் பிறந்தான், வாழ்ந்தான், மறைந்தான், என்றில்லாமல் எதையாவது சாதித்தான், என்ற புகழோடு மரணிக்க வேண்டுமென்பதே அன்னாரின் விருப்பமாகும். அவரின் விருப்பத்திற்கு எல்லாம் வல்ல இறைவன் துணை புரிந்து அவரை சாதனையாளராக்கியதுடன் அன்னார் சமூகத்திற்காக ஓய்வு, ஒழிச்சலின்றி உழைக்கும் சந்தர்ப்பத்திலேயே அவரின் உயிர் பிரிய வேண்டுமென அந்த றப்புல் இஸ்ஸத் விரும்பினாரோ என்னவோ, யாரும் எதிர்பாராத நேரத்தில் அன்னாரின் மறைவு நடைபெற்றது. ஆம் நம்ப முடியாமல்தான் இன்னும் இருக்கின்றது. 2000மாம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16ஆம் திகதி காலை 10 மணியளவில் கொழும்பிலிருந்து அம்பாறை நோக்கி ஹெலிகெப்டரில் அன்னார் பிரயாணம் செய்தவேளை விபத்துக்குள்ளாகி எம்மைவிட்டும் மறைந்தார். இன்னாலில்லாஹி வஇன்ன இலைஹி ராஜிஊன்.

இந்தச் செய்தி கேட்டு அதிர்ச்சி யடைந்தவர்களும், கதறியழுதவர்களும் எண்ணிலடங்காத தொகையினராகும். இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றிலே

எம். எல். எம் மூஸ்தபா
அஷ்ரஃப் நற்பணி மன்றம் மருதமுனை

முஸ்லிம் அரசியல் தலைவர் ஒருவரின் மறைவு பாரிய தாக்கத்தினையேற்படுத்தியது அன்னாரின் மறைவின் போதே என்பது சரித்திரமாகும். 1948ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதி பிறந்த அன்னார் மரணிக்கும் போது வயது 52 ஆகும். மரணம் ஒன்றும் நடை பெறாத ஒன்றல்ல. எனினும் சிலரது மரணம் தாங்க முடியாத துக்கத்தினையும், நிரப்ப முடியாத இடை வெளியையும் உண்டாக்கி விடுகின்றன. அப்படிப்பட்டவர்களில் மிக முக்கியமான தலைவர்தான் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களாகும்.

கொண்ட கொள்கையில் தனது மூச்சின் முடிவு வரை உறுதியாக இருந்த அந்த மாபெரும் தலைவனின் லட்சியங்களையும், கொள்கைகளையும் கடைப்பிடித்து எமது சமூக மக்களுக்காக நாம் பாடுபட்டுழைப்பதே அன்னாரின் நினைவு தினத்தில் நாங்கள் செய்யும் கைமாறாகும். ●

முஸ்லிம்களே! இன்னுமா எமக்கொரு தேசிய ஊடகங்களின் தேவை உணரப்படாமல் இருப்பது?

நமது அன்றாட வாழ்க்கையின் ஒரு பிரதான காரணியாக தொடர்பு சாதனங்கள் உள்ளன. நாட்டில், உலகில் எங்கேனும் ஒரு செய்தி, நிகழ்வு, தேவை ஒன்றை அறிந்து படித்து, பிரயோசனங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இச்சாதனங்கள் பெரும் பங்களிப்பு செய்கின்றன. இனம், மொழி அடிப்படையில் உலகில் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் தேவையறிந்து அவ்வவ்வினங்களுக்காக அவ்வவ் மொழிகளில் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என உருவாக்கம் பெற்று இயங்குகின்றன. இவ்வூடகங்களானது தங்கள் தொழில் பாட்டை இயங்க வைக்கின்ற போது அவை ஒரு பக்கம் சார்பாக நடுநிலை போக்கை கடைப்பிடிப்பதுதான் ஓர் தார்மீக நாட்டில் சிறப்பான அம்சமாகும்.

இன்று எமது நாட்டில் பார்க்கின்ற போது ஊடகங்கள் எந்தளவு நடுநிலை போக்கை கடைப்பிடிக்கின்றன என்பதுதான் கேள்வியாகும். எமது நாட்டில் மூவினத்தவர்களும் வாழும் ஓர் ஜன நாயக நாடாகும். இந் ஜனநாயக நாட்டில் ஒவ்வொரு மொழிகளிலும் வெளியாகும் பத்திரிகைகளும், இலத்திரனியல் ஊடகங்களும் எந்தளவு பக்கச் சார்பின்றி தங்கள் செய்திகளை வெளியிடுகின்றன. ஆரம்ப கால நாட்களில் ஓரளவு நடுநிலையான போக்கை கடைப்பிடித்து வந்த ஊடகங்கள் தற்பொழுது தங்கள் நிலையை தலைகீழாக மாற்றியுள்ளன.

இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் தங்களது மொழியை தாய் மொழியாக தமிழைக் கொண்டதனால் அதிகம் படிப்பது, கேட்பது தமிழ் ஊடகங்களைத்தான். அவ்வாறு நிலைமை இருக்கும் போது இன்று இந்த தமிழ் ஊடகங்கள் எந்தளவு முஸ்லிம்கள் சார்பாக தங்கள் செய்திகளை வெளியிடுகின்றன. ஆனால் தமிழன் ஒருவனுக்கு ஒரு பிரச்சினை அல்லது ஒரு தேவையென்றால் அவற்றை தூக்கிப் பிடிக்கின்றன. இவையெல்லாம் இந்நாட்டின் அண்மைய நிகழ்வுகள். இந்நாட்டு முஸ்லிம்கள் கலிமாச் சொன்ன ஒரேயொரு காரணத்திற்காக இன்று வரை தாக்கியழிக்கப்படுகின்றார்கள். இவைகளை கேட்டால் குரல் கொடுத்தால், செய்திகளை வெளியிடச் சொன்னால் அங்கே 'இருட்டடிப்பு' செய்யப்படுகின்றது. இவற்றுக்கு நல்லதொரு உதாரணம் அண்மையில் காத்த நகரிலும், ஏறாவூரிலும் நினைவு கூர்ந்த ஹர்தாக்கள் தினம் ஆகஸ்ட் 3, ஆகஸ்ட் 12 ஆகிய நிகழ்வுகள் முஸ்லிம் குரல், நவமணியைத்தவிர மற்றைய பக்கச் சார்பில்லாத என்று கூறிக் கொள்ளும் இன விரோத, அரச, புலிகளது ஊது குழலாக

வெளியாகும் அனைத்தும் எவ்வாறு நடந்து கொண்டன. ஏன் இந்த கால கட்டங்களிலும் ஒவ்வொரு நாளும் வெளியாகும் செய்திகளை பாருங்கள். கேளுங்கள் இத்தனைக்கும் மத்தியில் காசு கொடுத்து அதிகம் இவர்களது தினசரிகளை வாங்கிப் படிப்பது என்றால் அது முஸ்லிங்கள்தான்.

இவ்வாறானதொரு நிலையில் இன்று முஸ்லிங்களது எதிர்கால சூழல் கேள்விக்குறியாகி, முஸ்லிம் தலைமைத்துவமும் தூங்கி கொண்டுள்ள நிலையில் எமக்கென்றதொரு ஊடகத்தின் தேவை உணரப்படவேண்டியுள்ளது. அது நாளிதழாக தாங்கி வந்து எம்மவர்களது பிரச்சினைகளை உலகிற்கு பறைசாற்ற முன் வருவார்களா? இந்த அரசியல்வாதிகளும் செல்வந்தர்களும் என்பதே இன்றைய அவசர தேவையாக இருந்து விடுகின்றது. சிந்திப்பார்களா? செயலுருபம் பெறச்செய்வார்களா?

றிபாய் எம். சம்சுதீன்
நிந்தவூர் - 07

Muslim Kural News Paper
முஸ்லிம் குரல் பத்திரிகை
181/1, Ananda Mawatha, Colombo -10

Advertisement Rates
விளம்பரக் கட்டண விபரம்

Page Size பக்க அளவு	Colour or Black & White கலர் அல்லது கறுப்பு வெள்ளை	Rate கட்டணம்
Full Page முழுப் பக்கம்	4 Colour (4 கலர்)	Rs. 60,000/-
	2 Colour (2 கலர்)	Rs. 40,000/-
	Black & White (கறுப்பு வெள்ளை)	Rs. 30,000/-
Half Page அரைப் பக்கம்	4 Colour	Rs. 30,000/-
	2 Colour	Rs. 20,000/-
	Black & White	Rs. 15,000/-
Quarter Page காற் பக்கம்	4 Colour	Rs. 15,000/-
	2 Colour	Rs. 10,000/-
	Black & White	Rs. 7,500/-
Half - Quarter Page அரைக்காற் பக்கம்	4 Colour	Rs. 7,500/-
	2 Colour	Rs. 5,000/-
	Black & White	Rs. 4,000/-
1 Column x cm 1 கலம் x செ.மீ. 1 கலம் = 3 செ.மீ. 1 Column = 3 cm	4 Colour	Rs. 150/-
	2 Colour	Rs. 100/-
	Black & White	Rs. 75/-

Front Page - Extra 30%
முன் பக்கம் - மேலதிகம் 30%
Premium Page - Extra 20%
விருப்பத்திற்குரிய பக்கம் - மேலதிகம் 20%

சிறு விளம்பரங்கள் - Classified Advertisements

முதல் 20 சொற்களுக்கு Rs. 200/- மேலதிக சொல் ஒன்றுக்கு Rs. 10/-
First 20 words Rs. 200/- Per Additional word Rs. 10/-

விளம்பர முகாமையாளர், முஸ்லிம் குரல் பப்ளிகேஷன்
Advertisement Manager, Muslim Kural Publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் தேச ஆவணப்படுத்தலுக்கும், நஷ்டஈட்டுக் கோரிக்கைகளுக்குமான மாதிரி விண்ணப்பப் படிவம்.

முஸ்லிம் தேச ஆவணக் காப்பகம்
181/1, Maligakanda Road,
(White Park)
Colombo - 10
Phone : 0777 389127

01. விண்ணப்பதாரியின் பெயர் :.....
02. முகவரி :.....
03. அடையாள அட்டை இல :..... 04. தொலை பேசி இல :.....
05. விண்ணப்பதாரிக்கும் (மௌத்தானவருக்கும் / காணாமல் போனவருக்கும் / அங்கவீனமுற்றவருக்கும்) இடையிலான உறவு முறை :.....

மௌத்தானவர்கள் / காணாமல் போனவர்கள் / அங்கவீனமுற்றவர்கள் பற்றிய விபரம் :

01. முழுப் பெயரும் முகவரியும், சம்பவம் இடம்பெற்ற, இடமும், திகதியும்:

02. கிராம சேவையாளர் பிரிவு :..... 03. தேர்தல் தொகுதி :.....
04. பிரதேச செயலாளர் பிரிவு :..... 05. மாவட்டம் :.....
06. பிறந்த திகதி : ..... 07. அடையாள அட்டை இல.....
08. சம்வம் யாரால் நிகழ்த்தப்பட்டது :.....
09. மரண அத்தாட்சிப்பத்திர இல :.....
10. மரண அத்தாட்சிப்பத்திரம் இல்லையாயின் காரணம் :.....
11. அங்கவீனமாயின் அங்கவீனத்தின் தன்மை :.....
12. காணமல் போனவரின் தற்போதைய நிலவரம் :.....
13. கல்வித் தகைமை :.....
14. தங்கிருப்போர் தொகை : ..... ஆண்:..... பெண்:.....
15. இதுவரையில் பெற்றுக் கொண்ட நஷ்டஈட்டுத் தொகை ரூபாவில் :.....
16. உருவ புகைப்படப் பிரதி ஒன்றையும் மரண அத்தாட்சிப்பத்திரத்தின் போட்டோ பிரதி ஒன்றையும் இணைக்கவும்.

.....
விண்ணப்பதாரியின் கையொப்பம். திகதி:.....

கவனத்திற்கு

அன்பார்ந்த நமது மக்களே! முஸ்லீம் குரல் இதழ் 18இல் இணைக்கப்பட்ட 'மாதிரி விண்ணப்பப் படிவம்' தொடர்பாக நமது மக்களின் பெரும்பாலானோர் விண்ணப்பப்படிவம் கேட்டு எம்மைத் தொடர்பு கொள்கின்றனர். அவ்விண்ணப்பப் படிவமானது மாதிரி விண்ணப்பப்படிவம்தான் என்பதை கவனத்தில் கொள்க. அவ்விண்ணப்பப் படிவத்தை மாதிரியாகக் கொண்டு நீங்களே விண்ணப்பப் படிவங்களை தயாரித்து எமக்கு விபரங்களை அனுப்பி வைக்கலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

பள்ளிமுனைக் கிராமத்தின் கதை

10 குறுநாவல்

-என்.ஏ.தீரன்-

அத்தியாயம் 6

குழாய் நீர்ச்சத்தம் நின்றவுடன் மைமுனா உடைமாற்றி வெளியே வந்ததும் மாமி உள்ளே போனாள்.

'முத்துமச்சான் ன்னம் தேத்தண்ணிய குடிக்கல்லியா?'

மைமுனா கேட்டதும் குளிர் தேநீரை விழுங்கிய முத்துமுகம்மது மைமுனாவை நேராகப் பார்த்தான். குளித்து முடித்த ஈரக் கூந்தல்... புதுச் சேலை... மைமுனாக் கிளியாரே... முத்துமுகம்மதின் கண்களை சந்திக்க தைரியமில்லாமல் மைமுனா யாஸினைப் பார்த்தாள்.

'..ம்..ம்மைனா..'

முத்துமுகம்மது சிரமப்பட்டு வாய்திறந்தான்.

'என்ன மச்சான்?' மைமுனா திடீரென தலை திருப்பியதும் அவளது ஈரஞ்சொட்டிய கூந்தல் நீர்த்துளிகள் சிலீரென முத்துமுகம்மதின் மார்பில் சிலிர்ப்புக் குளிர்ந்தன.

திடீரென அறைவாசலில் உற்பத்தியானான் சப்புச்சுல்தான். ரீசேர்ட்டும் டெனிம் லோங்கிஸுமாக உயரமாக தெரிந்தான். கையில் இடியப்ப பார்சல்கள்.

'மாமி எங்க? ந்தாங்க இடியப்பம்! சாப்பிட்டுப் பொறப்படுங்க

'மெடிக்கலுக்கு போவம்.. முத்தும்மது.. ந்தா.. சாப்பிட்டுட்டு அப்பிடி யாஸினுக்கு பக்கத்துல படுத்துக்க. நாங்க பகல் சாப்பாட்டுக்கு திரும்பிருவம். செரியா..? மைமுனா... அட புதுப்புடவையா... ம்..? செரி செரி!'

முத்துமுகம்மது தீப்பார்வையுடன் சுல்தானை எரித்தான். எச்சரிக்கையான சுல்தான் –

'ஙா.. செரி செரி... பின்னேரம் முத்தும்மத தலைவார எடத்துக்கு கூட்டிப் போவம்'

'.....'

'கொளும்புல 'முஸ்பாத்தியா' சுத்திப்பார்க்க ஆயிரம் எடம் இரிக்கி. எல்லாம் காட்டுவன் மைம்னாக்கும் மாமிக்கும்... ஆனா நேரமில்ல.. 'மெடிக்கல்' முடிஞ்சா பாப்பம்! 'கோள்ப்பீஸிக்கு' கூட்டிப்போறன் எல்லாரையும்....?

'அதெல்லாம் வேணா! வந்த வேலயப் பாப்பம்' என்றாள் மாமி.

'செரி, வெளிக்கிடுங்க! பாஸ்போட்டு அய்டீங்காட்டு. ஏஜென்சிர கடிதம்... காசி.. எல்லாத்தையும் எடுங்க.. கவனம்.. கொண்டாங்க... செரி.. என்னது.. மைம்னா? சிரிக்கனும். ஏன் சொத்தய ஒரு சாதியா நீட்டி வெச்சிருக்காய்... பயப்புடாத.. செரிவாங்க!'

முவரும் புறப்பட்டு வெளியே வர முத்துமுகம்மது உணர்வற்று கூடவே வந்தான். மாடியிலிருந்து இறங்கி வந்தனர். முச்சக்கர வண்டி வாசலிலேயே கிடைத்தது.

'கொள்பிற்றி யழுத இளந்தாரியோ? கீயக்...'

சுல்தான் சிங்களத்தில் வாதிட்டு, ஏறினான். இவர்களை ஏறச்செய்தான். தற்செயல் நிகழ்வு போல பாவித்து மைமுனாவுக்குப் பக்கத்தில் அமர்ந்தான். முத்துமுகம்மதை விஷமமாகப் பார்த்தான். முத்துமுகம்மதின் வயிற்றில் தீ எரிந்தது.

'முத்தும்மது! வெறும் மேலோட ரோட்டுல நிக்காத. இது பள்ளிமுன ல்ல கொளும்பு.. கொளும்பு... உள்ள போ.. டாட்டா.. றிற்க்கிக்.. ரைற.. கண்டக்கோ டக்காலா ட்ரைவர்...'

ஓட்டோ சீறிப்பறந்தது. வாகனங்களுள் புகுந்து மறைந்தது. முத்துமுகம்மதின் இதயம் பச்சதாபத்தில் படபடத்தது. மைமுனாவின் அருகிலமர்ந்து போகிறான்... நினைப்பே வயிற்றைப் புரட்டியது. காறித்... துப்பினான். கண்களில் கண்ணீர் உற்பவிக்கவே 'சட்' டென அடக்கினான். செய்வதறியாது நின்றான். அவ்விடத்திலேயே குந்திவிட்டான். வீம்மல் வெடிக்குமாப் போலிருந்தது. ...ப்ப.. என்ன செய்ற.. ஏது செய்ற.. 'ஏய்! கவ்தமெ ஓயா? டேய் உள்ள வா! அங்கினிக்கு குந்திக் கொண்டிருக்காதே..'

லொட்ஜ் அதிபதியின் சுடூரக்குரலில் பயந்துபோய் உள்ளே வந்தான். அறைக்குள் வந்து விழுந்தான். யாஸின் இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தான். இடியப்ப பார்சல்கள் கிடந்தன. கட்டிலில் மைமுனாவின் களையப்பட்ட சுறுப்புத் தாவணியும். புள்ளிப் பாவாடையும் கிடந்தன.

'காட்டவ்லியா'

கொடியேற்றத்தின்போது முத்துமுகம்மது வாங்கிக் கொடுத்தது. மெதுவாக அள்ளினான். முகத்தில் வைத்து அழுத்தினான். மைமுனா கமகமத்தாள்.. கண்ணீர் திடீரென வழிந்தது.

'...என்ட... கிளியே.. என்டல்லோ..'

அப்படியே சாய்ந்து படுத்தான். வெகுநேரம் அழுதான்.. எப்போதோ தூக்கம் ஆனான்..?

'...த்துச்சான்.. முத்துமச்சான்.. எழும்புங்க... எழும்புங்க...'

'.....'

ம்மாவும் லாத்தாவும் வாறாஹ.. எழும்புங்க.. மச்சோவ்!'

'என்னடா...?'

திடுக்கிட்டெழுந்தான் முத்துமுகம்மது. சுயநிலைக்கு மீண்டான். மாடிப்படிகள் தடதடத்தன. மூவரும் வந்துவிட்டார்கள். பகல் இரண்டு மணி இருக்குமா...?

'நெல்லாச் சொணங்கிட்டு. மகன் யாசின்.. எழும்பிட்டியா?'

மூவரும் உள்ளே வந்தனர். சப்புச்சுல்தான் முகம் மலர்ந்திருந்தான். மைமுனாவின் முகம் தெளிவாக இருந்ததில் ஓரளவு நிம்மதி ஏற்பட்டது. கைகளில் சாப்பாட்டுப் பார்சல்கள்.

'வாப்பாடீ! கொளும்புல என்ன வெயிலாப்பா.. கொளும்புல ஒரு லெக்கும் தெரியுது ல்ல. எங்கால போனாலும் ரோட்டும் கடயும்தான்..! கூட்டுமானந்தான்! மாளிகான்..! ச்ச்சனமா..? ம்மாடீ.. சுலுத்தான் தம்பிக்கி கொளும்புல தெரியாத எடமில்ல சிங்குளம் தளதண்ணி...'

மாமி கொழும்புக் கனவுலகில் தனைமறந்து இலயித்திருந்தாள். மைமுனாவின் விழிகளிலும் நிச்சயம் பாதிக்கனவு இருந்தது.

புன்னகைத்தாள் மாமி –

'யாஸின் சாப்பிடுமகன். முத்தும்மது சாப்பிடு.. நாங்க ஓட்டல்ல சாப்புட்டம்.. ம்மாடி.. சோத்துக்கூட மாதிரியா அது. சப்புச் சுல்தான பெருமித அலட்சியமாக –

'செரி மாமி! 'மெடிக்கல்' 'கிளியர்.' எல்லாஞ் செரி! நாளக்கி ராவைக்கு 'பிளைட்டு' மைமுனாவ நாளக்கி மத்தியானம் யாப்போட்டுக்கு கூட்டிப் போகனும். அதோட வேல செரி!'

'அங்க கப்பல எறங்குமா சுல்தான் மாமா...?'

'ஓண்டா குட்டி' நீயும் வாற!'

'நாளைக்கு ராவைக்கா பீளைட்டு...?' – முத்துமுகம்மது வாய் பிளந்தான். இவ்வளவு விரைவிலா...

'வாய மூடு! முத்தும்மது யாப்போட்டுக்கு வெரத்தேவல்ல. முத்தும்மத அவண்ட தலைவர்ர ஊட்ட கூட்டிப்போய் உட்டுட்டு நாம போகலாம்.. என்ன மாமி? மறுகா. யாஸினுக்கு 'சூ' காட்டனும். மாமிக்கி 'கோள்ப்பீஸி' காட்டனும் மைமுனாக்கு....'.

(இன்னும் வரும்)

வெளிச்ச் வாசல்

புஷ் – டோன்

புனித பூமியின் புனிதத்தைக் கொல்பவர்கள்

2

ஆங்கிலத்தில்: முஹம்மத் குர்ர் தமிழில் : அபூ ஸாலிஹ்

அடுத்த நாட்காலை புதிதாகத் திறக்கப்பட்ட மனோவியல் நலச் சிகிச்சையகத்துக்கு என்னைப் போதகர் அழைத்துச் சென்றார். அதன் முன் கத வில் 'புனித பூமி மன்றம்' என்று எழுதப்பட்டிருந்தது. அங்கு அன்பான ஒரு பலஸ்தீனப் பெண்ணைச் சந்தித்தேன். அப் பெண் என்னைப்பற்றி இரண்டு மணி நேரத்துக்கும் மேலாக விசாரித்தார். அவரிடம் எனது கவலைகளையும் பிரச்சினைகளையும் மறைக்காமல் திறந்து கொட்டினேன். அந்தக் கனிவு நிறைந்த பெண் என்னை ஆறுதல் படுத்தினார். நான் இனிமேல் தனியாக உலகை எதிர் கொள்ளும் அவசியம் ஏற்படாது என்று சொன்ன அப்பெண், ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் என்னைப் போன்ற ஆதரவற்ற ஆயிரக் கணக்கான குடும்பங்களுக்கு உதவுவது போல எனக்கும் உதவு வதாகச் சொன்னார். அடுத்த அறைக்குச் சென்ற அந்தப் பெண் ஒரு பெட்டி நிறைய உணவுப் பொருட்களும் உடு புடவைகளும் கொண்டு வந்து தந்தார். அவர்களது வாகனத்தின் சாரதி அவற்றையும் போதகரையும் என்னையும் ஏற்றிக் கொண்டு வந்து எங்களது வீட்டிலே விட்டுச் சென்றார். நான் வீட்டுக்குச் சென்ற போது உணவுக ளையும் உடுபுடவைக ளையும் கண்ட பிள்ளைகள் ஆனந்தக் கூத்தாடினா ர்கள். நான் வரும்போது 'சாந்த குளோஸ்' ஐ அழைத்துக் கொண்டு வந்த வீட்டேன் என்று சந்தோ ஷப்பட்டார்கள். போதகருக்கு வேறு வேலைகள் இருப்பதால் நாளைக்கு என்னுடன் வந்து இன்னும் பொருட்களை எடுத்துவர உதவி செய்ய வேண் டும் என்று நான் ஜோனிடம் கேட்டுக் கொண்டேன்.

அடுத்த நாள் ஜோனும் நானும் மனோவியல் நலச் சிகிச்சையகத்துக்குச் சென்றோம். நான் அங்குள்ள கனிவான இளம் பலஸ்தீனப் பெண்ணுடன் பேசிக் கொண்டிருக்க, ஜோன் வைத்தியர் இருந்த அறைக்குள் சென்றான். எனது குடும்பம் 'புனித பூமி மன்றத்தின்' உதவி பெறுவோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் இனி மேல் தொடர்ந்து உதவிகள் வழங்கப்படும் என்றும் அப் பெண் எனக்குத் தெரிவித்தார். உணவு, உடைகள், பல் மருத்துவம், மற்றும் மருத்துவ உதவிகள், வருடத்தில் பாடசாலை ஆரம்பிக்கும் காலத்தில் பிள்ளைகளுக்குரிய பாடசாலைப் பொருட்கள், மனநல மருத்துவம் போன்றவை தொடர்ச்சியாக எங்களுக்கு இலவசமாக வழங்கப்படும் என்று அப் பெண் விபரித்துக் கொண்டிருக்க மகிழ்ச்சியில் என்னாலும் ஜோனினாலும் அதனை நம்பமுடியவில்லை. மைக்கேல் சொன்னது சரிதான். யேசு எங்களைக் கவனித்துக் கொள்கிறார். இந்தப் பணம் எங்கிருந்து வருகிறது என்று அப் பெண்ணைக் கேட்டேன். அமெரிக்காவில் வாழும் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள் வழங்கும் உதவிப் பணத்தைக் கொண்டு இயங்கும் அமெரிக்க அமைப்புத் தான் இந்த 'புனித பூமி மன்றம்' என்று அவர் சொன்னார். இப்படிக் கிடைக்கப் பெறும் அன்பளிப்புகள் பின்னர் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களுக்கும் லெபனான், ஜோர்தான், சிரியா ஆகிய நாடுகளில் வாழும் பலஸ் தீன அகதி முகாம்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின் றன. அதேக நன்கொடை யாளிகள் ஒரு முழுக் குடும்பத்தையோ அல்லது அநாதைகளையோ மொத்தமாகப் பொறுப்பேற்றுக் கொள்வதுமுண்டு. அவ்வாறான ஒரு பொறுப்பேற்கப்பட்ட குடும்ப மாகவே எம்மையும் பதிவு செய்துள்ளதாக அப்பெண் கூறினார். அமெரிக்க அரசு இவ்விட யத்தில் மிகவும் உதவுவதாகத் தெரிவித்த அப்பெண் குறிப்பாக அமெரிக்க மக்களின் இரக்க சிந்தையைப் பாராட்டினார். ஒரு புறம் அமெரிக்கர்கள் எமது மண் ணை ஆக்கிரமிப்பதற்கு இஸ்ரேலியருக்கு ஒத்தாசை புரிந்து கொண்டு உணவையும் பணத்தையும் எங்களுக்கு அனுப்பி எங்களை விற்பனை செய்து கொண்டிருக்கிறது என்று எண்ணி நான் ஒரு கணம் நிகைத்தேன். ஆனாலும் ஏதோ ஒரு வகையில் உதவியும் அதன் மூலம் ஒரு நம் பிக்கையும் பிறந்திருப்பது குறித்து இறுதியில் மகிழ்ச்சியடையவே செய்தேன். இனி எனது பிள்ளைகளை ஒரு நிலைக்குக் கொண்டு வருவதில் நான் தனியாளாகச் சிரமப்ப டத் தேவையில்லை.

இரண்டு மணித்தியாலங்களுக்குப் பின்னர் ஜோன் டாக்டருடன் அவருடைய அறையிலிருந்து கண்ணீர் மல்கியவனாக வெளியே வந்தான். என்னை ஆதரவுடன் அணைத்து இதுவரை எனக்கு ஒத்தாசை புரிய முடியாமலிருந்தமைக்காக மன்னிப்புக் கோரினான். மாதத்தில் ஒரு நாள் அவன் டாக்டரை வந்து சந்திக்க வேண்டும் என்று டாக்டர் கேட்டுக் கொண்டார். இருமலும் ஆஸ்மாவுமாக வருத்தப்படும் எனது இரு பிள்ளைகளையும் நாளை அழைத்து வந்து சிறுவர்களுக்கான வைத்தியரைப் பார்ப்பதாகச் சொன்னேன். வீடு திரும்பிக் கொண்டிருந்த போது எனதும் ஜோனினதும் கண்ணீர்த் துளிகள் கைகளை நனைத்தன. ஆனால் முகங்களில் புன்னகை நிரம்பியிருந்தது. எனது வாய் முணுமுணுத்தது.... 'யேசுவே... உங்களுக்கு நன்றி!'

அன்றிரவு என்னால் தூங்க முடியவில்லை. இரவு முழுவதும் ஆண்டவனுக்கும் யேசுவுக்கும் மற்றும் தாராள மனப்பான்மையும் நல்வெண்ணமும் கொண்டு தங்களது நன்கொடைப் பணம் மூலம் எமக்கு உதவிய அமெரிக்க மக்களுக்கும் நன்றி கூறிப் பிரார்த்தித்தேன். உலகின் கண்களுக்குத் தோன்றாமல் நீண்ட காலமாக மௌனித்த நிலையில் நாம் கஷ்டங்களை அனுபவித்து வந்திருக்கிறோம். அது இப்போது ஒரு நம்பிக்கையைக் கொண்டு வந்திருக்கிறது. மிகத் தூரத்திலிருந்து தாராள சிந்தையும் நல்ல மனமும் கொண்ட அமெரிக்கரின் உதவியால் குறைந்தது பிள்ளைகளாவது கவனிக்கப் பெறுகிறார்கள். மைக்கேல் பயன்படுத்திய பைபிளைக் கையில் வைத்துக் கொண்டபடி முதல் முறையாக எவ்வித மனப் பாரமும் இன்றி அன்றிரவு உறங்கினேன்.

அடுத்த நாள் அதிகாலையிலேயே நித்திரை விட்டெழுந்தேன். பள்ளிவாயிலிலிருந்து அதிகாலைத் தொழுகைக்கான அழைப்பு ஒலிக்கக் கேட்டேன். எனது முஸ்லிம் அயலவர்கள் அன்று நோன்பு நோற்க ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் எப்போதும் ரமழான் மாதத்தில் கடைப்பிடிக்கின்ற ஸக்காத் அல்லது ஸதக்கா உதவியை எனக்குத் தந்து வந்திருக்கிறார்கள். அமெரிக்க மக்களைப் போலவே உதவும் அவர்களுக்கு நான் மிக்க நன்றிக் கடன் பட்டிருக்கிறேன்.

பின்னர் கையோடு ஜோனையும் அழைத்துக் கொண்டு 'புனித பூமி மன்றத்'துக்குச் சென்றேன். அவர்கள் எனது மகனுக்கும் எனக்கும் உதவி செய்வார்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்கள் மிகவும் நல்லவர்கள்.

'ஒஹ்...ஆண்டவரே...' எனது மகன் நம்ப முடியாமல் அலறினான். சிகிச்சையகத்தின் கதவில் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்த அறிவிப்பை அவன் வாசித்தான். ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் கட்டளையின் பேரில் சிகிச்சையகம் மூடப்பட்டுள்ளதாக அது தெரிவித்தது. மன்றத்தின் பணத்தை ரமளான் மாதம் முழுவதற்கும் அவர் முடக்கியதோடு மாத்திரமன்றி உதவி வழங்கும் செயற்பாடுகளையும் நிறுத்தக் கட்டளையிட்டிருந்தார். நான் கதறி அழுதேன், அலறினேன். 'ஆண்டவரே ஏன் இப்படி எனக்கு நடக்கிறது. எங்களுக்கும் எங்கள் குழந்தைகளுக்கும் இப்படி ஏற்படுகிறது... எப்போதும் நாங்கள் கஷ்டத்தில் உழலும் நிலை ஏன்?... ஏன்?' எனது வயிற்றில் யாரோ குத்தி விட்டதாக உணர்ந்தேன். எனது வாழ்வையும் சுவாசத்தையும் நம்பிக்கையையும் யாரோ தூர எடுத்துச் சென்று விட்டதாக உணர்ந்தேன். நான் பைத்தியம் பிடித்தாற் போல் அழுது கொண்டிருந்தேன். மன்றத்தைச் சேர்ந்த அந்தப் பெண் என்னிடம் வந்தார். தனது பையிலுள்ள பணத்தையெல்லாம் வாரித் துடைத்து என்னிடம் தந்து விட்டுச் சொன்னார், 'என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வையுங்கள். அவன் விடாமுற்சியுள்ளோரிலும் வருத்தமுற்றோரிலும் அன்பு கொண்டுள்ளான்.'

அப்பெண்ணை நிமிர்ந்து பார்த்தேன். எனது கேள்வியைப் புரிந்து கொண்ட அவர் இறுதியாக இப்படிச் சொன்னார். ' ஷரோன் புஷ்ஷை மிக அண்மையில் சந்தித்தார். அந்தச் சந்திப்பின் இரண்டாவது நாள் புஷ் எங்கள் செயற்பாடுகளை நிறுத்தி விட்டார். பல வருடங்களாக யூத, அமெரிக்க அமைப்புகளும் அமெரிக்க ஊடகங்களும் மற்றும் அவரை உங்களுக்குத் தெரியாது - நியூயோர்க்கில் வசிக்கும் யூதரான சைனற்றர் சார்ள்ஸ் ச்சுமரும் நாங்கள் பயங்கரவாதத்துக்கு உதவுவதாகத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார்கள். கடைசியாக ஜனாதிபதியைக் கொண்டு சாதித்துக் கொண்டார்கள்.'

நீண்ட நேரமாக நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். ஜோன் அங்கிருந்து போய் விட்டான் என்பதை பின்னர்தான் உணர்ந்தேன். அவனைக் கூப்பிட்டுப் பார்த்தேன். சில நிமிடங்களுக்குப் பின்னர் தூரத்தில் பாரியதொரு குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டது. திடீரென ஒரு பயம் என்னைப் பற்றிக் கொண்டது. திகைத்து நின்றேன். 'இல்லை... அப்படி இருக்காது... அது அவனாக இருக்காது! ஆண்டவரே, அது அவனாக இருக்கக் கூடாது!

காத்திராப் பிரகாரமாக போதகர் என்னை நோக்கி வருவதைக் கண்டேன். அவர் விழிகளில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது...என்னிடமிருந்து பெரியதொரு அலறல் வெளிப்பட்டது... 'ஏன்? எனது யேசுவே ஏன்?.. ஏன்??

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாத்தின் மீது இஸ்ரேலின் ஈவிரக்கமற்ற போர்!

சர்வதேச ஊடகங்களூடாகப் பாரபட்சமான முறையில் வெளியிடப்படும் நிலையில் உள்ள, இஸ்லாத்தின் மீதான தாக்குதல்கள் அண்மைக்காலம் தொடக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் நஸ்ரத் எனும் பகுதியில் உள்ள சிஹாப்தீன் பள்ளிவாயல் இஸ்ரேலிய படையினரால் புல்டோசர்கள் மூலம் தாக்கியழிக்கப்பட்டது. இந்தத் துர்ப்பாக்கிய நடத்தையும் செயலும் முஸ்லிம்கள் தொடர்பாக இஸ்ரேலின் மிலேச்சத்தனமான நடவடிக்கைகளைப் புடம்போட்டுக் காட்டுகின்றன.

முதலில் இப்பிரதேசத்தை ஒரு இராணுவப் பிரதேசமாகப் பிரகடனம் செய்து பள்ளிவாயலின் அத்திவாரங்களைத் தகர்த்த இஸ்ரேலிய இராணுவம், இம் மூர்க்கத்தனமான செயலினை எதிர்த்த அப்பாவி மக்களைத் தமது இராணுவ வாகனங்களில் கைது செய்து ஏற்றிச் சென்றது.

பள்ளிவாயிலை 600 சதுர மீட்டர் அளவிலான இடத்தில் நிர்மாணிக்க இஸ்ரேலிய அரசே அனுமதியளித்து விட்டு, கட்டிடப் பணிகள் நடக்கையில், கட்டிட அனுமதிப் பத்திரம் இன்றிக் கட்டப்பட்டதனால் இடிக்கப்பட்டதாகப் போலிக் காரணத்தை உலகிற்குக் காட்டுகிறது இஸ்ரேலிய அரசு.

துரதிஷ்டவசமாக முஸ்லிம்கள் தொடர்பாக எச்செயலும் எவ்வளவு பாதகமானவைகளாக, சட்ட ரீதியானதாக இருப்பினும், இஸ்ரேலிய அரசு அவற்றைப் பொருட்படுத்துவதில்லை.

இத்துடன் நில்லாத இஸ்ரேலிய அரசு அதே நாளில் அல் அக்ஸா பள்ளி முற்றவெளியில் யூதத் தீவிரவாதிகளை உட்செல்ல அனுமதித்தது. இந்த ஆவேசமூட்டும் செயலினை அனுமதிக்க முடியாது. காரணம் அவர்களின் நோக்கம் இஸ்லாமியப் புனிதத்தலத்தில் தம் கால்களை ஊண்டிக் கொள்ள யூதத் தீவிரவாதிகட்கு இடமளிப்பதாகும்.

புனித அல் அக்ஸாப் பள்ளிவாயலினைத் தகர்த்து அழித்துவிட்டு யூதவழிபாட்டிடமொன்றினை அமைக்க இடமளிப்பதே இதன் நோக்கமாகும். உட்சென்ற யூதர்களினால் தயக்கமின்றி வெளிப்படையாக இது கூறப்பட்டுமுள்ளது.

இஸ்லாத்தின் இப்புனித ஸ்தலத்தைத் தகர்க்கக் கங்கணம் கொண்டுள்ள இந்த யூதத் தீவிரவாதிகளை எவரும் கைது செய்யவோ, கண்டிக்கவோ முன்வராமை இஸ்ரேலின் வழமையான போக்கையே வெளிக்காட்டுகிறது.

35 இலட்சம் பாலஸ்தீனியர்களுக்குத் தமது புனித பள்ளிவாயலுக்குட் சென்று வழிபட அனுமதி மறுக்கும் சட்டத்தினை உண்மையில் நாகரிகமான ஒரு சட்டம் எனலாமா? முழு உலகிலும் இருந்து வரும் உல்லாசப் பிரயாணிகள் அனுமதிக்கப்படும் அதேவேளை 2 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பாலஸ்தீனியர்கள் அக்ல் அக்ஸா பள்ளிவாசலினுள் செல்ல அனுமதி மறுக்கப்படுவதன் நியாயம்தான் என்ன?

அராஜகங்கள் இத்துடன் முடிவுறவில்லை. சில மாதங்களுக்கு முன்னர் உம்அல் பஹ்ம் எனும் பாலஸ்தீன நகரை முற்றுகையிட்ட இஸ்ரேலியக் காவல்படை ஷெய்க் ராஇத் ஸலாஹ் உட்படப் பல இஸ்லாமியத் தலைவர்களை மூர்க்கத்தனமாகக் கைது செய்தது.

அவர்கள் செய்த குற்றம் காஸாவிலும், மேற்குக் கரையிலும் பசியால் வாடி வதங்கிய பாலஸ்தீனியக் குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கியமையே. இவ் அப்பாவி மக்கள் தொடர்ந்தும்

பட்டினியால் வாட வேண்டும் என்பது எவ்வாறு நியாயமானதாக இருக்க முடியும்.

கைது செய்யப்பட்ட இஸ்லாமியத் தலைவர்கள் இன்னமும் சிறைகளில் வாடுகின்றார்கள். பிற நாடுகளில் விடுதலை வீரர்களாகச் சித்தரிக்கப்படும் இத்தலைவர்கள் இஸ்ரேலில் குற்றவாளிக் கூண்டில்.

பிரதமர் ஏரியல் ஷரோனின் நெருங்கிய நண்பரான அமைச்சர் பென்னி எலோன் இஸ்லாத்தை முழு உலகிலும் இருந்து அழித்து விடுமாறு உலகெங்கிலுமுள்ள யூதகிரிஸ்துவ மக்களுக்கு அறைகூவல் விடுத்தமை இங்கு நோக்க வேண்டியது. இந்த ஈனமான செயல் எவராலும் கண்டிக்கப்படாமை விசனத்துக்குரியது.

விஷேடமாக அமெரிக்காவிலும், இஸ்ரேலிலும் யூதத் தலைவர்களின் இவ்வீனமான செயல்களுக்கு எதிராக முஸ்லிம்கள் யாது செய்ய வேண்டும்?

உலகெங்கிலுமுள்ள முஸ்லிம்கள் விஷேடமாக ஊடகத்துறையினர், தொடர்பு சாதனத் துறையினர் இப் பாசிஸ செயல்களை உலகிற்கு வெளிக்காட்டுதல் வேண்டும்.

நம்து சின்னம்

கேள் முஸ்லிம் தேசப் பெண்ணே!
ஒரு காலத்தில்
மரம்
உனக்கு மைல் கல்லாகவிருந்தது

பிறகு உனது சின்னமாகியது

சில தருணங்களில் நீ வாக்களிக்க
நேர்ந்தது
ஆயினும்
கல்புகளின் ஆகர்ஷிப்பின்றியே
சூரிய வெப்பத்திலும் நிலாக், குளிரிலும்
நீண்டு வளர்ந்தது மரம்

இன்றோ
ஆணிவேர் அறுந்து
குற்றுயிராய் சரிந்துளது மரம்

நீ அறியாதுள்ளாய்
மீளமைக்கும் வலுத் தெரியாதுள்ளாய்
சூழும் பயங்கரம் புரியாதுள்ளாய்

சொல்!
நீ மூட்டை முடிச்சுகளுடன்
குட்டி நெட்டிகளுடன்
மண்ணின்
தொப்புள் கொடியறுத்துப் பெயரும்
நாள்வரை
மௌனித்தா இருக்கப் போகிறாய்?

–சம்மாந்துறை ஹஸ்னதா.

முஸ்லிம் குரலுக்கு
நாட்டின் நாலாதிசையிலிருந்தும்
செய்தியாளர்கள்
விற்பனை முகவர்கள்
வேண்டப்படுகின்றனர்.
01 ஒக்டோபர் 2003க்கு முன்
பூரண விபரத்துடன்
தொடர்பு கொள்ளவும்.

சீதனமெனும் சீர்கேடு!

ஒரு ஆண் பெண்ணைத் திருமணம் செய்யும்போது குறிப்பிட்ட தொகைப் பணத்தை பெண் வீட்டாரிடம் பெறுவது ஒரு வழக்கமாகவே ஆக்கப்பட்டுள்ளது. ஒரு பெண்ணுக்கு குணம், படிப்பு, அழகு எது இல்லாவிட்டாலும் சீதனம் எனும் கட்டாயப் பணம் ஆணினாலோ அல்லது அவனது வீட்டினாலோ அறவிடப்படுகிறது. பள்ளி வயதில் பாடசாலைக்கு இருபாலா ரும் பணம் செலுத்துவது போன்று பெண் வாழ்க்கைக்கு திருமண வயதில் சீதனம் செலுத்துகிறாள்.

ஆதிகாலத்தில் அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்று பெண்களை வீட்டில் பூட்டி வைத்தனர். ஆண்கள் சம்பாதித்தனர். இதனால் திருமணத்தின் பின்னும் அவளை வைத்துக் காப்பாற்றும் பொறுப்பு ஆணினதாகவே இருந்தது. எனவே அதற்கு முற்பணமாக சீதனத்தைப் பெற்று காப்பாற்றினான். ஆனால்

இவ்வளவு விஞ்ஞான முன்னேற்றம் கண்டு ஆண்களைப் போல் அரைவாசிக்கும் மேற்பட்ட பெண்கள் வேலை பார்க்கும் இந்தக் காலத்திலுமா இந்த மடத்தனமான சம்பிரதாயத்தை பின்பற்ற வேண்டும். ஓர் உண்மையான அறிவுள்ள ஓர் ஆண்மகன் எப்படி எந்த வகையில் தன்னையே ஒரு பெண்ணுக்கு சொற்ப விலைக்கு விற்க முன்வருவான். இலட்சக்கணக்கில் என்றாலும் அதைவிடப் பெறுமதியானது அன்றோ அவனது உயிரும், உடலும், மனதும், உரிமைகளும். அரிச்சந்திரன் தன் பொய் சொல்லாக் கொள்கையை வாழ்நாள் முழுக்க கடைப்பிடிப்பதற்காய் தன் மனைவியை, மகனை, விற்றுப் பின் தன்னையே விற்றான். ஆனால் இந்த சீதனப்பைத்தியம் பிடித்தலினூடேயும் ஆண்கள் தங்களை எதற்காக விற்கிறார்கள்.

ஏன் அவர்கள் சீதனமே வாங்கக் கூடாதென்று ஓர் உருப்படியான கொள்கையைப் பின்பற்றக் கூடாது. சீதனம் என்ற பெயரில் அவன் ஒரு சதம் பெற்றாலும் திருமணம் முடிந்த பின் மனைவியானவளுக்கு இவன் என்னை சீதனம் எடுத்து என் பெற்றோரை வதைத்துத் திருமணம் முடித்தவன்தானே என்ற எண்ணம் வாழ்க்கை முழுவதிலும் மறக்கக்கூடியதாயில்லை. (அத்துடன் முழு வாழ்க்கையும் அவளோடு கழிக்கும் போதும் அவனது இன்பம், துன்பம் என பல்வேறு உணர்ச்சிகளால் உருவாக்காவது உதவிப்போவது இல்லை.) மாறாக துன்பத்தைத்தான் தரவல்லது. அத்தோடு நில்லாமல் சீதனம் எடுக்கத் தூண்டும் பெண்களைப்பற்றி என்ன கூறுவது? இனம் இனத்தைச் சாரும் எனும் பழமொழியே இந்தப் பெண்ணினத்தால் மாறிப் போகிறதே. பெண்ணுக்குப் பெண்ணே எதிரியா? கிள்ளிவிட்டு குழந்தையை ஆட்டுவதுபோல் சீதனம் எடுக்கத் தூண்டிவிட்டு பெண் என்றால் பாரம் எனும் கதையும் விடுகிறார்கள். ஆணுக்குச் செலவழிப்பது போன்றே பெண்ணுக்கும் படிப்புக்கு செலவழிக்கின்றனர். இக்காலத்தில் ஆண்களோடு பெண்களும் சம்பாதிக்கின்றனர். ஆயின் திருமண வாழ்வின்போது சீதனம் எனும் கொடிய விஷமே பெண்ணின் வாழ்க்கைக்கு ஆப்பாகிவிடுகிறது. சீதனம் எனும் வலையில் சிக்குண்டு சீரழியும் பெண்களை இனிமேலேனும் சீதன வெறிபிடித்த ஆண்கள் விடுவிக்க மாட்டார்களா?

கே.எல். ஹில்மி, சாய்ந்தமருது.

எங்கே செல்கின்றன நமது பாதைகள்

விடத்தல் தீவு றுஸ்தா அங்கம் 8

இன்று வடக்கு கிழக்குத் தொடங்கி தென்பகுதி மலையகம் எங்கும் கிறிஸ்தவ பிரசாரம் அதிகரித்துப் போனதும் ஆசை வார்த்தைகள் கொண்டு ஏழை எளியவர்களை மனம் மாற்றி கவர்ந்திழுப்பதும் மிகவும் வேதனை மிகுந்த செயற்பாடாகவே காண முடிகிறது. இதற்காக இரவு பகலாக குழுக்கள் குழுக்களாக செயற்படுவதையும் காணவும் முடிகிறது.

வடக்கு கிழக்கை தமது உயிரினும் மேலாய் நேசிக்கும் நெஞ்சங்களும் இன்றைய நிலைமையை கவனித்தல் நலமே.

இப்படிப்பட்ட மேலாதிக்கம் கொண்ட அந்நிய திணிப்புக்கள் கூட வடபுல முஸ்லிம்களின் வளியேற்றத்துக்கு காரணமாய் இருந்திருக்கலாம். இப்படி பலாத்கார சாதகமான அனுகூல வாய்ப்புக்கள் பெற்று வளர்ந்து வருகிறதென்றால் இந்த மக்கள் இப்பொழுது மிகத் தெளிவான காலகட்டத்தில் மிகவும் சரியான பாதையை தேர்ந்தெடுக்கும் விசயத்தில் எவ்விதம் வெற்றி பெறலாம் என்பதையும் பிறகு ஆராய்வோம்.

இங்கே தமிழ்தேசியத்தின் போராட்டகால சகல வரலாறுகளையும், அதி உச்ச

வடக்கு முஸ்லிம்களின் துன்பம் கலந்த வாழ்க்கை

மதிப்புக்குரிய இந்து கலாசார அமைச்சர் திரு. மகேஸ்வரன் அவர்கள் கட்டாய மதமாற்றத்தில் ஈடுபடுவோர்க்கு எதிராக சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் கொண்டுவர இருப்பதையும், அது அமுல்படுத்தப்படுகின்ற கஷ்டமான நிலைமையையும் நாங்கள் நன்றே அறிகிறோம்.

இதுபோன்று இன்னுமொரு விடயத்தையும் கவனிக்க கடமைப்பட்டிருக்கிறோம். போர் நடந்த காலமாக இருந்தால் என்ன சமாதான காலகட்டமாக இருந்தால் என்ன எந்த முஸ்லிம் சமய சமூக பெரியார்களிடமோ அல்லது இந்து மதபெரியார்களிடமோ எந்தவித அவர்களின் பரந்துபட்ட கருத்துக்களையும் ஆளுமைகளையும் கேட்டதாகவோ, அல்லது அப்படி கேட்கப்பட்டிருப்பின் அதை வெற்றிகரமாய் அமுலாக்கியதாகவோ அதை சரியாக செய்திருப்பதாகவோ தகவல்கள் இல்லை. ஆனால், கிறிஸ்தவ பாதிரிகளே முழுக்க முழுக்க ஆதிக்க சக்திகளாக மாறிய போக்கானது இதன் வேர்களையும் பக்கபலமாய் அமைத்திருக்கின்றன. உறவுதளங்களையும் சிந்தித்தல் நமக்கு நன்றே என கருதுகிறோம்.

இன்றைய வடக்கு கிழக்கு புனர்வாழ்வு அமைச்சு எதற்காக சிங்கள மொழியை தாய் மொழியாகக் கொண்ட கிறிஸ்தவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அவர் வடக்கு கிழக்கில் வடிந்த குருதியின் நிறத்துக்கு எந்தவிதத்திலாவது சொந்தம் கொண்டாட உரித்துடையவரா? இல்லை. இங்கே மறத்தமிழர்களாய் வாழ்பவர்களும்,

மதஉணர்வு கொண்டு அன்றைய நாட்களில் உதவிக்கரம் என்ற போர்வையில் இடம்பெயர்ந்தவர்கள் தற்காலிகமாக தங்கியிருந்த இடங்களின் மீதும் இவர்கள் சுற்ற நினைத்ததையும் நினைத்துப் பார்க்கிறோம்.

கலாசார பாரம்பரியமும், வாழ்வியல் பின்னணிகளையும் கொண்டதுமான வடக்கு இஸ்லாமியர்கள் ஒரு நாளும் இறை கட்டளையையும், முகம்மது நபி (ஸல்) அவர்களுடைய நற்போதனைகளையும், இஸ்லாமிய மார்க்கப் பெரியார்களின் கட்டுப்பாடுகளையும் மீறி நடந்ததை சரித்திரத்திலேயே காணமுடியாது. இதுவே மலர்ந்து உலகெல்லாம் வியாபித்த சன்மார்க்க மார்க்கத்திலுள்ளோரின் கடப்பாடுமாகும்.

இந்த கடப்பாடே வடபுல முஸ்லிம்களை ஆயுதமுனைப் போராட்டத்துக்கு தள்ளாமல் சாத்வீகமான போராட்டத்தில் இறக்கியிருக்கிறது. இது எந்தளவிற்கு இழப்புக்களையும், சோகங்களையும் எவ்வாறு தேசிய அரசு சிங்களம் மட்டுமென்ற வாதத்தோடு தமிழர் போராட்டத்தை நசுக்கியதோ, தமிழர்களின் தனித்துவமான அடையாளங்களை வாழ்வியல் ஆதாரங்களையும் எவ்வாறு சிதைத்தனரோ, பாசிச கரம் கொண்டு எவ்வாறு அடக்கியாண்டார்களோ அதே கருத்தியலோடுதான் அதே பார்வையோடுதான் இன்று நடந்தேறும் போராட்ட வடிவங்கள் அப்பாவி முஸ்லிம்கள் மீது கட்டுக்கடங்காது நடந்தேறி வருகிறது.

தற்செயலாகவோ, சடுதியாகவோ இவைகள் நடந்தேறியதாக கருதிவிட முடியாது. பாவப்பட்ட ஜென்மங்களாக, ஒவ்வொரு கிராமங்கள் தோறும் நடந்தேறிய இழப்புக்கள், விரட்டி அடிப்புக்கள் சொத்தழிப்புக்கள் எதற்காய் நடத்தப்பட்டன? ஆம் இதைத் தானே அன்று சிங்கள சக்திகள் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து இரும்புப் பிடி ஆட்சி புரிந்தனர்.

சிங்களத் தேசியம் தமிழ் தேசியத்தின் மீதும் தமிழ்தேசியம் முஸ்லிம் தேசியத்தின் மீதும் கட்டவிழ்த்த சோகங்களின் எதிரொலிதான் இந்நாட்டில் தலைவிரித்தாடிய கொடுமைகள்.

(இன்னும் வரும்)

வாசகர் கவனத்திற்கு

முஸ்லிம் குரலின்
1-15 இதழ்கள் தேவைப்படுவோர்,
ரூபா. 200/- க்கான காசுக்கட்டளை/காசோலை
அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

எமது மண்ணில் நடந்த உண்மைக் கதை!

கடந்த 09.09.2003 இல் வெளியான முஸ்லிம் குரலிலே "எத்தனை காலந்தான் ஏமாற்றுவார்" என்ற சிறப்புமிகு சிறுகதை ஒன்றை "துல் கானைண்" என்பவர் எழுதியிருந்தார். இது மூதூரிலே நடந்த உண்மைச் சம்பவத்தை அப்படியே அச்சொட்டாக எடுத்துத் தீட்டிய கதாசிரியர் பற்பல நுட்பத்தைக் கையாண்டதைப் படித்த போது எனக்கும் சில ஆளுமைகள் தோன்றியன.

இவ்வாறான தரங்கொண்ட படைப்பைச் சுமந்து வந்த எம் முஸ்லிம் குரலுக்கு படைப்பளிக்கும் பல்லாயிரங்கோடி சிகரப் பாராட்டுக்களை மூதூர் மக்கள் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்

அ.கா.மு.றிஸ்வின், மூதூர்.

ஒருவர் ஒரு கருத்தை சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா?

நாம் எழுதுவதற்கும், நமது மக்களுக்குள் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கும் விவாதங்களைத் தொடங்கவும், தொடரவும் தயாராகவுள்ளோம்! உங்கள் கருத்துக்களை சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்!

பிரதம ஆசிரியர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிங்களவர், முஸ்லிம்களைக் குடியேற்றியதே கிழக்கில் தமிழர்கள் சிறுபான்மையினராகக் காரணம்

ஸ்ரீ.ல.மு. காங்கிரஸாரின் வேண்டுகோள் பற்றி புலிகள் இயக்கத்தினரின் அனுகுமுறை எப்படிப்பட்டதாக இருக்கும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பா.உ. டெலோ இயக்கத்தின் பிரதித் தலைவரான எம்.கே. சிவாஜிலிங்கம் அவர்களிடம் லங்காதீப பத்திரிகையால் கேட்கப்பட்ட கேள்விகளும், அவரது பதில்களும் கீழே தரப்படுகின்றன.

கேள்வி : தற்போது முஸ்லிம் பொலிஸ் அதிகாரிகள் சேர்த்துக்கொள்ளப்படுவதை நீங்கள் எதிர்ப்பது ஏன்? நாம் இது பற்றி பிரதமருடன் உரையாடினோம். தற்போது சேர்த்துக் கொள்ளப்படுபவர்கள் முஸ்லிம் பொலிஸ் அதிகாரிகள் அல்ல என்று உரையாடலின் போது ரஊவ் ஹக்கீம் தெரிவித்தார். பிரதமரும் அதையே கூறினார். தற்போது பொலிசில் 12000 வெற்றிடங்கள் உள்ளன. நிதிப் பற்றாக்குறை காரணமாக 1500 பேர்களை மட்டும் நியமிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அதன்படி கிழக்கு மாகாணத்திற்கு 550 பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவார்கள். தனியே முஸ்லிம்கள் மட்டுமல்ல என்றும் கூறினார்.

கேள்வி : பொலிஸ் துறைக்கு ஆட்களை சேர்ப்பதையிட்டு நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்?

நாம் அதை எதிர்ப்பதற்கு வேறு காரணம் உள்ளது. முஸ்லிம்கள் கொல்லப்பட்டதைப்போன்று முஸ்லிம் ஊர்க்காவல் படையினரால் நூற்றுக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். இவ்வாறான நிகழ்வுகள் மீண்டும் ஏற்படக்கூடாது. ஆகவேதான் நாம் எதிர்க்கின்றோம். இதுபோன்ற குழப்பங்கள் ஏற்படுகின்ற இடங்களில் சேவை புரிய பெரும்பான்மை சிங்களவர்களைக் கொண்ட குழப்பங்களை கட்டுப்படுத்தும் பிரிவொன்றை நிறுவுமாறு நாம் வேண்டினோம். அப்போது அவர்கள் தமிழர்-முஸ்லிம்கள் என்று பாரபட்சம் காட்டாமல் நியாயமான முறையில் செயற்படுவர்.

கேள்வி : கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்காக தனியான இடைக்கால நிர்வாகமொன்றை மு.கா. வேண்டுகின்றது. அதனை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? அனுமதிப்பீர்களா?

அதனை நாம் அனுமதிக்க மாட்டோம். வடக்கு கிழக்கில் ஒரேயொரு இடைக்கால நிர்வாகமே இருக்க வேண்டும். அவர்கள் கோரும் இடைக்கால நிர்வாகத்தின் மூலம்

சிவாஜிலிங்கம் கூறுகிறார்

சிங்கள-முஸ்லிம்களின் உரிமைகளை பாதுகாக்க முடியாது என்பதே எமது கருத்தாகும்.

கேள்வி : கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனியலகொன்றை வழங்குவதை புலிகளும் எதிர்க்கின்றார்களா?

அக்காலத்தில் அடக்கு முறையைப் பயன்படுத்தி சிங்களவர்-முஸ்லிம்கள் ஆகியோரை குடியேற்றியமையே தற்போது கிழக்கில் தமிழர்கள் சிறுபான்மையினராக ஆக காரணமாக அமைந்தது. அவர்களுக்கு தனி மாகாணமோ, இடைக்கால நிர்வாகமோ வழங்க புலிகள் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை. முஸ்லிம்கள் அம்பாறை மாவட்டத்தில் செறிந்து வாழ்வதனால் அவர்களுக்கு தனியானதொரு அலகை வழங்கும் பட்சத்தில் நுவரெலியாவில் உள்ள தமிழர்களும் அது போன்றதொன்றைக் கேட்பார்கள். அத்தகையவை நடைபெற இடமளிக்க முடியாது.

அச்சாரம்

எழுதுவது- லைலா அஷ்ராவி

இம்முறை ஒரு கவிதையுடன் உங்களைச் சந்திக்கின்றேன். பலஸ்தீனில் இஸ்ரவேலர்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் "ஷஹாதத்" தாக்குதல்களில் அண்மைக்காலத்தில் இளம் பெண்களும் ஈடுபட்டிருந்ததை நீங்கள் அறிவீர்கள். அவ்வாறான ஒரு போராளியின் தாயின் குரலாக ஒலிக்கிறது இக்கவிதை.

ஒரு தாயின் பாடல்

ஏன் மகளே
வெடித்துப் போனாய்?

எல்லோரதும் தாயைப்
போலத்தானே
என் ஆசைகளும் - மிக மிக
எளிமையானவை, இனிமையானவை
உன் திருமணத்தில் சந்தோசித்துப்
பாடியிருக்கவும்.
உன் மழலைகளை என் கைகளில்
சுமக்கவும்.
உனக்கும், உன் கணவனுக்கும்
என் பேரர்களுக்கும், அவர்களது
பிள்ளைகளுக்குமாய்
உரித்தான பூமியில்
உழுது விதைக்கிற உங்களுக்கு
உதவுவதுமானதும்தானே
என் இதயத்து ஆசைகள்..
மிகச் சாதாரண ஆசைகளும்
நிறைவேறாதா மகளே..
இருக்கட்டும் என் ஆசைகள்
ஆசிர்வதிக்கட்டும் அல்லாஹ்
உன்னை.

என் மகளே..
அமைதியாய் வாழ முடியாததாயிற்றா
இப்பூமி உனக்கு?
வாழ்வுக்கும் சாவுக்குமான தெரிவில்
வாழ்வை ஏன் மறந்தாய் கண்ணே..?

துகள் துகளாய் வெடித்துச் சிதறவும்
நடைபாதைகளில் சிதறிக்கிடக்கவும்.
ஒரு நகரசுத்தித் தொழிலாளியால்
பெரும் அசுத்தக் கழிவுகளைப் போல
சுத்தமாக்கப்படவுமானதுதானா
உனதும், உன் போன்றதும்
அழகுகள்?

என் பாட்டனாரின் நிலத்தின்
பின்புறத்துத் தோட்டத்தில் வளர்கிற
ஓர் ஒலிவ் மரத்தைப் போல
நான் பார்த்திருக்க நீ வளர்ந்தாய்
கண்ணே... ஆனால்
உனக்குத் தெரியாது.
நீ பிறக்க முன்னமே அவர்கள்,
அந்த மரத்தை வெட்டிச்
சாய்த்ததுவும்,
நிர்மூலமாக்கிய
வீட்டின் எச்சங்களால்
தோட்டத்தை நிறைத்து
மறைத்ததுவும்,
எம் ஊரை நாசமாக்கி
எம் பூமியைக் கொள்ளையிட்டதுவும்.
உனக்குத் தெரியாது தான்
கண்ணே..

முஸ்லிம் கிராமத்தை சிங்களக் கிராமமாக்க முஸ்லிம் தலைமையின் அங்கீகாரம்?

- மூதூர் செய்தியாளர் -

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள "வானாறு" என்றழைக்கப்படும் முஸ்லிம் கிராமத்தின் பெயரை "பந்துலுபுர" என்று மாற்றுவதற்கு எடுக்கப்படும் முயற்சியைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கை ஸ்ரீலங்கா முஸ்லிம் ஆசிரியர் காங்கிரஸின் திருகோணமலை மாவட்டக் கிளையினால் அதன் செயலாளர் ஏ.சி.எம் முஸ்இல் மூலம் அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, "கடந்த ஜூலை மாதம் நடந்த மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தின்போது ஓய்வு பெற்றுச் செல்லும் அரச அதிபர் நெலும்தெனியாவிற்கு கைலாகு கொடுத்து அனைவரும் பிரியாவிடை வழங்கிக் கொண்டிருந்த சமயத்தில், பாராளுமன்ற உறுப்பினர் குணவர்த்தன பெயர் மாற்ற யோசனையைத் தெரிவித்தார். அவ்வளவுதான். அதன் பின்னர் அது தீர்மானமாக நிறைவேற்றப்படவில்லை. அதன் பின்னர் ஆகஸ்ட் மாதம் நடந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அவ்வாறான பிரேரணை ஒன்று நிறைவேற்றப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினேன்" என்று திருமலை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினரும், ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர்களுள் ஒருவருமான கே.எம். திடீர் தௌபீக் தெரிவித்துள்ளார்.

கிண்ணியா பிரதேசத்தின் முக்கிய முஸ்லிம் கிராமம் "வானாறு". கிண்ணியா நகரிலிருந்து தென்மேற்கு 16 கிலே மீற்றர் தொலைவில் அமைந்துள்ள இக்கிராமத்தில் 2 முஸ்லிம் பாடசாலைகள், 4 பள்ளிவாசல்கள் இருக்கின்றன. அருகில் சிங்கள மக்கள் வாழ்ந்து வருவதால் படிப்படியாக இது வான்எல என்று அழைக்கப்படுகிறது.

ஜூலை 30இல் நடைபெற்ற மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் "வானாறு" என்ற பெயரை "பந்துலுபுர" குடியேற்றப்பகுதி என்று மாற்றுப் பிரேரணை தீர்மானிக்கப்பட்டு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே இக்கிராம முஸ்லிம்கள் பெரும்பான்மை இனத்தவரின் பல்வேறு நெருக்கடிகளுக்கு இலக்காகிவரும் இச்சந்தர்ப்பத்தில் இந்தப்பெயர் மாற்றப் பிரேரணை - தீர்மானம் என்பன காலக்கிரமத்தில் முஸ்லிம்களின் பூர்வீகத் தை மறைப்பதற்கு எடுக்கப்பட்ட திட்டமிடப்பட்ட நடவடிக்கையாகும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தமிழ் பேசும் எம்பிக்கள் இருவரும் சிங்களம் பேசும் எம்.பி ஒருவரும் 49 தமிழ், முஸ்லிம் அதிகாரிகளும், சிங்களம் பேசும் 21 அதிகாரிகளும் வெளிநாட்டவர் இருவரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஆனால் பெயர்மாற்றம் நடைபெறத்தான் போகிறது.

வரி செலுத்தாதவர்களுக்கு இனி பொதுமன்னிப்பு இல்லை!

இதுவரை வரி செலுத்தாது ஏமாற்ற முயற்சித்த 20,000 பேர் இப்போது வரிசெலுத்த முன்வந்துள்ளனர். 31.08.2003 உடன் முடிவடைந்த வரி மன்னிப்புத் திட்டத்தின் விளைவே இதுவென நிதியமைச்சு தெரிவிக்கின்றது

மேலும் நாட்டில் அதிகம் பேர் சட்டத்தின் பிடியில் சிக்காது இருக்கின்றனர். இத்தகைய வரியிறுப்பாளர்களை இனம்கண்டு வரிச்செலுத்துகைக்கு அரசு நிர்ப்பந்திக்கும்போது வரிசெலுத்துவோர் தொகை அதிகரிக்கும். இதனால் சாதாரண பொதுமக்களுக்குப் பழுவேற்படுத்தக்கூடிய வரிகளை அகற்ற அல்லது குறைக்க முடியும். இனிமேல் இத்தகைய மன்னிப்பு அளிக்கப் படமாட்டாது என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

முதன் முதலாக மாணவன் ஒருவனுக்கு மரண தண்டனை!

காதல் விவகாரம் விரக்தியாகி கொலையில் முடிவடைந்தது. மாணவி துல்மினியைக் கொலை செய்த மாணவன் ஜயதிலகவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. தான் நிரபராதி என்கிறார் குற்றவாளி.

இரத்தினபுரி. கிரியெல்ல மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற துல்மினி இரேஷிகாவை 2002.05.20. தேதியன்று பாடசாலையினுள் கத்தியால் குத்திக் கொலை செய்தமைக்காக அதே பாடசாலை மாணவன் கே.எச். ஜயதிலக எனும் மாணவனுக்கு 2003.09.03ம் தேதியன்று இரத்தினபுரி உயர்நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

முஸ்லிம் குரலில் விளம்பரம் செய்து

நமது பத்திரிகை வளர்ச்சிக்கு உதவுங்கள்

தொடர்புக்கு

விளம்பர முகாமையாளர் - முஸ்லிம் குரல்

181/1 Maligakanda Road
(White Park) - Colombo 10 - Phone : 0777 389127

முஸ்லிம் குரல் சுவடு 19

12 செப்டம்பர் 2003 Muslim Kural صوت المسلم முஸ்லிம் குரல் 15 றஜப் - 1424

181/1, Maligakanda Road, (White Park) Colombo - 10. Tel: 0777-389127, Fax: 01-665831, E-mail: mm-s@eol.lk

தலைவரின் மர்மம் நிறைந்த மறைவு மக்கள் நீதி மன்றத்தின் முன் முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் தலைமைகள்

மூன்று வருடங்கள் ஓடோடிக் கடந்து விட்டன. தலைவரின் மரணம் தொடர்பான மர்மம் இருள் நிறைந்ததாகவே உள்ளது. இம்மரணம் மிகப்பெரும் அரசியல் சதியின் காரணமாகவே நடைபெற்றுள்ளது என்பதில் யாருக்கும் எள்ளளவும் சந்தேகமில்லை - ஏனெனில் அம்மரணம் நிகழ்ந்த காலம் தேர்தலுக்கு திகதி குறிப்பிட்ட காலமாக இருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியா, பொது முன்னணியா ஆட்சிபீடமேறுவது என்கிற அரசியல் யுத்தத்தின் உச்சகாலகட்டம் அது!

ஆட்சிக் கட்டிலில் யார் ஏறுவது என்பதை தீர்மானிக்கும் பிரதான அரசியல் சக்தியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அதன் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களும் இருந்தார் - இக்காலப்பகுதியில் சந்திரிக்காவுடன் அவருக்கு அரசியல் முரண்பாடுகள் வெடிக்கத் தொடங்கின - ஆனாலும் ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சி பீடமேற்றுவதை மிக வெளிப்படையாகவே மறைந்த தலைவர் நிராகரித்திருந்தார். ரணில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருக்கும் வரை, முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒரு போதும் கூட்டுச் சேராது என தனது கட்சியின் கொள்கை நிலைப்பாட்டையும் அப்போது பகிரங்கப்படுத்தி இருந்தார்.

தேர்தல் வேகத்தில் நாடு பரபரப்பாக இருக்கும் போதே - அரசியல் பிரச்சார நோக்கத்திற்காக இலங்கை விமானப்படையின் விமானத்தில் அம்பாரைக்கு செல்லும் போது தலைவரின் மரணம் பேரிழப்பாக முஸ்லிம் சமூகத்துக்கு நிகழ்ந்தது. இம்மரணம் தொடர்பாக சந்திரிக்காவின் அரசாங்கத்தின் மீதே மக்களின் சந்தேகப்பார்வை அன்று அதிகம் குவிந்தது - தலைவரின் மரணத்தை அடுத்து நடந்த தேர்தலிலும் சந்திரிக்காவே ஆட்சி பீடம் ஏறினார். ஒரு வருடத்துக்குள் சந்திரிக்காவின் ஆட்சியை முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளே கவிழ்த்து - அடுத்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சி பீடம் ஏற்றினர். அப்போது கூறப்பட்ட நியாயங்களில் ஒன்று - தலைவரின் மரணம் தொடர்பாக சந்திரிகா நீதி விசாரனை நடத்தவில்லை - என்பதாக இருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை பதவிக்கு கொண்டு வந்து தலைவரின் மரணம் மீதான மர்மத்தை துவங்கப் போகிறோம் என அப்போது மார் தட்டப்பட்டது - ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்களை எட்டப் போகிறது. தலைவரின் மரணத்தை வைத்து அதிகாரத்தை கைப்பற்றியவர்கள் இரண்டு வருடகாலமாக தலைவரையே வசதியாக மறந்து விட்டனர் என்பதை இக்கால இடைவெளி நமது மக்களுக்கு நிரூபித்திருக்கின்றது.

மறைந்த மாபெரும் தலைவரின் மரணத்தின் முன், நமது அரசியல் தலைவர்கள் -மக்கள் நீதி மன்றத்தின் முன் இப்போது குற்றவாளிகளாக நிறுத்தப்பட்டிருக்கின்றனர். இந்த விடயத்தில் இருந்து எமது தலைவர்கள் தப்பியோடவே முடியாது. - தீர்ப்பை எழுதுவது நமது மக்களின் கைகளில்தான் உள்ளது.

தோழமையுடன்
பிரதம ஆசிரியர்

10.08.2001 இல் கல்முனை நகர மண்டபத்திற்கு முன்னால் நடைபெற்ற கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றஊப் ஹக்கீம் என்ன பேசினார்?

"தலைவர் அஷ்ரஃபின் மரணத்தின் பின்னணியிலே நடந்த பல விடயங்கள் இன்னும் பகிரங்கமாகச் சொல்லப்படாத விடயங்களாகவே இருக்கின்றன. அப்படியான பல விடயங்கள் எங்களுக்கு கிடைத்துக் கொண்டிருக்கின்றன. பலர் நேரில் வந்தும் எங்களிடம் சொல்கிறார்கள். எழுதியும் தருகிறார்கள். கறுப்புப்பெட்டி கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அது ஒரு ஆட்டோவில் கொண்டு செல்லப்பட்டதாகவும் எங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது.

மறைந்த தலைவருக்கு என்ன நடந்தது என்பதை நாம் பார்க்க வேண்டும். மறைந்த தலைவரோடு கடைசி மணித்தியாலயங்களில் இருந்த பலர் உள்ளனர். பலவிதமான திடுக்கிடும் தகவல்களை அவர்கள் சொல்கிறார்கள்.

விசாரணை முடிவுவரும்வரை பொறுமையாக இருந்து இந்த விடயங்களை வெளியிடலாம் என உத்தேசித்திருக்கிறேன் என்றார் ஹக்கீம்.

04.10.2000 இல் சாய்ந்தமருது ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்க என்ன பேசினார்?

இந்நாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைத்தபின் மர்ஹூம் அஷ்ரஃபின் அகால மரணம் குறித்து நாங்கள் ஒரு பூரண விசாரணை நடத்துவோம். இதற்கென அமைக்கப்படும் விசாரணைக்குழுவில் மர்ஹூம் அஷ்ரஃபின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரையும் நியமிப்போம்.

அமைச்சர் அஷ்ரஃபின் மரணத்தில் சந்தேசம் எழும்போது இம் மரணத்தின் காரணம் என்ன? இதன் பின்னணி என்ன? இவற்றையெல்லாம் நாட்டு மக்கள் அறிந்துகொள்ள வேண்டும். நானும் அஷ்ரஃபும் அரசியலில் வேறுபட்டிருந்தாலும், அவரும் நானும் நல்ல நண்பர்கள். குறைந்த பட்சம் ஒரு நண்பர் என்ற முறையிலாவது விசாரணைக்குழுவை நியமித்து உண்மையை கண்டறிய வேண்டிய கடப்பாடு எனக்குண்டு என்றார் ரணில்.

ஈராக்கிலுள்ள வெளிநாட்டுப் படை வீரர்கள் திரும்பிச் செல்ல அதிகளவில் ஆர்வம்!

ஈராக்கிலுள்ள அமெரிக்க இராணுவ வீரர்களுள் பெரும்பாலானோரின் தேவை, கூடிய விரைவில் தங்கள் நாட்டுக்குப் போவதே. அண்மையில் அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் டொனல்ட் ரம்ஸ்பீல்ட் ஈராக்குக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது இது பற்றி அவரிடம் தெரிவிப்பதற்கு முயன்ற போதும் அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை "நாம் மீண்டும் எமது தாய் நாட்டுக்குத் திரும்பும் தினத்தை அவரிடமிருந்து அறிந்து கொள்ளவே ஆவலாக இருந்தோம்" என்று றூக்ரெமன் எனும் அமெரிக்க சிப்பாய் தெரிவித்தார்.

தொடர்ந்து ஈராக்கில் பணிபுரிவதையிட்டு படையினர் மத்தியில் பெரும் அதிருப்தி நிலவி வருகிறது. தண்டனை பெற நேரும் என்ற அச்சத்தினால் அவர்கள் வாய் மூடி மௌனம் காக்கின்றனர்.

இப்பத்திரிகை 181/1, ஆனந்தா மாவத்தை, கொழும்பு 10 முஸ்லிம் குரல் முகாமையாளர் இனால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org